
# திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"


12 JUL



ஸ்ரீ மீனாட்சியம்மை, மதுரை.

மாலை 11] சௌமிய - சித்திரை - மே 1969 [மணி 8

தமிழ் நாடு அரசின் அறநிலைய



வளையமாதேவி ஸ்ரீ வேதநாராயணப் பெருமாள் கோயிலில், காஞ்சி காமகோடிபீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்களின் அருளாணையின்படி நடைபெற்ற அகண்ட ராம நாம கீர்த்தனம் *(29—3—69)*.

## பொருளடக்கம்


1. திருவள்ளுவர் விளக்கும் தெய்வச் செந்நெறி
2. திருவள்ளுவம்
3. ஞானமிர்தம்
4. திருக்குறள் மாட்சி
5. திருக்குறளில் ஓர் ஐய விளக்கம்
6. திருக்குறளும் ஞானிகளும்
7. "உறவு ஆர் உளர்?"
8. மகாபாரதம்
9. தலைமைக் கவிதை
10. கல்வெட்டில் தேவாரம்


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்


**ஆண்டுச் சந்தா ரூ. 10/-** | **தனி இதழ் விலை ரூ. ஒன்று**

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.




12 JUL 1973

மாலை 11] சௌமிய - சித்திரை - மே, 1969 [ மணி 8

# திருவள்ளுவர் விளக்கும் தெய்வச் செந்நெறி

**முன்னுரை :**

திருவள்ளுவர் தமிழகத்தில் தோன்றியருளிய சான்றோர்கள் பலருள்ளும் தலை சிறந்த ஒருவராவர். திருவள்ளுவர் அருளிச் செய்த திருக்குறளின் கருத்துக்களையும் சொற்பொருள்களையும் அவருக்குப் பின்னர் வந்த சான்றோர்கள் அனைவருமே, மிகவும் வியந்து போற்றி உவந்து தழுவிக் கொண்டுள்ளனர். அருளியற் சான்றோர்களாகிய ஆழ்வார்களும் நாயன்மார்களும் கூட, திருவள்ளுவரின் கருத்துக்களை ஆங்காங்குத் தத்தம் பாடல்களில் எடுத்துப் போற்றியுள்ளனர்.

திருவள்ளுவர் சிறந்த கவிஞர்; ஒப்புயர்வற்ற நீதி நூல் ஆசிரியர்; மிகச் சிறந்த தத்துவ ஞானி; இலக்கியப் பேராசிரியர், அரசியல் அறிஞர்; பொருளியல் மேதை; பல்கலைக் குரிசில்; உலகுக்கே ஒரு பெரும் வழிகாட்டி! காலமும் இடமும் கடந்து சாலவும் நிலைபெற்று, ஞாலமே புகழ்ந்து வியக்கும் திருக்குறள் என்னும் செந்தமிழ்ப் பெருநூலை இயற்றி அளித்த பெருவள்ளல் அவர்! பழமைக்குப் பழமையாகவும், புதுமைக்குப் புதுமையாகவும் அவர்தம் அருளுரைகள் அமைந்து பொலிந்து விளங்குகின்றன.

உலகப் பெரும் சமயத் தலைவர்களும், சான்றோர்களும் கூறியுள்ள சிறந்த கருத்துக்கள் எல்லாம், திருக்குறளில் செறிந்து கிடக்கக் காண்கிறோம். திருவள்ளுவர் எல்லாச் சமயத்தவரும் உவந்து ஏற்றுக் கொள்ளும் வகையில், உயர்வற உயர்ந்த உண்மைகளை, நடுநிலை பிறழாமல் நன்கினிது சுவைமிக விளக்கியருளுகின்றார். அவர்தம் நூல் நவில்தொறும் நயம் பயக்கின்றது; தொட்டனைத் தூறும் மணற்கேணி போலக் கற்றனைத் தூறும் நற்கருத்துக்களை உடையதாக மிளிர்கின்றது. ஒரு நாடு—ஒரு காலம்—ஒரு மொழி—ஓர் இனம் என்பனவற்றிற்கே உரியதாகி விடாமல், எல்லாக் காலமும், நாடும் மொழியும் இனமும் ஆகியவற்றைச் சேர்ந்த மக்

கள் அனைவருக்குமே உரிய, மாபெரும் பொது மறைநூலாகத் திருக்குறள் திகழ்கின்றது.

வாழ்க்கையின் ஒவ்வொரு கூறுபற்றியே நூல்கள் எல்லாம் பொதுவாக விளக்கும். வாழ்க்கையின் பலதிறக் கூறுகளையும் முழுவதாக ஒருசேர, முன்னொடுபின் முரண்படாமல் விளக்கும் திறனில், திருக்குறளுக்கு இணையாக ஒரு நூலும் இல்லை எனத் துணிந்து கூறலாம். இல்லறத்தான், துறவறத்தான், அரசன், அமைச்சன், நண்பன், பகைவன், போர்வீரன், கற்றோன், கல்லாதான், கள்ளுண்பான், சூதாடுவான், இரவலன், புரவலன், உழவன், வணிகன், ஆண் பெண் முதலிய அனைவர்க்குமே அறிவுரைகள் கூறும் அரும்பெறற் சமுதாயப் பெருநூலாகத் திருக்குறள் சிறந்து திகழ்கின்றது. அறம் பொருள் இன்பம் என்னும் முப்பெருந் தலைப்பில், எப்பெரும் பொருளையும் உள்ளடக்கிக் குறைவிலா நிறைவாய் விளக்கும் துறையில், தெய்வப் புலவர் திருவள்ளுவருக்கு நிகராவார் எவருமே இலர்!

இத்தகைய ஆசிரியர் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளை, நாம் பல துறைகளிலும் ஆராய்ந்துணரும் கடப்பாடு உடையவர்கள் ஆவோம். ஆதலின், அவர் கடைப்பிடித்த சமயக் கொள்கைகள் யாவை? என ஆராய்ந்தறிய முற்படுதல், நம்மனோர்க்கு மிகவும் நலம் பயப்பதே யாகும்.

திருவள்ளுவர் தமது சமயத்தைச் சார்ந்தவரே என்றும், திருக்குறள் தமக்கே சிறப்பாக உரிய நூல் என்றும், பல்வேறு சமயத்தவரும் உரிமை கொண்டாடிவருகின்றனர். ஆனால், அவரோ, தமது நூலின்கண் எந்தச் சமயம் பற்றியும் குறிப்பாகவேனும் கிளந்து கூறக் காண்கிலேம். எந்த ஒரு சமயத்தையும் சாராமல், எல்லாவற்றிற்கும் பொதுவான அடிப்படைக் கொள்கைகளை மட்டுமே, அவர் கூறிச் செல்லக் காண்கின்றோம்.

இந்நாளில் நம் இந்திய நாட்டில் எத்தனையோ பல சமயங்களும், சமயக் கோட்பாடுகளும், அவற்றிற்குரிய ஒழுகலாறுகளும் நிலவி வருகின்றன. திருவள்ளுவர் இவற்றுள் ஏதேனும் ஒன்றனையே சார்ந்தவராகத் தெரியவில்லை. திருவள்ளுவரின் காலத்தில், இந்நாளைய சமயங்களும் சமயக் கோட்பாடுகளும், ஒழுகலாறுகளும் இருந்தன என்று கூறுதற்குரிய சான்றுகள் ஏதும் இல்லை. இவைகள் யாவும் திருவள்ளுவருக்குப் பின்னரே நாளடைவில் காலப் போக்கில் படிமுறையே வளரலுற்றன என்று தெரிகின்றது.

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டிருந்த சமயநிலையும், இப்போது உள்ள சமயங்களின் நிலையும் தம்முள் ஒரு தன்மையுடையன அல்ல. உலக இயற்கைப் பொருள்களெல்லாம், காலந்தோறும் வேறுபட்டுச் செல்லுதல் போலவே, சமயங்களும் காலநிலைக்கு ஏற்ப வெவ்வேறு வகையில் வேறுபட்டுச் செல்லும் தன்மை வாய்ந்தவை. ஆதலின், இக்காலத்தில் உள்ள சமயங்களுள் ஒன்றன்பால்வைத்துத் திருவள்ளுவரின் சமயம் இதுவே என்று முடிவுகட்டித் துணிந்துரைத்தல் சாலாது.

எனவே திருவள்ளுவர் இயற்றியருளிய திருக்குறளின்கண் ஆங்காங்கே வரும் நுண்ணிய அரிய குறிப்புக்களைத் தெள்ளிதின் ஆராய்ந்தே, அவர்தம் சமயச் செந்நெறியின் சால்பினை, நாம் ஒருவாறு அறிதல் கூடும். ஆதலின், அம்முறை பற்றி இங்கு ஒருசில கருத்துக்களை மட்டும், இயன்றவரை முயன்று காண்போம்.

(1) திருவள்ளுவர் கடவுள் ஒருவர் உண்டு என்னும் கொள்கையுடையவராகக் காணப்படுகின்றார். திருக்குறளில் உள்ள 'கடவுள் வாழ்த்து' என்னும் பகுதியால் மட்டுமேயன்றி, வேறு பிறசான்றுகளாலும் இவ்வுண்மை புலனாகின்றது. 'உலகு இயற்றியான்' 'வகுத்தான் வகுத்த வகை' 'உலகத்தார் உண்டு என்பது இல்லென்பான்' 'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை என்று வைக்கப்படும்' எனவரும் குறள்கள் இதனை வலியுறுத்தும்.

(2) கடவுள் ஒருவர் உண்டு என நிறுவும் ஒரு சான்ருகவே, அவர் 'வான் சிறப்பு' என்னும் ஒரு தலைப்பை அமைத் திருப்பதாகத் தெரிகின்றது. 'மாரி வறப் பில் தருவாரும் இல்லை; சிறப்பில் தணிப் பாரும் இல்' என்றபடி, மழை மிகுதியாகப் பெய்தாலும் நம்மால் தடுக்க இயலாது; பெய்யாமலே இருந்துவிட்டாலும் நம்மால் அதனைப் பெய்விக்க முடியாது. கடவுளின் அருளாற்றலை யுணர்த்துவன வற்றுள் மழையும் ஒன்றுஎனத் திருவள்ளுவர் கருது கின்ருர் போலும்.

(3) கடவுளின் உருவம் பற்றித் திரு வள்ளுவர் ஏதும் விவரமாகக் கூறிற்றில ராயினும், கடவுளின் திருவடியைப் பற்றிக் குறிப்பிட்டிருத்தலால், கடவுளுக்கு அருவ மேயன்றி உருவமும் உண்டு எனத் திருவள்ளுவர் கருதுதல் புலனுகின்றது.

(4) 'சிறப்பொடு பூசனை செல்லாது' என்பதனுல், கோயில்களையும், அக்கோ யில்களில் நிகழும் வழிபாடு விழாக்கள் முதலியனவற்றையும், திருவள்ளுவர் உடன்படுதல் காணலாம்.

(5) இறைவனின் அருளினுலும், அவன் வகுத்தருளிய இயற்கை நியதி யாகிய ஒழுங்கு முறையினுலுமே, உலகம் இயங்கி வருகின்றது; உயிர்களெல்லாம் வாழ்ந்து வருகின்றன. 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்பதனைத் திரு-வள்ளுவரும் வற்புறுத்துகின்ருர். 'ஊழ்' என்னும் தலைப்பினை, அறத்துப்பாலுக்கும் பொருட்பாலுக்கும் நடுவில், ஓர் இயலா கவே திருவள்ளுவர் அமைத்து வைத்திருத் தல் இவ்வுண்மையைத் தெளிவிக்கும்.

(6) இறைவனிடம் மட்டுமேயன்றி, அவ னது அருள்பெற்ற சான்ருேர்கள்மாட்டும் திருவள்ளுவர்க்கு மிக்கமதிப்பும் ஈடுபாடும் உள்ளமை, 'நீத்தார் பெருமை' என்னும் தலைப்பால் அறியப்படும். 'நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டிவிடும்' என்னும் குறளால், 'தொண் டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே' என்பதனைத் திருவள்ளுவரும் உடன்படு கின்றனர் எனலாம்.

(7) பொருளையும் இன்பத்தையும் பற்றி மிகமிக விதந்து கூறி விளக்கியபோதி லும், அவை இரண்டும் அறத்தின் வழி யாக வருதல் வேண்டும் என்றும், அறமே அவ்விரண்டினும் மிக்க வலிமை யுடைய தாகும் என்றும், திருவள்ளுவர் மிகவும் வலியுறுத்திக் கூறுகின்ருர். 'அன்பிலதனை அறம்காயும்' 'அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து' என்பன போன்ற குறள்களால், அறத்தையே கடவுள் என்றும்; அற வாழ்வே சமய வாழ்வு என்றும்; அறவோர் ஆகிய அந்தணரே சமயச் சான்ருேர்கள் என்றும், திருவள்ளுவர் குறிப்பிடுகின்ருர் எனலாம்.

(8) 'வானேர்' 'அமரர்' 'இமையார்' 'புத்தேளிர்' 'தேவர்' என்பன போன்ற சொற்களால், முழுமுதற் கடவுளின் வேருக, அவர்தம் அருளைப் பெற்ற தெய்வகணங்கள் ஆகிய தேவர்கள் பலர் உளர் என்பதும், அவர்கள் வாழும் உலகம் வானுலகம் முதலிய பெயர்களால் வழங்கப்படும் என்பதும், புலனுகின்றன.

(9) 'உயிர் உடம்பின் நீக்கியார்' 'உடம்போடு உயிரிடை நட்பு' என்பன போன்ற குறள்களால், உடம்பே உயிர் என்பாரை மறுத்து, உடம்பின் வேருக உயிர் என்பதொன்றுண்டு. உடம்பும் உயி ரும் வெவ்வேறு இயல்புடையன, என்பன போன்ற கருத்துக்களைத் திருவள்ளுவர் உணர்த்துகின்ருர்.

(10) 'எழுமையும் ஏமாப்புடைத்து' 'எழு பிறப்பும் தீயவை தீண்டா' என்னும் குறள்களால், பிறந்த உயிர் மீளப் பிற வாது என்பாரை மறுத்து, உயிர்க்குப் பல பிறவிகள் மாறிமாறிவரும் என உணர்த்து கின்ருர்.

(11) 'இருள்சேர் இருவினை' 'வினைப் பகை வீயாது பின்சென்று அடும்' 'தவமும் தவமுடையார்க்கு ஆகும்' என்பனவற்ருல் நல்வினை தீவினைகளாகிய பாவபுண்ணியங் களையும், அவற்றிற்கேற்ப உயிர்கள் இன்ப துன்பங்களை வழுவாது அடைதலையும், திருவள்ளுவர் தெற்றெனத் திறம்தெரித்து விளக்குகின்ருர்.

(12) ‘மறுமையும் இம்மையும் இன்பம் தரும்’ ‘எழுமையும் தான்புக்கு அழுந்தும் அளறு’ ‘பெறுவர் பெருஞ் சிறப்புப் புத்தேளிர் வாழும் உலகு’ என்னும் குறள்களால் சுவர்க்கம் நரகம்—இம்மைமறுமை ஆகியவற்றையும் திருவள்ளுவர் உடன்படுதல் உணரலாம்.

(13) ‘பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்’ ‘ஊனைக் குறித்த உயிரெல்லாம்’ என்பவற்றால் உயிர்கள் பல என்பதும், ‘மன்னுயிர் எல்லாம் துயிற்றி’ ‘மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்’ என்பவற்றால் உயிர்கள் அழியாத் தன்மைய என்பதும், பிறவும் தெளியப்படும்.

(14) ‘ஆதி பகவன் முதற்றே உலகு’ என்பதனால், கடவுளே உலகம் அன்று, உலகம் வேறு கடவுள் வேறு என்பது தெளிவிக்கப்பெறுகின்றது.

(15) ‘காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன் நாமம்கெடக் கெடும் நோய்’ ‘அவாஎன்ப தவாஅப் பிறப்பீனும் வித்து’ என்பனவற்றால், உயிர்களின் பிறப்பிறப்புகளுக்குக் காரணமாவன பலவும் சுட்டப்பெற்றுள்ளன.

(16) ‘சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்துச் சார்தரா சார்தரும் நோய்’ என்பதனால், உயிர்களைப் பற்றியுள்ள மலமாசுகள் ஆகிய குற்றங்களும், அவைகளினின்று நாம் தப்பியுய்தற்குரிய சரியை கிரியையோக ஞானம் முதலிய பலவகைச் சமய ஒழுகலாற்று முறைகளும், அவற்றைக் கடைப்படித்து ஒழுகுவதனால் உயிர்கள் எய்தும் நலங்களும் குறிப்பிடப்படுகின்றன.

(17) ‘சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற ஐந்தின் வகை தெரிவான்கட்டே யுலகு’ என்னும் குறளால், நிலம் நீர் தீவளி விசும்பு என்னும் இயற்கை முதற் பொருள்களும், அவற்றிற்குக் காரணமான நுண் பொருள்கள், அறிகருவிகள், தொழிற்கருவிகள், அகக்கருவிகள் முதலிய தத்துவ ஆராய்ச்சிச் செய்திகளும், அனுபவங்களும் உண்டு என, உணர்த்தப் பெறுகின்றன.

(18) ‘பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறி’ ‘ஐந்தவித்தான் ஆற்றல்’ என்பனவற்றால், ஒழுக்கநெறியாகிய சமய வாழ்வும், அதனால் விளையும் ஆற்றல் ஆகிய பயனும், பிறவும் தெளியப்படும்.

(19) ‘ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின் வானம் நணிய துடைத்து’ என்னும் குறளால், மெய்யுணர்வு பெற்ற மேலோர்கள் ஆகிய சீவன் முத்தர்கள் (Mystics and Saints) நிலை, செவ்விதின் விளக்கப் பெற்றது.

(19) ‘ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும் எண்ணில் தவத்தான் வரும்’ என்பதனால் தவவாழ்வினால் விளையும் பேராற்றல் விளங்கும்.

(20) ‘உண்ணாமை வேண்டும் புலால்’ ‘அருளாட்சிஆங்கில்லைஊன்தின்பவர்க்கு’ என்பவற்றால், புலால் உண்ணாமை சமய வாழ்விற்கு இன்றியமையாத ஒரு பண்பாதல் வற்புறுத்தப்பட்டது.

(21) இல்லறம் துறவறம் என்னும் இரு வகை நெறியாலும், இறையருளைப் பெறலாம்; இவை இரண்டும் தம்முள் ஒன்றினொன்று முரண்படுவன அல்ல; இல்லற வாழ்வின் வளர்ச்சிப் பயனே துறவறம்; எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்தி நலம் புரியும் பெரும் செயலும் பண்புமே, செந்தண்மை (சீவகாருண்யம்) எனப்படும்.

(22) சமய வாழ்வுக்கு ஒரு ஞானசிரியனின் துணை இன்றியமையாதது. ‘குருவருள் இன்றித் திருவருள் இல்லை.’ அது பற்றியே ‘பற்றுக பற்றற்றான் பற்றினை’ என அறிவுறுத்துகின்றார் திருவள்ளுவர். ‘பற்றற்றான்’ என்னும் சொல், ஞானசிரியனாகிய குருவினைக் குறிப்பதாகும். குருவின் உபதேசமாகிய திருமொழியால், நாம் பெறுதற்குரிய பேற்றினையே, ‘இழுக்கலுடையுழி ஊற்றுக்கோல் அற்றே ஒழுக்கமுடையார் வாய்ச்சொல்’ என்பதனால் திருவள்ளுவர் குறித்தருளினர் எனக் கொள்ளுதலும் பொருந்தும்.

(23) மக்களின் வாழ்க்கையில் சமய ஒழுகலாறு அல்லது கடவுள் வழிபாடு என்பது மிகமிக இன்றியமையாதது. மனக்கவலைகளை மாற்றுதற்குரிய ஒரேவழி,

கடவுளை வழிபடுவதுதான் எனக் கட்டுரைக்கின்றார் திருவள்ளுவர்.

(24) எவ்வுயிர்க்கும் சிறு தீங்கும் செய்யாமல் இருத்தல், சிறந்த சமயநெறிப் பண்பாகும். 'உயிர்க்கு உறுகண் செய்யாமை அற்றே தவத்திற்கு உரு' என்பது திருக்குறள். இதனையே 'மன்னுயிர் ஓம்பி அருளாள்தல்' எனப் பிறிதோர் இடத்தும் சிறப்புறக் கூறுவர் திருவள்ளுவர். சிற்றுயிர்களுக்குத் தீங்கு செய்யாமை மட்டுமன்று, அவைகளுக்கு நலஞ் செய்து பாதுகாத்தலும் இன்றியமையாதது என்பது கருத்து. 'மனத்துக்கண் மாசு இலன்ஆதல்' என்றதும், இத்தகைய உயர்ந்த சமய வாழ்வேயாகும்.

(25) எல்லாப் பொருள்களிலும் இறைவனைக் காண்டல் என்பது, சமய வாழ்வில் மிகமேலான உயர்ந்த சிறந்த பெருநிலை. ஞானிகள் எல்லாப் பொருள்களிலும் கடவுளைக் காண்பார்கள். அவர்களுக்கு எல்லாம் இறைமயமாய், தெய்வவடிவமாகக் காணப்பெறும். இத்தகைய இறையருளனுபவ ஞானப் பெருநிலையையும் திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். 'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்பது திருக்குறள். 'எப்பொருளின்கண்ணும் மெய்ப்பொருளைக் காணப் பெறுவது ஞானம்' என்க.

(27) திருக்குறள் ஒரு நீதி நூல், ஒழுக்க நூல் என்பதனை யாவரும் அறிவர். அவ்வளவில் மட்டுமே, அதன் பெருமை அமைவதன்று. உயரிய நீதிகளையும் ஒழுக்கங்களையும் புத்தர்பெருமானும் கூறிச் சென்றார். ஆனால் அவர் இறைவனின் இயல்பு பற்றியோ, உயிரின் இயல்புகள் பற்றியோ ஏதும் விளக்கிக் கூறினர் இல்லை. 'உயிரிரக்கம்' ஆகிய சீவகாருண்யம் என்பதனை மட்டுமே பெரிதும் அறிவுறுத்திப் போந்தார். ஆதலின் பௌத்தம் முதலியன, ஒரு நல்லொழுக்க நெறியே யன்றிச் சமயம் ஆகாது என்பர் சிலர்.

ஒருசிலர் கடவுளும் சமயமும் எதற்கு? நல்லவர்களாக, ஒழுக்கமுடையவர்களாக இருந்தால், அதுவே போதாதா? என வினவுகின்றனர். ஒழுக்கம் சமய வாழ்விற்கு வேண்டப்படுவதேயாயினும், ஒழுக்கமே சமய வாழ்வு அன்று. ஒழுக்கம் தரும் உயர்வினும், ஒழுக்கத்துடன் கூடிய சமய வாழ்வு தரும் உயர்வு மிகமிகப் பெரியது என்பது அறிதற்குரியது.

திருவள்ளுவர் வெறும் நீதி நூலாசிரியர் மட்டுமேயல்லர். அவர் ஒரு பெருஞ் சமய நூல் ஆசிரியரும் ஆவார். கடவுள் உயிர் உலகம் நல்வினை தீவினை பிறப்பு இறப்பு அறம் மறம் தவம் ஞானம் துறக்கம் நிரயம் தேவர் முனிவர் நரகர் முதலிய பல்வேறு சமயத்துறைப் பொருள்களையும் பற்றி, அவர் குறிப்பிட்டுக் கூறுகின்றார்.

**முடிவுரை :**

இத்தகைய பெருஞ் சிறப்புடைமை பற்றியே, திருவள்ளுவரை எல்லாச் சமயத்தவரும் தத்தமக்குரிய சான்றோராகப் போற்ற முற்படுகின்றனர். இங்ஙனம் எல்லாச் சமயத்தவரும் ஏற்றுப் போற்றும் வண்ணம், அவர் தமது திருக்குறளின் கண் விளக்கியருளிய தெய்வச் செந்நெறி, சிறப்புற்றுத் திகழ்கின்றது. அச்செந்நெறியின் அருமை பெருமைகளை யுணர்ந்தும், அனைவரும் அதனைக் கடைப்பிடித்தொழுகியும், நலம்பலவும் எய்தி நாம் அனைவரும் உய்ய முயலுவோமாக!

—ஆசிரியர்

1. "To perceive all that is unusual and exceptional, all that is wonderful, in the midst of the ordinary things of everyday life, is the beginning of philosophy or religious consciousness." —*Joseph Pieper, The Philosophical Act.*

2. "Pure religion and undefiled, before God the Father, is this. To visit and help th orphans and the diseased in their affliction, and to keep oneself unspotted in the world-" —*Prof. William James*

3. "Call it what you will, there is in most human lives an attitude toward the Determiner of Destiny which simply is not to be identified with social righteousnees or any other kind of morality......Religion, if taken seriously and rationally, will be deeply moral; but it is not morality" —*Prof. J. B. Pratt, The Religious Consciousness.*

# திருவள்ளுவம்

## (1) கடவுள் வாழ்த்து.

(1) எழுத்துக்கள் எல்லாம் அகரம் ஆகிய முதலை உடையன; அதுபோல உலகம் கடவுளை முதலாக உடையது. (2) நூல்களைக் கற்பதனால் விளையும் பயன் யாது? மெய்யுணர்வுடைய கடவுளின் நல்ல தாள்களைத்தொழமாட்டார் என்றால். (3) உயிர்களின் மனமாகிய மலரின்கண் உள்ள இறைவனின், பெருமைமிக்க திருவடிகளை அடைந்தவர்கள், உலகில் நெடுங்காலம் வாழ்வார்கள். (4) விருப்பும் வெறுப்பும் இல்லாத கடவுளின் திருவடியைச் சேர்ந்தவர்களுக்கு எக்காலத்தும் துன்பம் இல்லை. (5) மயக்கத்தை விளைவிக்கும் நல்வினை, தீவினை என்னும் இரண்டு வினைகளும், இறைவனின் உண்மைசேர்ந்த புகழை எப்பொழுதும் சொல்லிக்கொண் டிருப்பவர்பாற் சேரமாட்டா. (6) ஐம்பொறிகளை வழியாக உடைய ஐந்துஅவாவினையும்அறுத்தவனது, உண்மையான ஒழுக்க நெறியின் கண் வழுவாது நடப்பவர்கள் நெடுங்காலம் வாழ்வர். (7) தனக்குச் சமானம் இல்லாத இறைவனின் திருவடியை அடைந்தவர்க்கு அல்லாமல், மனக்கவலைகளைப் போக்கிக் கொள்ள முடியாது. (8) அறக்கடலாகிய அந்தணனின் திருவடியாகிய தெப்பத்தை அடைந்தவர்க்கு அல்லாமல், பொருளும் இன்பமுமாகிய கடலைக் கடக்கஇயலாது. (9) எட்டுக் குணங்களை உடையஇறைவனது தாள்களை வணங்காத தலைகள், புலன்களைக் கொள்ளுதல் இல்லாத பொறிகளைப் போலப் பயன் அற்றன வாகும். (10) இறைவனின் அடி என்னும் தெப்பத்தைச் சேர்ந்தவர்கள், பிறவியாகிய கடலை நீந்துவர்; சேராதவர்கள் அதன்கண் நீந்தாமல் அழுந்துவர்.

## (2) வான் சிறப்பு

(1) மழை பெய்வதனால்தான், உயிர்கள் நிலைபெற்று வருகின்றன. அதனால் மழையே அமிழ்தம் என்று உணரத் தகுந்தது. (2) உண்பவர்க்கு நல்ல உணவுகளை உண்டாக்கி, அவற்றை உண்பவர்க்குத் தானும் உணவாகப் பயன்படுவது மழையே. (3) மழை இல்லாமல் தவறுமானால், கடல் சூழ்ந்த பரந்த உலகத்தில் உயிர்களைப் பசி நிலைபெற்று வருத்தும். (4) மழை என்னும் வருவாய் பயன் குன்றினால், உழவர்கள் ஏரால் உழுதலைச் செய்யமாட்டார்கள். (5) பெய்யாமல் நின்று கெடுப்பதும், கெட்டார்க்குத் துணையாய் நின்று மீள எடுப்பதும், எல்லாம் வல்லது மழை. (6) வானத்தினின்று மழைத்துளிகள் விழுந்தாலன்றி, பசும்புல்லின் தலையையும் காணுதல் இயலாது. (7) மேகமானது முகந்து பெய்யாமற் போனால், நீர்வாழுயிர்கள் பிறவாமலும், மணிமுதலியன படாமலும், பெரிய கடலும் கூடத் தன்னியல்பு குறையும். (8) மழை பெய்யாவிட்டால், தேவர்களுக்கும் இவ்வுலகில் நாள்வழிபாடும் பெருவிழாக்களும் நடைபெறமாட்டா. (9) மழை பெய்யாவிட்டால் இவ்வுலகில் இல்லறத்திற்குரிய தானம், துறவறத்திற்குரிய தவம் ஆகிய இரண்டு அறமும் நிலை பெற மாட்டா. (10) எத்தகையோர்க்கும் நீரில்லாமல் பொருளும் இன்பமும் ஆகிய உலகியல் வாழ்வு கைகூடாது; அதுபோலவே வானம் இல்லாமல் மழை பெய்தல் முடியாது.

### (3) நீத்தார் பெருமை.

(1) ஒழுக்கத்தில் நின்று பற்று அற்றவர்களின் பெருமையை, விழுமிய பொருள்களில் இதுவே விழுமியது என நூல்களின் துணிவு விரும்பும். (2) பற்றற்றாரது பெருமையின் அளவைக் கூறினால், அஃது இவ்வுலகத்தில் பிறந்து இறந்தவர்களை எண்ணி அறிவது போல இயலாதது ஆகும். (3) பிறப்பு இறப்பு என்னும் இரண்டின் கூறுகளை ஆராய்ந்து, அறவாழ்வை மேற்கொண்டவர்களின் பெருமையே உலகில் உயர்ந்தது. (4) அறிவு என்னும் அங்குசத்தால் ஐம்பொறிகளாகிய யானைகளைக் காப்பவன் மேலான வீட்டுநிலத்திற்குரிய விதைபோல்வான். (5) ஐம்பொறிகளின் ஆசையை அடக்கியவனின் வலிமைக்கு, அகன்ற வானத்துள்ளவர்க்கு அரசனாகிய இந்திரனே போதிய சான்றாவான். (6) செய்வதற்கு அரிய செயல்களைச் செய்யவல்லவரே பெரியோர். செய்வதற்கு அரிய செயல்களைச்செய்யாதவர்கள் சிறியோர். (7) சுவை ஒளி ஊறு ஓசை மணம் என்னும் ஐந்தன் கூறுகளையும் ஆராய்பவனின் அறிவில் உலகம் அடங்கியுள்ளது. (8) பயன் நிறைந்த சொற்களைக் கூறவல்ல சான்றோர்களின் பெருமையை உலகத்தில் அவர்களது மறைபோலும் சொற்களே கண்கூடாக உணர்த்திவிடும். (9) நற்குணங்களாகிய குன்றின் உச்சியில் ஏறிநின்ற முனிவர்களின் கோபத்தைக் கண நேரமும் தடுத்தல் இயலாது. (10) எல்லா உயிர்களிடத்தும் இரக்கம்கொண்டு வாழ்வதனால், அந்தணர் என்று சொல்லப்படுவோர் அறநெறி பரப்பும் துறவிகளே ஆவர்.

### (4) அறன் வலியுறுத்தல்.

(1) அறமானது சிறப்பும் செல்வமும் தரும், ஆதலால் உயிர்களுக்கு அறத்தினும் சிறந்த நன்மை வேறு எதுவும் இல்லை. (2) அறம் செய்தலின் மேற்பட்ட நன்மை இல்லை. அதனை மறத்தலின் மிக்க அழிவும் இல்லை. (3) அறச்செயல்களை இடைவிடாமல் இயலும் வழிகளில், வாய்க்கும் இடத்தெல்லாம் செய்க. (4) மனத்தின்கண் குற்றம் இல்லாதவன் ஆகுக. அறமாவது அவ்வளவே. மற்றையவை ஆரவாரத் தன்மையாகும். (5) பொறாமை பேராசை கோபம் கடுஞ்சொல் ஆகிய நான்கையும் நீக்கிச் செய்வதே அறம். (6) பிறகு செய்வோம் என்று கருதாமல் அறத்தை நாள்தோறும் செய்க. இறக்கும் காலத்தில் அழியாத துணை அதுவே. (7) அறவாழ்வின் பயன் இது என்று கூற வேண்டுவதில்லை. பல்லக்கைச் சுமப்பவனும் செலுத்துபவனும் ஆகிய இருவர் இடையேயுள்ள வேறுபாட்டால் அதனை உணரலாம். (8) வீணே கழியும் நாள் ஏற்படாமல் அறத்தைச் செய்துவரின் அஃது ஒருவன் பிறந்திறந்து வரும் நாளின் வழியை அடைக்கும் கல்லாய் நலம் செய்யும். (9) அறவழியாற் கிடைப்பதேஇன்பம். மற்றையனவெல்லாம் துன்பத்தையும் பழியையுமே விளைவிக்கும். (10) ஒருவனுக்குச் செய்யத் தக்கது நல்வினையே; ஒழிக்கத்தக்கது தீவினையே.

### (5) இல் வாழ்க்கை.

(1) இல்லறத்தில் வாழ்பவன் என்பவன் பண்புமிக்க மூவர்க்கும் நல்லொழுக்க நெறியில் நிலைபெற்ற துணையாவான். (2) துறவிகளுக்கும், வறியவர்களுக்கும், துணையின்றி இறந்தவர்களுக்கும், இல்வாழ்பவனே துணையாவான். (3) தன் குல முன்னோர், தேவர், விருந்தினர், சுற்றத்தார், தான் என்ற ஐந்து இடத்தும் கடமையை வழுவாமல் செய்தல் இல்வாழ்வானுக்குத் தலையாய அறமாகும். (4) பழிக்கு அஞ்சிப் பொருள் தேடுதலையும், பகுத்துக் கொடுத்தலையும் ஒருவனது வாழ்க்கை யுடையதாக இருந்தால், அவனது மரபு எக்காலத்தும் அழிவது இல்லை. (5) சுற்றத்தவர்பால் அன்பும், பிறர்க்கு ஈதலாகிய அறமும் அமையப் பெற்றால், இல்வாழ்க்கைக்கு அவைதாம் முறையே உரிய பண்பும் பயனும் ஆகும். (6) அற வழியிலேயே ஒருவன் இல்வாழ்க்கையை நடத்துவானாயின், அவன் அதற்குப் புறமாகிய நெறியிற் சென்று அடையும் பயன் யாது? (7) முறைப்படி இல்வாழ்க்கை வாழ்பவன் என்பவன், இறைவன் அருளைப் பெற முயலுபவர்கள் எல்லோருள்ளும் தலையாயவன் ஆவான். (8) பிறரையும் அறநெறியில் ஒழுகச்செய்து, தானும்

அறத்தில் தவருதவனின் இல்வாழ்க்கையே, தவம் செய்பவர்களைவிட மேலான தவத்தை உடையது. (9) அறம் என்று மிகவும் சிறப்பிக்கப் பெற்றது இல்வாழ்க்கையே; அதுவும் பிறன் பழிக்கும் குற்றம் இல்லாததாயின் சிறப்புடையதாகும். (10) உலகத்தில் வாழவேண்டிய முறைப்படி வாழ்பவன், வானத்தில் உறைகின்ற தேவர்களில் ஒருவனுக மதிக்கப்படுவான்.

## (6) வாழ்க்கைத் துணை நலம்.

(1) குடும்பத்திற்கு ஏற்ற குணநலன்களை உடையவளாய்த் தன் கணவனின் வருவாய்க்குத் தக்கபடி குடும்பம் நடத்துபவளே, வாழ்க்கைக்குத் துணையாவாள். (2) மனைவியினிடத்தில் குடும்பத்திற்குரிய குணங்கள் இல்லையானல், வேறு எத்தகைய சிறப்புடையதாயினும் அக்குடும்ப வாழ்க்கை பயன்படாது. (3) மனைவி நற்குணங்கள் உடையவளாயின் இல்லாதது யாது? மனைவி நற்குணங்கள் இல்லாதவளாயின் உள்ளது யாது? (4) கற்பு என்னும் கலங்கா நிலைமை உண்டாகப் பெற்ருல், ஒருவன் எய்தும் செல்வங்களுள் மனைவியின் மேம்பட்ட செல்வங்கள் யாவையுள? (5) வேறு தெய்வம் தொழாமல் கணவனையே தெய்வம் என்று தொழுது கொண்டு துயில் எழுபவள், பெய் என்று சொல்ல மழையும் பெய்யும். (6) கற்பில் தன்னைக் காத்துக்கொண்டு, கணவனையும் உணவு முதலியவற்ருல்பாதுகாத்து, குடும்பத்தின் நன்மை அமைந்த புகழைப் போற்றி வளர்த்துக் கடமைகளில் தளர்ச்சியில்லாதவளே, மனைவியாவாள். (7) மதிலால் காக்கும் காவல் என்ன பயனைச் செய்யும்? பெண்கள் தமது நெஞ்சத்தின் நிறையால் காக்கும் காவலே தலையாய காவல். (8) பெண்கள், தம்மை மனைவியாகப் பெற்ற கணவனை வழிபடுதலைப் பெறுவாராயின், தேவர்கள் வாழும் மேலுலகில் பெரும் சிறப்பைப் பெறுவார்கள். (9) குடும்பத்தின் புகழை விரும்பும் மனைவியை வாய்க்கப்பெருதவர்க்குத் தமது பகைவர் முன்னே ஆண் சிங்கம் போல நடக்கும் பெருமித நடைஇல்லை. (10) ஒருவனுக்கு நன்மை மனைவியின் நற்பண்பே; அதற்கு நல்ல அணிகலம் நல்ல மக்களைப் பெறுதலே என்று அறிந்தோர் கூறுவர்.

## (7) மக்கட் பேறு.

(1) ஒருவன் பெறும் செல்வங்களுள், அறிய வேண்டுவனவற்றை அறிதற்குரிய மக்களைப் பெறுதலே அல்லாத பிற செல்வங்களை யாம் மதிப்பது இல்லை. (2) பழிக்கும் தன்மை இல்லாத நற்பண்புகளை உடைய மக்களைப் பெற்ருல் ஏழு பிறப்புகளிலும் ஒருவனைத் துன்பங்கள் அணுகா. (3) தம்முடைய பொருள் என்று தமது மக்களையே அறிந்தோர் கூறுவர். அம் மக்கள் செய்த பொருள், தம்மை நோக்கி அவர் செய்யும் நல்வினையால் தம்மிடம் வரும் ஆதலால். (4) தம்முடைய குழந்தைகளின் சிறிய கையால் கலக்கப்பெற்ற உணவானது தேவர் அமிழ்தத்தைவிட மிகவும் இனிய சுவையுடையதாகும். (5) தம் குழந்தைகளின் உடம்பைத் தொடுதல் உடலுக்கு இன்பம். அவர்களின் சொற்களைக் கேட்டல் செவிக்கு இன்பம். (6) தமது குழந்தைகளின் மழலைச் சொற்களைக் கேளாதவர்களே, குழலையும் யாழையும் இனியது என்று கூறுவர். (7) தந்தை புதல்வனுக்குச் செய்யும் நன்மை, அறிஞர் அவையின்கண் அவரினும் மிக்குத் திகழுமாறு கல்வி உடையவன்ஆக்குதல். (8) தம் குழந்தைகள் சிறந்த அறிவுடையவராக விளங்குதல், தமக்குக் காட்டிலும், உலகிலுள்ள உயிர்களுக்கெல்லாம் இன்பம் செய்யும். (9) சிறந்தவன் என்று தன்மகனைப் பிறர் புகழ்ந்து கூறுதலைக் கேட்கும் தாய், அவனைத் தான் பெற்றபொழுது எய்திய மகிழ்ச்சியை விட, மிகுதியாக மகிழ்வாள். (10) தந்தைக்கு மகன் செய்யும் கைம்மாறு, இவனைப் பெறுவதற்கு இவன் தந்தை என்ன தவம் செய்தாரோ என்று பலரும் வியக்கும்படி புகழ்ச் சொல்லையுண்டாக்குதல்.

## (8) அன்புடைமை

(1) அன்பிற்கும் பிறர் அறியாமல் அடைத்திருக்கும் தாழ்ப்பாள் உளதோ? அன்பு செய்யப்பட்டவரது துன்பத்தைக் கண்டவிடத்து, அன்பு உடையவரின் கண்கள் பொழிகின்றபுல்லிய கண்ணீரே, அவர் உள்ளத்திலிருக்கும் அன்பினை எல்லாரும் அறிய வெளிப்படுத்திவிடும். (2) அன்பில்லாதவர்கள் எல்லாப் பொரு

ளாலும் தமக்கே உரியவர். அன்புடையவர்கள் தம் உடம்பாலும் பிறர்க்கு உரியவர் ஆவர். (3) பெறுதற்கரிய மக்கள் உயிர்க்கு உடம்போடு உண்டாகிய தொடர்ச்சியினை, அன்போடு பொருந்துவதற்கு வந்த நெறியின் பயன் என்று சொல்லுவர் அறிந்தோர். (4) அன்பானது தொடர்பில்லாதவரிடத்தும் விருப்பத்தை உண்டாக்கும், அவ்விருப்பம் யாவரிடத்தும் நட்புரிமை என்னும் அளவற்ற சிறப்பைக் கொடுக்கும். (5) அன்பொடு பொருந்திய நெறியின் பயனென்றே, இவ்வுலகத்தில் இல்லறவாழ்வு நடத்தி இன்பம் நுகர்ந்தவர்கள், மேலுலகத்திற் சென்று அடையும் பேரின்பத்தினைச் சொல்லுவர் அறிந்தோர். (6) அன்பு துணையாவது அறத்திற்கே என்று அறியாதவர்கள் சிலர் கூறுவர். மறத்தை நீக்குதற்கும் அவ்வன்பே துணையாகும். (7) என்பு இல்லாத புழுவின் உடம்பை வெயில் காய்ந்தாற் போல, அன்பு இல்லாத உயிரை அறக்கடவுள் சினந்து ஒறுக்கும். (8) மனத்தில் அன்பு இல்லாத உயிர் இல்லறத்தோடு கூடி வாழ்தல், வலிய நிலத்தில் பட்டுப் போன மரம் தளிர்ப்பதை ஒக்கும். (9) உடம்பின் உள்ளேயிருந்து இல்லறத்திற்கு உறுப்பாகிய அன்பைப் பெருதவர்களுக்கு, மற்றுப் புறத்தே உள்ள இடம் பொருள் ஏவலாகிய உறுப்புக்கள் என்ன உதவியைச் செய்யும். (10) அன்பின் வழிநின்ற உடம்பே உயிர் நிற்கும் இடமாகும்; அன்பு இல்லாதவர்க்கு உள்ள உடம்புகள், எலும்பைத் தோலால் மறைத்துப் போர்த்தனவேயாம்.

## (9) விருந்தோம்பல்

(1) இல்லறத்தில் இருந்து பொருள்களைப் போற்றிவாழும் செய்கை எல்லாம் விருந்தினரைப் போற்றி உதவி செய்தற் பொருட்டேயாகும். (2) விருந்தினர்கள், வெளியே இருக்கத் தான் மட்டும் உள்ளிருந்து உண்ணுவது, சாவாமையைத் தரும் அமிர்தமே யென்ருலும், விரும்பத் தகுந்தது ஆகாது. (3) வந்த விருந்தை நாள்தோறும் போற்றுபவனின் இல் வாழ்க்கை, வறுமையால் வருந்திக் கெடுவது இல்லை. (4) விருந்தினரை உண்பித்துப் பின் எஞ்சியதனை உண்ணு கின்றவனின் விளைநிலத்திற்கு, வித்தும் தூவுதல் வேண்டுமோ? (5) வந்த விருந்தினரைப் போற்றி, மேலும் வரக் கூடிய விருந்தினரை எதிர்நோக்கி, அவருடன் உண்ண இருப்பவன், மறுமையில் தேவர்களுக்கு நல்ல விருந்தாவான். (7) விருந்தோம்புதல் ஆகிய வேள்வியின் பயன், இன்ன அளவுடையது எனக்கூறும் அளவை உடையது அன்று. விருந்தினரின் தகுதி அளவே, அதன்பயனின் அளவும் ஆகும். (8) நிலையாப் பொருளை வருந்திக் காத்துப் பின் பற்றுக்கோடு அற்ரேம் என்று வருந்துவர்; விருந்தினரைப் போற்றி வேள்விப்பயனை எய்தும்பேறு அடையாதவர். (9) செல்வத்தில் வறுமையாவது, விருந்தோம்புதலைச் செய்யாமல் இகழும் அறியாமை. அவ்வறுமை மடமை உடையவர்கள் இடத்திலேயே உண்டாகும். (10) அனிச்சப்பூ மோந்தால் வாடும்; விருந்தினரோ முகம் வேறுபட்டுப் பார்த்தாலே வாடிவிடுவர்.

## (10) இனியவை கூறல்

(1) இன்சொல்லாவன, அன்பொடு கலந்து வஞ்சனை இல்லாதனவாய், அறத்தினை உணர்ந்தோர் வாயினின்று வரும் சொற்களே ஆகும். (2) முகம் மலர்ந்து இனிய சொல்லையும் உடையவன் ஆகப் பெற்ருல், அது மனம் உவந்து கொடுத்தலை விட நல்லது. (3) முகத்தால் விரும்பி இனிமையாகப் பார்த்து, மனத்துடன் பொருந்திய இனிய சொற்களைச் சொல்லுதலிலேயே, அறம் உள்ளது. (4) எல்லாரிடத்தும் இன்பத்தை மிகுவிக்கும் இன்சொல்லை உடையவர்க்குத் துன்பத்தை மிகுவிக்கும் வறுமை இல்லாமற்போகும். (5) ஒருவனுக்கு அழகைத் தருவது, அடக்கம் உடையவனுய் இனிய சொல்லைச் சொல்லுபவன் ஆதலே; மற்றையவை அணி ஆக மாட்டா. (6) நன்மை பயக்கும் சொற்களை ஆராய்ந்து இனியனவாகச் சொல்லினல் பாவங்கள் குறைய, அறம் வளரும். (7) பிறர்க்கு நன்மையைக் கொடுத்து, இனிமையினும் நீங்காத சொல், இம்மைக்கு நீதியை உண்டாக்கி மறுமைக்கு அறத்தையும் விளைவிக்கும். (8) பிறர்க்குத் துன்பம் தராத இனிய சொல்

மறு பிறவியிலும் இப்பிறவியிலும் இன்பத்தைக் கொடுக்கும். (9) பிறர் கூறும் இன்சொல் தனக்கு இன்பம் தருதலே உணர்கின்றவன், பிறர்பால் வன்சொற்களைக் கூறுவது எதற்காக? (10) இனிய சொற்கள் இருக்க, அவற்றைவிட்டுக் கடுஞ் சொற்களைப் பிறர்பால் சொல்லுதல், இனிய பழங்கள் இருக்க அவற்றைவிட்டுக் கசப்பும், நஞ்சுமான காய்களை முயன்று திருடிப் பெற்று உண்ணுவதோடு ஒக்கும்.

## (11) செய்ந்நன்றிஅறிதல்

(1) முன்னே தனக்கு ஓர் உதவியும் செய்யாதிருக்க ஒருவன் பிறனுக்குச் செய்த உதவிக்கு, மண்ணுலகையும், விண்ணுலகையும் கைம்மாருகக் கொடுத்தாலும், அவை ஈடாகமாட்டா. (2) தக்க சமயத்தில் செய்த உதவியானது சிறியது என்ருலும், உலகைவிட மிகமிகப் பெரியது ஆகும். (3) பயனை ஆராய்தல் இலராய்ச் செய்த உதவியின் அன்பை ஆராய்ந்தால் அதனது நன்மை கடலினும் பெரியதாகும். (4) தினை அளவு உதவி செய்தாலும், அதனைப் பனையளவு பெரியதாகக் கொண்டு பயன் தெரிந்த பெரியோர்கள் போற்றுவர். (5) கைம்மாருகச் செய்யும் உதவியானது முன் செய்த உதவியின் அளவை உடையது அன்று. அஃது உதவி செய்யப் பெற்றவர்களின் பண்பு நிறைவையே அளவாக உடையது. (6) துன்பக் காலத்தில் துணை புரிந்தவர்களின் நட்பை விடுதல் கூடாது. குற்றமற்றவரது உறவை மறத்தல் ஆகாது. (7) தம்முடைய துன்பத்தை நீக்கியவரின் நட்பினை எழுமை ஏழு பிறப்புக்களிலும் நல்லோர் மறவாது நினைப்பர். (8) ஒருவர் செய்த உதவியை மறப்பது அறமாகாது. பிறர் செய்த தீமையை அப்பொழுதே மறந்துவிடுவது அறமாகும். (39) முன்னே ஒரு நன்மையைச் செய்தவர் பின்னர் நமக்குக் கொன்ருற் போன்ற துன்பத்தைச் செய்தாலும், அவையெல்லாம் அவர் முன்பு செய்த நன்மை ஒன்றினை நினைத்துப் பார்க்கின் இல்லாமற் போகும். (10) எத்தகைய அறங்களைச் சிதைத்தவர்க்கும் கழுவாய் உண்டாகும். ஆனல், செய்த உதவியை மறந்த மனிதனுக்கு உய்தியே இல்லை.

## (12) நடுவு நிலைமை

(1) பகை, நொதுமல், நட்பு என்னும் பகுதிதோறும் தன் முறைமையில் தவருது ஒழுகப் பெற்ருல், நடுவு நிலைமை எனப் படும் ஓர் அறமே சிறந்தது. (2) நடுவு நிலைமையை உடையவனது செல்வம் அழிவு இல்லாமல் அவன் மரபினருக்கும் துணையாதலை உடையது. (3) நன்மையே தருவதாக இருந்தாலும் நடுவுநிலை தவறுதலால் வரும் செல்வத்தை அப்பொழுதே நீக்கிவிடுக. (4) தகுதி உடையவர், தகுதி இல்லாதவர் என்பது அவரவர்க்குப் பின் எஞ்சி நிற்கும் புகழ், மக்கள் முதலியவற்ருல் அறியப்படும். (5) தீவினையால் அழிவும், நல்வினையால் ஆக்கமும் ஏற்படுதல் இல்லாமற் போகவில்லை; அவ்வியல்பை அறிந்து மனத்தில் நடுவுநிலைமைதவருதிருத்தல் பெரியோர்க்கு அழகாகும். (6) ஒருவன் தனது மனம் நடுவு நிலைமை தவறித் தீயவற்றைச் செய்ய நினைக்குமாயின், அதனை யான் கெடுவேன் என்பதற்கு அறிகுறியாகக் கொள்க. (7) நடுவு நிலையாக நின்று அறத்தின்கண் வழுவாது ஒழுகுபவனின் வறுமையை, வறுமையென்று கருதார் உயர்ந்தோர் (8) முன்னே தான் சமநிலையில் இருந்து பின் எடையைவரையறுக்குந்தராசுக்கோல் போல,நற்பண்புகள் நிரம்பி, ஒரு பக்கத்தில் வளைந்து சாய்ந்துவிடாமை பெரியோர்க்கு அழகாகும். (9) நடுவு நிலைமையாவது சொல்லில்தவறுதல் இல்லாதது. அங்ஙனம் சொல்லில்தவருமை மனத்தின்கண் வளைவு இல்லாமையைத் திண்ணிதாகப் பெற்ற வழியே ஆகும். (10) பிறர் பொருளையும்தம் பொருள்போலவே போற்றிச் செய்துவரின் வாணிகம் செய்பவர்க்கு நிரம்பவும் வாணிகம் பெருகும்.

## 13. அடக்கம் உடைமை

(1) பணிவுடைமையாகிய அறம், தேவர் உலகத்தில் சேர்க்கும்; பணிவு இல்லாமை ஆகிய பாவம், கொடிய இருளுலகில் செலுத்தும். (2) உயிர்கட்கு அடக்கத்தின் மிக்க செல்வம் இல்லை. ஆதலால் அவ்வடக்கத்தை உறுதிப் பொருளாகக் கொண்டு போற்றி ஒழுகுக. (3) அறியத் தக்கனவற்றை அறிந்து, முறையே அடக்கம் உடையவன் ஆகப் பெற்றால், அது நல்லோரால் அறியப் பெற்று மேன்மையைக் கொடுக்கும். (4) தனது நெறியில் வேறுபடாமல் நின்று அடங்கி வாழ்பவனின் உயர்ச்சி, மலையையும் விட மிகப் பெரியது ஆகும். (5) பணிவுடன் ஒழுகுதல், செல்வர் வறியர் என்னும் எல்லார்க்கும் நல்லது ஆகும். என்றாலும், அவ் எல்லாருள்ளும் செல்வம் உடையவர்க்கே, அது மேலும்ஒருசெல்வம்ஆகும் சிறப்பினை உடையது. (6) ஆமை போல ஒரு பிறவியில் ஐம்பொறிகளையும் அடக்குதலைச் செய்தால், அது ஏழுபிறப்பிலும் பாதுகாப்பு ஆதலை உடையது. (7) எல்லாவற்றையும் காக்க மாட்டார் ஆயினும் நாக்கு ஒன்றினையாவது காப்பாற்றுக; அதனைக் காவாமற் போனால் சொற் குற்றத்தில் வீழ்ந்து தாமே துன்புறுவர். (8) தீய சொற்களின் பொருள்களால் பிறர்க்கு வரும் துன்பம் ஒன்றாயினும் ஒருவன்பால் ஏற்பட்டால், அது காரணமாக அவனுக்குப் பிற அறங்களால் உண்டான நன்மையும் தீதாய் முடியும். (9) தீயினால் சுட்டு ஏற்பட்ட புண் வெளியில் இருப்பினும் உள்ளத்தில் ஆறிவிடும். ஆனால் நாக்கால் சுட்டு ஏற்படுத்திய தழும்பு, என்றும் ஆறாது. (10) மனத்தில் சினம்தோன்றாமல் காத்துக் கல்விஉடையனாய்ப் பணிந்து ஒழுக வல்லவனைக் கண்டு தன் குறை கூறுதற்குரிய இனிய பொழுதினை, அவனை அடையும் நெறியிற் சென்று புகுந்து, அறக்கடவுள் விரும்பி எதிர்நோக்கி நிற்கும்.

## 14. ஒழுக்கம் உடைமை

(1) ஒழுக்கம் எல்லார்க்கும் சிறப்பினைத் தருவதனால், அவ்வொழுக்கம் உயிரினும் மேலாகப் போற்றப் பெறும். ஆதலின் ஒழுக்கத்தினைப் பெரிதும் போற்றி வருந்தியும் காப்பாற்றுக. (2) அறங்கள் பலவற்றையும் ஆராய்ந்து தேர்ந்தாலும் உயிர்க்குத் துணையாய் முடிவது அவ் ஒழுக்கமே யாகும்(3) நல்லொழுக்கம் உடையவன் ஆதலே நற்குடிப் பிறப்பின் தன்மையாகும்; ஒழுக்கத்தில் தவறுதல், உயர்குடிப் பிறப்பையும் இழிகுடிப் பிறப்பாகச் செய்து விடும். (4) கற்ற நூற்பொருளை மறந்தாலும் பின்னர் அதனை ஓதிக் கொள்ளுதல் கூடும். ஆனால் அந்தணனது உயர்குலப் பிறப்பின் தன்மையும், ஒழுக்கம் குன்றுமாயின் இழிந்துவிடும். (5) பொறாமை உடையவனிடத்தில் செல்வம் இல்லாமற் போவது போல, ஒழுக்கம் இல்லாதவர் இடத்தில் பெருமை இல்லாமல் போகும். (6) ஒழுக்கம் தவறுதலால் விளையும் குற்றங்களை உணர்ந்து, மனவலிமை உடைய சான்றோர் ஒழுக்கத்தில் தவற மாட்டார்கள். (7) எல்லாரும் ஒழுக்கத்தால் பெருமை அடைவர். ஒழுக்கம் தவறுதலால், அடையத் தகாத பழியை அடைவர். (8) நல்ல நடத்தை அறத்திற்குக் காரணமாய் இன்பம் பயக்கும். தீய நடத்தை பாவத்திற்குக் காரணமாய் எப்போதும் துன்பமே பயக்கும். (9) மறந்தும் தீய சொற்களைத் தம் வாயால் சொல்லுதல், ஒழுக்கம் உடையவர்க்கு ஒருபோதும் இயலாது. (10) உலகத்தோடு பொருந்த நடத்தலைக் கல்லாதவர்கள், பலநூல்களைக் கற்றிருப்பினும் அறிவில்லாதவரே ஆவர். (தொடரும்)

—ஆசிரியர்.

# ஞானமிர்தம்

## முன்னுரை :

ஞானமிர்தம் என்பது சைவசித்தாந்தச் செம்பொருள்களை விளக்கும் நூல்கள், பலவற்றுள் தலைசிறந்த ஒன்றாகும். இந் நூல் அகவற் பாக்களால் இயன்றது; சங்கச் செய்யுட்களைப்போன்று உயரிய நடையில், சொற்பொருட் சுவை நலங்கள் மிக்கு விளங்குவது; மேற்கோளும் ஏதுவும் எடுத்துக்காட்டும் முதலிய உறுப்புக்கள் அமைய, அளவை நெறிபிறழாமல், இடையிடையே தடைவிடைகள் தந்துகொண்டு, சிறந்த முறையில் கருத்துக்களை விளக்கிச் செல்வது. ஆசிரியர் மெய்கண்டதேவரின் சிவஞானபோதம் தோன்றிய காலத்திற்கும் முற்பட்டது. பழைய சிவாகமங்களின் அரும் பொருள்களை, இனிய தமிழில் விளக்கும் முறையில், திருமூலர் திருமந்திரம் போன்ற சிறப்புடையதாய், அதனை அடுத்து வைத்துப் போற்றத் தகுந்த பெருமையுடையது.

"தன்மனைக் கிழத்தி அல்லதைப் பிறர்மனை
அன்னையில் தீரா நன்னர் ஆண்மை" (24)

"பரதந் திரியம் கரைகழி பந்தம்" (19)

"பேயே ஆயினும் பிரியின் இன்பம்
வாயா தென்றே மதியோர் அறைப" (53)

"கொன்னே செய்யான் தன்நேர் இல்லான்" (12)

என்பன முதலிய, பொருள்பொதிந்த இனிய சிறந்த வரிகள், ஞானமிர்தத்தைச் சேர்ந்தவை என்பது, தமிழிலக்கிய அறிவு ஒரு சிறிதாதல் வாய்க்கப் பெற்றுடையார், அனைவரும் அறிந்த செய்தியாகும்.

## சிவஞான சுவாமிகள் :

ஆசிரியர் சிவஞான சுவாமிகள் தாம் இயற்றிய சிவஞான போதச் சிற்றுரை — பேருரைகளிலும் பிறவற்றிலும், இந்நூலினின்று ஆங்காங்கே மேற்கோள்கள் பல எடுத்துக் காட்டிச் செல்லுதலின், இந் நூலின் சிறப்பை நம்மனோர் நன்கினிது உணரப்பெறுகின்றோம். தமது சிவஞான போதப் பேருரையின் இடையிடையே விளக்க நேரும் தூலாருந்ததி நியாயம் - சற்காரியவாதம் - மனமொழி மெய்களால் வினை ஈட்டப்படுமாறு — ஆதியான்மிகம் முதலிய மூவகைத் துன்பங்கள்—அண்டங்களின் இயல்பு - அந்தக்கரணங்கள் அமைச்சரை ஒக்கும் எனவே ஏனைக் கருவிகள் ஏனைப் பரிசனங்களை ஒக்கும் என்றல் - முதலிய பற்பல செய்திகளுக்குரிய சிறந்த சான்றுகளாக, ஞானமிர்தச் செய்யுட்களையே சிவஞான சுவாமிகள் மேற்கோள் காட்டியருள்கின்றார்:

"சத்திநிபாதம் என்னும் சொல்லியல்பு சத்தியினது வீழ்ச்சி என்றவாறு. நி என்பது ஏற்றமாக என்னும் பொருள் குறித்து நின்றதோர் இடைச்சொல். ஓரவைக்களத்தின் நடுவே ஒரு கல் வந்து வீழ்ந்தால் அவ்வீழ்ச்சி அவ்வவைக்களத் துள்ளாரை ஆண்டு நின்றும் அகல்விக்கும். அது போலச் சத்திநிபாதம் நிகழ்ந்த மாத்திரையே, அஃது அவ்வான்மாவை மனைவி மக்கள் முதலிய உலகத் துழனியின் அச்சம் நிகழ்ந்து அவ்வுலக வாழ்க்கையினின்று வெரீஇப்போந்து உண்மைக் குரவனை நாடிச் செல்லுமாறு செய்வித்தலின், அவ்வொப்புமை தோன்றச் சத்தி நிகழ்ச்சி என்னாது சத்தி வீழ்ச்சி என்றோதப்பட்டது"

எனச் சிவஞான சுவாமிகள் 'சத்தி நிபாதம்' பற்றிச் செய்தருளிய சிறந்த விளக்கத்துக்கு அடிப்படையாக அமைந்தது,

"........அச்சத்தி நிபாதம்.
நிபாதம் என்றது, யாவன் ஒருவன்
இடைக்கடி தொருபொருள் அடுத்துற வீழின்,
வெரீஇ அந்நிலை ஒரீஇ வேறிடம்

12 JUL 1973
MADRAS



அப்பர் அடிகள், திருவாமூர்

அன்பளிப்பு :
திருவாமூர் ஸ்ரீ அப்பர் சுவாமிகள்
குருபூசை விழாக் குழுவினர்.

*மருவும்; அற்றென நிமலன் பெருவலி*
*பதிப்ப, அறிவன் பவபயங் கதுவ*
*மதித்தனன் தேசிகன் மலரடி யடையும்.*
*மோக அனந்தர் முயல்வோர்க்கு அமோகன்*
*சத்தியின் அவனை உணர்த்தல்! மற்றது*
*கருமத்து ஒப்பின் அல்லதை*
*வருமாறு ஆங்கின்று மதிக்குங் காலே!"* (69)

எனப் போதரும் ஞானமிர்தப் பகுதியே யாகும் எனின், சிவஞான சுவாமிகளுக்கு இந்நூலின்பால் இருந்த பற்றும் பயிற்சியும், எத்துணைய என்பது எண்ணி யுணரப்படும்.

ஒரு சிறந்த கருத்தானது ஒரு பெரிய அருட்கொடை யாகும். அதற்காக முதலில் கடவுளும், பின்னர் அதனை முதன் முதலாகக்கூறி வெளியிட்டவரும்,—அடுத்துச் சிறிது குறைந்த, ஆனல் உளங் கொளத் தகுந்த பெரிய அளவில்—அதனை முதன் முதலின் நமக்கு மேற்கோளாகக் காட்டியவரும் நன்றி செலுத்தப் படுதற் குரியவர்கள் ஆவர் !* என அறிஞர் ஒருவர் மொழிந்ததற்கேற்ப, ஞானமிர்த நூலினின்று மேற்கோள்கள் காட்டி அதன் அருமைபெருமைகளை நம்மனோர் அறியச் செய்த சிவஞான சுவாமிகளுக்கு, நாம் பெரிதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். ஏனெனில் சிவஞான சுவாமிகள் மேற்கோள் காட்டாதிருந்திருப்பின், ஞானமிர்தத்தின் பெருமையினை நாம் இத்துணையளவுக்கு நன்கினிது அறிந்து கொண்டிருத்தல் இயலாதன்றே?

## தமிழ் ஆகமம் :

"ஞானமிர்தம் என்னும் தமிழாகமம்" என இந்நூலைத் தக்கோர்கள் பலரும் போற்றியுள்ளனர். ஆகமங்களை மத்தாகக் கொண்டு, உபதேசம் என்னும் வலிய கயிற்றினைப் பூட்டி, அறிவாகிய பெரிய கைகளால், அறியாமைக் கடலை முறுக வாங்கிக் கடைந்தமையால், எழுந்த 'வீடு பயக்கும் மெய்யுணர்வு' ஆகிய ஞான அமிர்தம் போல்வது இந்நூல், என்னும் கருத்தமைய,

*"ஆகம மத்தின்...............*
*அருளுப தேச அரும்பெறல் நோன்ஞாண்*
*மதிமாத் தடக்கை கதுமெனப் பூட்டி*
*முறுக வாங்க மறுகுபு கலுழ்ந்து............*
*அச்சா ஞழி எற்பட எழுதலின்*
*ஞாஞ மிருதம் என்ப*
*ஆஞச் செவ்வி மாநூற் பெயரே!* (6)

எனப்போதரும் வரிகளால், இந்நூற் பெயர்க்காரணம் இனைய தென்பதும், இஃது ஆகமங்களின் அரிய கருத்துக்களையே இனிதெடுத்து விளக்கும் இயல்பின தென்பதும், செவ்விதில் தெளியப் படும்.

*"தேனுடன் அமிழ்ந்து கலந்தன்ன சுவைய!*
*அமிழ்தூண் அண்டரும் பெறற்கருந் தகைய!*
*தண்டாப் பிறவிப் பேரிடர் எறிப!*
*உரையுணர்வு கூடா வரகதி உய்ப்ப!*
*மதியோர் ஆனுது பருகுவ! பருகியும்*
*அமையாது நுவலும் அமைதிய! பாச*
*வல்லி வேர்அற நிமிர்ப! எல்லையில்*
*மலக்குறும்பு அறுப்ப! அறத்தின் வேலிய!*
*தனக்குநிகர் இல்லாத் தகைமைய! மனத்தின்*
*மாசறக் களைவ! தேசொடு நிவந்த!......"* (32)

என இந்நூலை அருளிச் செய்த வாகீச முனிவர், தமது அருளாசிரியர் திருமொழிகளைப் புகழ்ந்து போற்றுவதாக வரும் பகுதி, இந்நூலுக்கும் ஏற்ற பெற்றியில் இனிது பொருந்துவதாக உள்ள தெனலாம்.

## ஞானத்தின் வெற்றி :

ஞானமிர்தம் ஆகிய இந்நூல் அஞ்ஞானம் என்னும் பகையரசனை, ஞானவேந்தன் வெற்றி கொள்ளும் சிறப்பினை, மிக்க சுவை அமையப் பின்வருமாறு உருவக முறையில் உணர்த்துகின்றது; ஞானவேந்தன் சென்னியில் ஞானமுடியைத் தரித்துள்ளான். அதனில், அருளாசிரியனது திருவடியாகிய விலைமதிப்பரிய பெருமணி பதிக்கப்பெற்று ஒளிர்கின்றது. அவ்வேந்தன்பால் புத்தியே அமைச்சனகப் பணி புரிகின்றது. மேலும் அவன், பற்றின்மையையே படை வீரராகவும், பொறுமையையே தேராகவும், அருளுபதேசத்

"A great thought is a great boon, for which God is to be first thanked, then he who is the first to utter it, and then, in a lesser, but still in a considerable degree, the man who is the first to quote it to us." — *Bovee.*

தினையே குதிரையாகவும். அவாவறுத் தலையே யானையாகவும் கொண்டுள்ளான். அத்தகைய ஞானவேந்தன், அஞ்ஞானம் ஆகிய பகையரசன்மீது படையெடுத்து, அழுக்காறும் அவாவும் ஆகிய அவனது காவற்காட்டினை வெட்டி எறிகின்றான்; குடும்பப் பிணிப்பு ஆகிய அகழியினை இடித் துத் தூர்க்கின்றான்; தன்மதிப்பும் அகங் தையுமாகிய நெடியமதிலைப் பொடியாக்கு கின்றான்; இருவினையாகிய தலை நகரை எரிபரந் தெடுக்கின்றான்; இவற்றினை லெல் லாம், அஞ்ஞானப் பகைவன் தோற்றுத் தேய்ந்தொழிய, ஞானவேந்தன் வென்றி யுற்று விளக்கம் பெறுகின்றான். இங்நிலை யில்,

*"ஞான மாமுடி சுமந்த கோமகன்*
*பரமா னந்தப் பைதிரம்*
*வளையாச் செங்கோல் ஓச்சினன் நெடிதே! (33)*

என ஞானமிர்தம், ஞானப்பேரரசன் எய் திய வெற்றித்திறனைப் புறப்பொருள் இலக் கணத் துறைப்பொருட் கருத்துக்கள் அமையச் சுவை மிக நவிலும் முறை, பெரிதும் பாராட்டி மகிழத்தக்க தொன்று கத் திகழ்கின்றதன்றோ?

**உயிரியல்பு :**

இங்ஙனமே, பசு எனப்படும் உயிரின் இயல்பைப் பயில்தொறும் நயனமையும் வகையில், ஞானமிர்தம் பின்வரும் முறை யில் தெளிவுறுத்துகின்றது. "உடலில் அறிவாகிய உயிர் ஒன்றுளது; உடல் அறி விலது ஆதலின், குடம்போலும்; அறிவில தாகிய குடம் அறிவுடைய ஒருவன் இயக்க இயங்கும். இல்லையேல் வாளா கிடக்கும். அதுபோலவே அசேதனமாகிய உடலும், சேதனமாகிய உயிர் இயக்கிய வழியே இயங்கும். இன்றேல் இயக்கமற்றுப் பிண மாக வீழ்ந்துபடும். இங்ஙனம் உடலின் இயக்கத்திற்குக் காரணமாய் நிற்பது எதுவோ, அதுவே புற்கலன் (உயிர்) எனத் தெளிக" என்கின்றது ஞான மிர்தம்!

*"உழிதரல் இயைந்த பழிதரு ஆகத்து*
*அழியா அறிவன் கழியான்; ஒழியாச்*
*சேதனம் அன்மையின் கடம்போல்; ஆதலின்*
*எய்யாது இயற்றியான் எவன்? அவன், பொய்யாப்*
*புற்கலன் என்க! ஒற்கமில் சேதனம்*
*அறிவு, வறிது அசேதனம் என்ன*
*நெறியறி புலவர் அறிவறி வகையே!" (11)*

**உலகப் படைப்பு :**

"நிலம் முதல் நாதம் ஈறுக உள்ள உலகனைத்தும் காரியப்பாடாக இருக்கின் றன. இறைவனே அறிவு வடிவினனான தலைவன். ஆதலால், அவனுக்கு இவை யனைத்தும் போகம் ஆதல் இல்லை. காரி யப்பாடாக உள்ள தத்துவத் தொகுதிகள், தாமே தமக்குப் போகம் ஆகமாட்டா. தனக்குவமை இல்லாத தலைவனாகிய இறைவனும், இவற்றை ஒருபயன் குறித் தன்றி வீணே படைத்திருக்க மாட்டான். எனவே, பாரிசேடம் என்னும் அனுமானத் தால், பதிபசு பாசம் என்னும் மூன்றனுள் எஞ்சி நிற்கும் பசுவாகிய உயிரின் பொருட்டே உலகம் படைக்கப்பட்டதாகல் வேண்டும்!"

*"காரியம் காசினி யாதி; ஏரியல்*
*ஈசன் கருத்தா; இவற்கிது போகம்*
*ஆதல் செல்லாது! அகன்றுயர் கருமம்*
*தானே நுகர்தல் செல்லாது! ஆனது*
*என்னை? செய்தது என்னின், அன்னே*
*கொன்னே செய்யான் தன்நேர் இல்லான்!*
*பாரிசேடம் அதனிற் பரனுக்கு!*
*ஏரியல் பரன்பசு என்றறி இனிதே! (12)*

**அளியரோ அளியர் :**

இத்தகைய தத்துவ சாத்திரக் கருத் துக்களையே யன்றிச் சாதாரண உலகியற் செய்திகளையும், சுவை ததும்ப நவிலுத லில் ஞானமிர்தம் இணையற்ற தொன்றாக இலங்குகின்றது; "உலகில் மக்கட்கு இன்ப துன்பமாக வருவன அவரவர் செய்த நல்வினை தீவினைகளே. நல்வினை தீவினை கள் ஒழிந்தால் இன்ப துன்பங்களும் ஒழி யும். பிறர் தமக்குச் செய்த நன்மையையும் தாம் பிறர்க்குச் செய்த நன்மையையும் அறிவால் ஆராய்ந்து பார்த்து, நமக்குரிய தனை அவர்கள் கொடுத்தனர் என்றும், அவர்களுக்கு உரியதனை நாம் கொடுத் தோம் என்றும் எண்ணி, ஊழ்வகையினை யுணர்ந்தொழுகுதல் அனைவர்க்கும்கடமை. 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்பத னைத் தெளியாத சிலர், தமக்கு வரும்

துன்பங்களுக்குப் பிறரே காரணம் எனப் பிறழ எண்ணி நொந்துகொள்வர். நாயானது தன்மீது பட்ட குறுந்தடியை நோக்கிக் குரைத்துச் சினவாது, அதனை எறிந்த அறிவிலாச் சிறுவன் மாட்டே சினந்து குரையா நிற்கும். நாய்க்குள்ள இவ்வறிவு தானும் இன்றி, மக்கள் சிலர் தாம் எய்தும் துன்பங்களுக்குக் காரணமான தமது வினையினை நொந்து கொள்ளாமல், வீணே மனிதர் பிறரைப் பகைத்துக் கொள்வர். அவர்கள் மிகவும் இரங்கத் தக்கார்''.

*"அளியரோ அளியர் தாமே! தெளியா*
*இளையோன் துரந்த குணில்வாய்ச் செல்லாது*
*இளையோற் சினவும் வளைவாய் ஞமலியின்*
*அளியரோ அளியர்! என்னை?*
*ஒளிகொள் காரணம் உன்னு தோரே"* (36)

**வஞ்சர் ஞானம் :**

"நல்ல கருத்துக்களைப் பிறருக்குச் சொல்லுதல் சிறந்ததொரு செயலேயாம். எனினும், அங்ஙனம் சொல்லுங்கால் 'இவர் தக்கார்' 'இவர் தகுதியிலார்' என்று ஆராய்ந்து பார்த்துத் தகுதியுடையவர் கட்கே சொல்லுதல் வேண்டும். "நன்றாற்றல் உள்ளும் தவறுண்டு; அவரவர் பண்பறிந்து ஆற்றாக் கடை" என்பது திருக்குறள். நீரினைப் பசுவானது பருகினுற் பாலாக மாறி நலஞ் செய்யும்; பாம்பொன்று பருகின் நஞ்சாக மாறித் தீங்கு பயக்கும்.''

*"நஞ்சே, பாம்புண் தீநீர் மாதோ!*
*அஞ்செஞ் சேதா உண் அறல் அமிழ்தே:*
*விஞ்சை வேந்தர் ஞானம் வீடே,*
*வஞ்சர் ஞானம் வடுவொடு படுமே!* (49)

**ஞானிகள் நிலை :**

ஞானிகளின் சிறந்துயர்ந்த நலத்தை ஞானமிர்தம் பின்வருமாறு சுவைமிக நவிலுகின்றது! "செஞ்சாந்து எறியினும் செதுக்கினும் போழினும், நெஞ்சு ஓர்ந்தோடா நிலைமையர் ஞானிகள். களிப்பும் கலுழ்ச்சியும் அவர்கள்பாற் காணப்படா. ஞானிகட்கு ஒரோவழிக் கலுழ்ச்சி யுண்டெனின், அது தமக்குத் "தீங்கு செய்தோர் நீங்கா நிரயத்து அழுந்துதற்கு ஏது வாயினமே" என நெஞ்சம் அழிந்து பரிவுறுவதேயாகும். மந்திர வலிமையும் மருந்தின் ஆற்றலும் வாய்ந்தவர்பால் பாம்பின் நஞ்சு ஊறு பயவாதவாறு போலவும், தாமரையின் இலையில் தண்ணீர் படியாத தன்மைபோலவும், உப்புக் கடலில் தோன்றி யுலவி வாழ்ந்தபோதிலும் மீன்கள் உப்புடன் ஒன்ருத தன்மைபோலவும், உலகியலுணர்வு ஞானிகளை ஒரு சிறிதும் பற்றுவதில்லை.''

*"ஞான மாக்கழல் மாணுற வீக்குநர்*
*விடய வேலைத் தடையின்று படியினும்*
*தீதொடு படியுநர் அல்லர்*
*மாதுயர் கழியுநர் நீதி யானே.* (44)

அஃது எங்ஙனமெனின், ஞாயிறு தன் கதிர்களால் தூய பொய்கை நீரையும், தூய்தல்லாத சகதி நீரையும் ஒருங்கே பருகுமாயினும், அதற்கு ஒரு குற்றமும் எய்துவதில்லை. அகில் சந்தனம் முதலிய நறுமணங்கமழும் மரங்களையும், காஞ்சிரம் காஞ்சொறி முதலிய நச்சுச் செடி கொடி மர வகைகளையும் ஒருங்கே எரிக்குமாயினும், நெருப்பானது அவற்ருல் யாதொரு கெடுதியும் அடைவதில்லை; அங்ஙனமே, அறிவு அனல் கெழுமிய நெறியினோர், விடயங்களில் அழுந்திய வழியும் சுடர்விட்டொளிர்வர் (45).

**ஞானிகளின் இயல்பு :**

ஞானிகள் நம்மனோரை ஒப்பவே, உடலும் உணவும் உறக்கமும் பிறவும் உடையராகக் காணப்படினும், உலகியற் பொருள்களை ஞானிகள் நுகரும் முறைக்கும், நம்மனோர் நுகரும் முறைக்கும் இடையே மிகப் பெரிய வேறுபாடுண்டு. ஒருவன் தனது மகளைத் தழுவுங்காலும், மனைவியைத் தழுவுங்காலும் எய்தும் மன நிலைகள் தனித்தனி வெவ்வேருனவை; தனது தனங்களைக் குழந்தை தைவரும்போதும், கணவன் வருடும்போதும், ஒரு மாதரார் எய்தும் உணர்வு நிலைகள் அறவே வேறுபட்டு விளங்கும். இவற்றைப்போலவே, அறங்கரை நாவின் ஆன்ருேர் உள்ளமானது உலகியற் பொருள்களை நுகருங்கால், நம்மனோர் உள்ளங்கள்போல இழிந்து செல்லாமல், சிறந்துயர்ந்த செவ்விபெற்றுத் திகழும் (42).

ஞானமிர்தம் விளக்கும் அழகிய அரிய இக்கருத்தினை வியந்து, ஆசிரியர் சிவ ஞான சுவாமிகளின் அரும்பெறல் மாணவ ராகிய கச்சியப்ப முனிவர்,

*"முப்பொருள் இயல்பும் உள்ளவா றுணர்ந்து*
*முழுத்தபே ரறிவினுள் விழித்தோர்,*
*இப்புவி யவர்போல் வினைபல குயிற்றி*
*இருப்பினும் வினைப்பயன் எய்தார்!*
*கைப்பட மனையைப் புதல்வியைத் தழூஉங்காற்*
*கருத்துவேற் றுமையும், கைவருடச்*
*செப்பிள முலையோர் மகன்பதிக்கு அளிக்கும்*
*பயத்தின்வேற் றுமையும், ஒன் றன்றே!"*

எனவரும் தணிகைப் புராணப் பாடலுள் விதந்தெடுத்துப் போற்றி அமைத்திருத்தல் அறிந்து மகிழ்தற்குரியது.

### மெய்கண்ட நூல்கள் :

(1) ஆசிரியர் மெய்கண்டார் பெருமா னின் காலத்திற்கும் (கி. பி. 1232), சிறிது முன்னர் இயற்றப் பெற்றதெனக் கருதப் படும் ஞானமிர்தம் (கி. பி. 1185) என்னும் நூலினது சொற்பொருட் கருத்துக்கள், சிவஞான போதம் சிவஞான சித்தியார் முதலிய நூல்களில் ஆங்காங்கே அமைந்து செறிந்து கிடந்து விம்மிதம் விளைக்கின்றன. 'தாலிபுலாக நயம்' பற்றி ஈண்டு அதற்குரிய ஒரு சில சான்றுகளை மட்டுமே கண்டு அமைதல் சாலும். "நெல்லிற்குமியும் நிகழ் செம் பினிற் களிம்பும் சொல்லிற் புதிதன்று தொன்மையே" எனவரும் சிவஞான போதக் கருத்து,

*'பொறிதீர் புற்கலன் விழுமலம் புணர்தற்கு*
*அற்றே சொற்றது அணுதி! ........"* (9)

*'பேணிற் செம்பிற் பெருகிருந் துகள்என*
*அறிவினை மறைத்தல் அணிமலம்........."* (18)

எனவரும் ஞானமிர்த வரிகளில் அமைந் துள்ளது.

### ஆணவமும் மாயையும் :

(2) "மாயா தனுவிளக்கா மற்றுள்ளம் காணுதேல் ஆயாதாம் ஒன்றை" எனச் சிவஞானபோதமும்; "போதகாரியம் மறைத்து நின்றது புகல் மலங்காண். காதலால் அவித்தை சிந்தத்தரும் கலை யாதி மாயை. ஆதலால் இரண்டும் சோதி இருள்என வேறும் அன்றே!" எனச் சிவ ஞான சித்தியாரும்; "புகலும் மலம் ஒழித் தற்குக் கலாதிமுதல் மாயை பொருந்தி யிடும். அருளை மலம் உயிர்கள் சாராமல் மறைக்கும். இகலிவரும் இவையுணரின் இருள்வெளியாந் தன்மை எய்தும்" எனச் சிவப்பிரகாசமும் கூறும் கருத்தை,

*"மறைத்தற் றெழில்பூண் பதுவும், அதனைக்*
*குறைத்தற் கெய்திக் குலவுவதும், ஓரிடை*
*இரண்டல என்பதென்? இருள்—இருள் இரிசுடர்*
*முரண்தர நின்ற முழுமலம், மாயை."*

என ஞானமிர்தம், நயமுற நன்கினிது விளக்குகின்றது.

### இறைவனும் காலமும் :

(3) இங்ஙனமே, "முத்தொழில் செய் யும் இறைவன் உருவுடையனுதல் வேண் டும். உடம்பின்றி வினைசெய்தல் கூடாமை யான்" என்பாரை மறுத்து, "நோக்காது நோக்கி நொடித்தன்றே காலத்தில் தாக் காது நின்று இறைவன்" எனச் சிவஞான போதமும்,

*"ஞாலமே ழினையும் தந்து*
*நிறுத்திப்பின் நாசம் பண்ணும்*
*காலமே போலக் கொள்நீ*
*நிலைசெயல் கடவுட் கண்ணே"*

எனச் சித்தியாரும் கூறுவதனை,

*'அறிமதி! காலம் அமூர்த்தம், உறுபலம்*
*தரும். அதுபோலத் தலைவன். மூர்த்தத்*
*திரிபிலன் ஆயினும், இன்தொழில் பொருவு இரி*
*இச்சையின் இயற்றும்.'* (62)

என ஞானமிர்தம் நவிலுதல் காணலாம்.

### இறைவன் நிருவிகாரி :

(4) இவ்வாறே 'வள்ளலாற் பொன் வாள் அலர்சோகம் செய்கமலத்து ஆம்' எனச் சிவஞானபோதமும்; 'சாற்றிய கதி ரோன் நிற்கத் தாமரை அலரும். காந்தம் கான்றிடும் கனலை. நீரும் கரந்திடும் காசினிக்கே' எனச் சித்தியாரும்; 'எல் லாம் வருவிப்பன் விகாரங்கள் மருவான். வானின் முந்து இரவி எதிர் முளரி அலர் வுறும் ஒன்று. அலர்வான் முகையாம் ஒன்று, ஒன்று உலரும் முறையின் ஆமே'

எனச் சிவப்பிரகாசமும் ஆகியவற்றில் முறையே உணர்த்தப்படும் அரிய கருத்து,

*'அடையான் விகாரம் ஆயினும் சுடரவன்*
*சுடர்வீழ் தாமரைத் தோடுஇனிது அலர்த்*
*தவும்,*
*மற்றவை குவிப்பவும் உலர்த்தவும் கொற்றக்*
*கிரணத் ததுஎன, அரணமில் கூற்றின்*
*முரண்தொலை ஒருவனும், முரியாச் சத்தியின்*
*அண்டர் அண்டம்மற்று எண்தரல் இடைவ*
*செய்தற் கண்ணும் திரிவிலன்' (63)*

எனவரும் ஞானமிர்தப் பகுதியில் புலப் படுத்தப் பெற்றுள்ளது.

### அத்துவித இயல்பு :

(5) 'பண்ணையும் ஓசையும் போலப் பழம் அதுவும் எண்ணும் சுவையும்போல் எங்குமாம் அண்ணல்தாள்' எனச் சிவ ஞானபோதம் விளக்கிக் கூறும் பதிப் பொருளின் அத்துவித வியாபகத் தன் மையை,

*'இன்ன தன்மையன் எனையன்? என்றினிது*
*அன்னோற் றேரின், அம்ம! மின்னவிர்*
*பதும ராகப் புதுவெயில் நீழல்செய்*
*மதியிற் றண்மை ஞெலிகோல் வன்தழல்,*
*மடநடை நல்லான் வனமுலை வந்த*
*பாலில், தீநெய், பழத்தின் இன்சுவை,*
*பூட்சி ஆருயிர், பொருள்உரை, எள்நெய்*
*கடிமலர் கஞலிய முடியா வாசம்,*
*விம்மிதம் என்னென்று இசைக்குவம் மற்றே?*
*நிலம்நீர் தீகால் வெளிஉயிர் யாவும்*
*அவையே தான், அவை தானே யாகி*
*விரவியும் விரவா வீரம்...(56)*

என ஞானமிர்தம் இன்சுவை அமையப் பாராட்டி நவில்கின்றது.

### ஆணவமலம் தேய்தல் :

(6) அம்மட்டோ! 'அங்கித் தம்பனை வல்லார்க்கு அனல் சுடாதாகும். ஔடதம் மந்திரங்கள் உடையார்க்கு அருவிடங்கள் ஏறு. எங்கித்தைக் கன்மமெலாம் செய் தாலும் ஞானிக்கு இருவினைகள் சென் றணையா' எனவும்; 'உரியமலம் ஔடதத் தால் தடுப்புண்டவிடமும், ஒள்ளெரியின் ஒளி முன்னர் இருளும், தேற்றின் வருபரல் சேர் நீர்மருவு கலங்கலும்போல் ஆகி, 'மா யாதே தன்சக்தி மாய்ந்து தேயும்' எனவும் ஆணவமலம் பற்றிச் சிவஞான சித்தியார் கூறும் உண்மையினை,

*"மாமலை யன்ன மரந்தெறும் கடுங்கனல்*
*தாமரை யன்ன தளிர்க்கை தாங்கினும்*
*மந்திர மாக்கட்கு அந்தரம் யாதே?*
*விடங்கெழு பெருவலி யுளங்கொள் மந்திரத்து*
*அடங்கிய தன்மையும் அற்றே! குடங்கர்க்*
*கலங்குநீர் இல்ல நலங்கிளர் விழுக்காழ்*
*துணைந்த மாறென இணங்கிறந் தகன்ற*
*பாசப் பெருவலி தடுத்தனர்!' (52)*

என ஞானமிர்தம் நலந்திகழத் தெளிவித் துள்ளது.

### இறைவனும் குயவனும் :

(1) இனி இவைபோல்வனவே யன்றி, ஆசிரியர் சிவஞான சுவாமிகள் தமது பேருரை சிற்றுரைகளில் உரைநடைப் படுத்து வரைந்தனபோலக் காணப்பெறும் ஞானமிர்தப் பகுதிகளும் பலவாகும். முனிவரரின் சில உரைப்பகுதிகளுக்கு மூலங்கள் போல, ஞானமிர்தப் பகுதிகள் ஆங்காங்கே காணப்படுகின்றன.

"இஃது இவ்வாறுக என எண்ணுதலா கிய சங்கற்ப மாத்திரையாற் செய்வ தூஉம், கரணத்தாற் செய்வதூஉம் என வினை முதல் இருவகைப்படும். குயவன் கரணத்தாற் செய்வதன்றிச் சங்கற்ப மாத்திரையாற் செய்யமாட்டான். இறை வன் சக்தி அவ்வாறன்றிச் சங்கற்ப மாத் திரையான் எல்லாத் தொழிலும் செய்யு மாதலின், இறைவன் மாட்டுக் குயவன் எய்தும் குற்றங்கள் இயைதல் இல்லை" எனவரும் சிவஞான சுவாமிகளின் சிறந்த உரைப் பகுதி,

'பொங்கிய வினைஇரு வகைத்து, சங்கற்
பத்தொடு கரணத்து; அலர்கடம் குலாலன்
எற்படு சங்கற் பத்தின் முற்பட
இயற்றலன்; இறைவன் சங்கற் பத்தின்
மயக்கற விந்துவைத் துயக்கறக் கலக்கல்
செய்வன், நோவான்...' (60)

எனவரும் ஞானமிர்தப் பகுதியினை உட்கொண்டதாதல் உணரற்பாலது.

**பாசஞானம் :**

(2) 'ஆன்மாப் பசுத்துவம் நீங்கிச் சிவத்துவம் பெற்றவழிப் பசுகரணமும் சிவ கரணமாயவாற்றான், அவ்வழிப் பசு ஞானத்தோடு ஒப்பப் பாசஞானமும் உப்பளத் தடுத்த பொருள்போலச் சிவஞானமேயாம் என்பது சிவாகம நூற்றுணிபு' எனச் சுவாமிகள் எழுதியருளியிருக்கும் பேருரைப் பகுதி,

*.. ..................''காயல்*
*உப்புவிளை பழனத்துஉற்ற பொற்கோட்டு*
*உலவையின் அறிக மாதோ*
*கலைவ லாளர் நிலைபுணர் பண்பே''* (71)

எனப் போதரும் ஞானமிர்த வரிகளை நினைவூட்டி நிற்கின்றது.

**வினையும் இறைவனும் :**

(3) இவ்வாறே ''அற்றேல், வினையே அமையும்; இறைவன் வேண்டா வெனின், அற்றன்று, வினையும் மாயைபோலச் சடமாகலிற் கூட்டுவானையின்றி அமையாதென்க. பால் சுரந்து கன்றினை வளர்ப்பவும், காந்தம் இரும்பை வலிப்பவும் காண்டலிற், சடமும் கூட்டுவானையின்றி அமையுமென்பது பொருந்தாது; பால் சுரந்து வளர்க்குமாயின், உயிர் நீங்கிய ஆனின் முலையிலும் பால் சுரத்தல் வேண்டும். அஃதின்மையிற் சேதனமாகிய ஆவையின்றி அமையாமை உணர்க. காந்தம் இரும்பை வலித்தலும் அவ்விரண்டினையும் ஒன்று சேர்த்து இயைவிக்கும் சேதனனை இன்றி அமையாமை உணர்க'' எனச் சுவாமிகள் தமது பேருரைக்கண் தெளிவுறுத்தி யிருக்கும் செய்தி,

*''கன்றுவளர் பாலினும் சென்றின்று ஈன்கோச்*
*சேதனம் ஆதலின்; ஓதிய உயிர்போஒஞ்*
*சுரபி தீம்பால் சொரியின், புரையில்*
*தீம்பால் வளர்த்தது அன்றுஎன ஓம்பாது*
*உரையா டுநர்எவர்? வரையா அறிவன்*
*செயல்என, இரும்பை அயல்உற உய்க்கும்*
*காந்தம்என்(ற) எடுத்துக் கோளும் வாய்ந்*
*தன்று !*
*இரண்டையும் இயைக்கும் முரண்தகு*
*சேதனன்;*
*இன்றுஎனின், அவைசென்று ஒன்றா !''* (58)

என்னும் ஞானமிர்த வரிகளை உன்னியுணர்ந் தெழுதியதாகும் எனலாம். இன்னோரனையவை பற்பலவுள :

**சுருக்கமும் விரிவும் :**

ஞானமிர்த நூலின் பலதிற நலங்களுள், சிவஞானபோதம் சிவஞான சித்தியார் போன்ற சிறந்த நூல்கள் குறிப்பாகவும் சுருக்கமாகவும் உணர்த்திச் செல்வனவற்றை, விரிவாகவும் விளக்கமாகவும் சுவைகெழும வகுத்துணர்த்தும் திறமும் ஒன்றாகும்.

*''அந்தக் கரணம் அவற்றின்ஒன் றன்று; அவை*
*சந்தித்தது, ஆன்மாச் சகலமலத் துணராது;*
*அமைச்சு அரசு ஏய்ப்பநின்று அஞ்சவத்*
*தைத்தே''*

எனச் சிவஞான போதத்தினுள்ளும்,

''படைகொடு பவனிபோதும்
பார்மன்னன், புகும்போ தில்லில்
கடைதொறும் விட்டு விட்டுக்
காவலும் இட்டுப் பின்னர்
அடைதரும் தனியே அந்தப்
புரத்தினில்; அதுபோல் ஆன்மா
உடலினில் அஞ்சவத்தை உறும்,
உயிர் காவல் ஆக.''

எனச் சிவஞானசித்தியாருள்ளும் சுருக்கமாகக் குறிப்பிடப் பெற்றுள்ள கருத்தை ஞானமிர்தம் மேலும் சுவைமிக அழகோங்க விரிவாகக் கூறுகின்றது. சிவஞான போதம் 'அமைச்சரோடு கூடிய அரசன்' எனவுரைத்து உருவகம் செய்தது; சுருங்க அமைந்த அத்தொகை யுருவகத்தினைப் 'படைகொடு பவனிபோதும் பார் மன்னன்' என்னும் தொடரால் மேலும் சிறிது விரியுருவகமாக்கி விளக்கியது சித்தியார்; அதனை மேலும் தொடர்ந்து, முற்றுருவகமாகவே முடித்துக் காட்டி விடுகின்றது ஞானமிர்தம்!

## முற்றுருவகம் :

ஆன்மா அரசன், உடல் அரண்மனை, புருவநாடு திருவோலக்க மண்டபம். கண்டம் நாடக அரங்கு. இருதயம் மந்திராலோசனை மண்டபம். உந்தி அந்தப்புரம். மூலாதாரம் பள்ளியறைக் கட்டில். இவ்விடங்களில் முறையே நிகழும் செயல்கள், நனவு கனவு உறக்கம் பேருறக்கம் உயிர்ப்படக்கம் (சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம்) என்னும் ஐந்தவத்தைகள். இவ்வவத்தைகளுக்கு முறையே 35, 25, 3, 2, 1 எனக் கருவிகள் தொழிற்படும். மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் அந்தக்கரணங்கள் நான்கும் அமைச்சர்கள். காலம் நியதி கலை வித்தை அராகம் என்பன கவசம். நிலம் நீர் தீ வளி வெளி என்னும் ஐம்பெரும் பூதங்களும் தேர். மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் அறிகருவிகள் ஐந்தும் முறையே ஒற்றர், சூதமாகதர், தூதுவர், புரோகிதர், மெய்காப்பாளர்! வாக்கு பாதம் பாணி பாயுரு உபத்தம் என்னும் தொழிற்கருவிகள் ஐந்தும், படைத்தலைவர். அறிகருவிகளுக்கு நுகர்பொருளாகிய சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்பன, அகப் பரிவாரம். தொழிற்கருவிகளுக்கு நுகர்பொருள் ஆகிய உரை நடை கொடை போக்கு இன்பம் (வசனம் கமனம் தானம் விசர்க்கம் ஆனந்தம்) என்பன, புறப் பரிவாரம். பிராணன் அபானன் உதானன் வியானன் சமானன் நாகன் கூர்மன் கிருகரன் தேவதத்தன் தனஞ்சயன் என்னும் பத்துவகை வாயுக்களும் உறுதிச் சுற்றம். இங்ஙனம் ஞானமிர்தம் (16) ஏற்றபெற்றி, இலக்கியச் சுவையமைய முற்றுருவகம் செய்து மொழிந்திருத்தல், அறிந்தின்புறற்பாலது. அன்றியும்,

*"சாக்கிரம் முப்பத் தைந்து*
*நுதனிலில்; கனவு தன்னில்*
*ஆக்கிய இருபத் தைந்து ;*
*களத்தினிற் சுழுனை மூன்று*
*நீக்கிய இதயந் தன்னில்*
*துரியத்தில் இரண்டு : நாபீ*
*நோக்கிய துரியா தீதம்*
*நுவலின், மூலத்தின் ஒன்றே!"*

எனவரும் சிவஞானசித்தியார் செய்யுட் கருத்தும், ஞானமிர்தத்தின் (16) இப் பாடலில், நயம்பொலிய நன்கினிது விளக்கப்பட்டுள்ளமை காணலாம்.

## முடிவுரை :

இத்தகைய சுவைமிகு கருத்துக்கள் பலவற்றை அழகுறத் தெளிவிக்கும் இவ்வரிய சமய தத்துவ நூலை, நம்மனோர் அனைவரும் செவ்விதிற் கற்றுணர்ந்து தக்கவாறு போற்றிப் பயன் கொள்ளுதல் வேண்டும்.

—ஆசிரியர்

# திருக்குறள் மாட்சி

அருட்டிரு. அழகரடிகளார்,
திருக்குறள்பீடம், மாம்பாக்கம் குருகுலம், மதுராந்தகம்.

திருக்குறளில் அன்பு வைத்து அதன் கருத்துக்களை வாழ்க்கையில் விளங்க வைப்பதற்கு, முயல்வோரும் பணி செய்ய முன் வருவோரும் தெய்வம் என்றே மதிக்கப்படுதற்குரியவர். திருக்குறள் தொண்டு செய்வோர், உண்மையில் நாட்டுத் தொண்டு செய்பவரே ஆவர்.

மூல ஒலி :

திருக்குறள் தமிழ் நூல்களுக்கு மட்டுமன்றி, இந்திய நூல்களுக்கு மட்டுமன்றி, உலக நூல்களுக்கும் தலைமை தாங்கி விளங்குகிறது. தமிழ் நாகரிகம் உலக நாகரிகங்களின் மூல ஒளி என்பது இதனாலும் துணியப்படும்.

முன்னும் இல்லை :

திருக்குறளைப்போன்ற ஒரு வாழ்வியல் நூல் அதற்கு முன் எழுந்ததில்லை என்று தெரிந்தது. திருவள்ளுவ மாலைச் செய்யுள் ஒன்று இவ்வுண்மையை விளக்குகிறது. மாணி பூதனார் என்பவர் அச்செய்யுளை இயற்றியிருக்கிறார். திருவள்ளுவரின் வாயால் கேளாதனவெல்லாம் கேட்டு அறம் பொருள் இன்பங்களை அறிந்தோம்; வீடு தெளிந்தோம் என்று அவர் தமிழ் வளர்த்த பாண்டிய மன்னனை நோக்கிக் கூறுகின்றார். மாணியாயிருந்த பூதனார் இப்படிக் கூறுகின்றாராதலின், நூல்களை நன்கு அலசி ஆராய்ந்தே அவர் அவ்வாறு முடிவு கட்டினார் என்று அறியலாம்.

பின்னும் இல்லை :

திருக்குறள் தோன்றிய பின்பும் அத்தகைய ஒப்பற்ற நூல்ஒன்று இதுவரையில் எழுந்ததில்லை. ஏனென்றால் பின் எழுந்த சிறந்த நூல்களெல்லாம், திருக்குறளைத் தலைமணியாக மதித்துப் போற்றித் தத்தம் முடியில் அணிந்து மகிழ்கின்றன.

அருளாசிரியரென்றும் சமயகுரவரென்றும் விளங்கிய பெரியோர்கூட இதற்கு விலக்கல்லர்; காப்பியத் தலைவர்களும் இங்ஙனமே.

தமிழிலக்கண மாமுனிவர் தொல்காப்பியர். தமிழாகமத் தலைவர் திருமூலர். சைவ சமய அருட்குரவர் திருஞான சம்பந்தர். வைணவ சமய அருட்செம்மல் நம்மாழ்வார்.

திருக்கயிலை மரபின் புறச்சந்தான முதல்வர் மெய்கண்டார். தில்லை வாழ்ந்தணருள் ஒருவராய்ச் சாத்திரங்கள் பல அருளிய தில்லைச்சான்றோர் உமாபதி சிவம். தொண்டர்சீர் பரவிய குன்றைப்பிரானும் சேக்கிழார் முதலியோரும், சமண் மதக் கொள்கைகள் சேர்த்துச் சிலம்புதவிய இளந்துறவி இளங்கோவடிகள், புத்தமதக் கொள்கைகளை விரித்து மணிமேகலை வழங்கிய சாத்தனார், இராம காதைக்கே தம்மை ஆட்படுத்தி விட்ட அரும்பெரும் கவிஞர் கம்பர், முதலியோருமாகத் தக்கோர் பலரும் ஒருங்கே திருக்குறள் வழிநின்று, அதனைத் தம்பெருநூல்களிடையே கொண்டுவந்து உலகுக்கு விருந்தாக்கினார்.

திருக்குறளுக்குப் பின்னும் அப்படி ஒரு நூல் எழுந்ததில்லை என்பதற்கு இதனிலும் சான்றுவேறு என்ன வேண்டும்?

வேண்டும் என்றால் நத்தத்தனர் செய்யுள் ஒன்றை இங்கே நினைவு கூரலாம்.

"ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததன்பின்
—போய்ஒருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ;"

என்பது அவர் கேள்வி.

திருவள்ளுவர் வாயாற் கேளாதன வெல்லாம் கேட்டுத்தெளிவு பெற்றதாக ஒருவர் கூற, இன்னொருவர், 'திருக்குறள் பகர்ந்ததன் பின் போய் ஒருத்தர் வாய்க் கேட்க வேறு நூல் எங்கிருக்கிறது' என்னுங் கருத்திற் பேசுகிறார்.

மிக்கதும் இல்லை :

ஒத்த நூலே இல்லையென்றால் திருக்-குறளுக்கு மிக்க நூல் எங்கிருக்கப் போகிறது.

"முப்பாலில் மிக்க மொழியுண்
டெனப்பகவர்ரார்
எப்பா வலரினும் இல்"

என்று இவ்வுண்மையையும் 'சிறு கருந் தும்பி யார்' கூறிவிட்டார். தும்பியான தனால் நூல்மலர் பலவும் தாவி உண்மை கண்டுபிடித்திருப்பார்போலிருக்கிறது.

தெய்வத் திரு :

இச் சிறப்புக்களுக்கெல்லாம் முக்கிய காரணம், 'திருவள்ளுவப் பெருமான் இறை திருவருளை நிறையாகப்பெற்ற பேரருட்குரவர்' என்பது. 'தேவர்' என்றும், 'தேவிற் சிறந்தவர்' என்றும், 'திருத்தக்க தெய்வப்புலவர்' என்றும் பெயர் பெற்றுப் புகழோங்கியவர் அவர்.

தெய்வம் என்றே போற்றப் பெற்றவர் நூல் எப்படி இருக்கும்: அதனாலேதான் அவர் பெயரும், அவர் நூலும் 'திரு' என்னும் அடைமொழி பெற்று அவர் காலத்திலேயே ஓங்கி வழங்கலாயின.

'கல்லாடம்' இயற்றியவர் ஒன்று கூறு கிறார். தெய்வத் தன்மை வாய்ந்த திருக்-குறளுக்கு எத்தனையோ தமிழ்ப் பெரியோர் சிறப்புப் பாயிரச் செய்யுள் செய்திருக்கின் றனர். என்றாலும், முதன் முதலில் சிறப்புப் பாயிரம் வழங்கிய சிறப்பு, முக்கட் பெரு மானுக்குரியது, என்பது அவர் கருத்து.

"வள்ளுவர் தமக்கு வளர்கவிப் புலவர்முன்
முதற்கவி பாடிய முக்கட் பெருமான்"

என்பது கல்லாடம். கல்லாடனார் கருத்து அப்படி இருக்கிறது.

அரியது என்றால் தெய்வத் தன்மை ஏற்றிவிடுவது இந்த நாட்டின் வழக்கத்தால் என்று எளிதாகவும் இதனை எண்ணி விடலாம். ஆனால், அரியது தெய்வத் தன்மையுடையதென்பது பொய்யில்லையே. ஓரளவு அருமையுடையதற்குப் பேரளவு தெய்வத்தன்மையைச் சிலர் ஏற்றி விடலாம். அத்தகையதா திருக்குறள்? 'அறிவியல்' 'அரசியல்' நூல்களுக்கும் ஆதார நூலாகவன்றோ அது மதிக்கப்படு-கின்றது.

மறை நூல் :

உண்மையை நோக்கினால், எல்லாத் துறையினரும் விரும்பி ஏற்கக்கூடிய வேத நூலாகவன்றோ திருக்குறள் திகழ்கிறது! இலக்கியம் என்றோ, நீதிநூல் என்றோ, அறிவு நூல், அரசியல் நூல், கலை நூல், பொருள் நூல் என்றோமட்டும், திருக்குற ளைக் கூறுவதெல்லாம் அதன் தகுதிக்குக் குறைவே தருகின்றது.

திருவள்ளுவரை மனித நிலையில் எளி தாக எண்ணிப்பேசுகிறவர் ஒருவன் இருப் பானானால் அவன் பேதையே என்று ஒருவர் அங்கலாய்த்துக்கொள்கிறார். மாமூலனார் ஒரு சிறந்த மேதை. அவர்தாம் அப்படி இடித்துப் பேசுகிறார்.

"திருவள்ளுவர் அறம் பொருள் இன்பம் வீடு தெளிவித்த தெய்வம்; அவரை மனித நிலையில் வைத்துப் பெயர் கூறு வோன் பேதை" என்னுங் கருத்தில் அவர்,

"அறம்பொருள் இன்பம்வீடு என்னும் அந் நான்கின்
திறம்தெரிந்து செப்பிய தேவை —மறந்தேயும்
வள்ளுவன் என்பான்ஓர் பேதை; அவன் வாய்ச்சொல்
கொள்ளார் அறிவுடையார்"

என்று கூறுகின்றார்.

திருக்குறளுக்கும் திருவள்ளுவருக்கும் தனித்தனிப் பத்துப் பெயர்கள் உண்டென்பது தெரிந்ததே. அவற்றில் ஒரு பெயர்கூடத் திருக்குறளை இலக்கிய நூல், நீதிநூல், பொருள்நூல், அறிவுநூல், அரசியல்நூல், கலைநூல் என்றோ, ஆசிரியரை அவற்றிற் கேற்றவர் என்றோ குறிக்கவில்லை. பாதிக்கு மேற்பட்ட பெயர்கள் நூலையும் நூலாசிரியரையும் வேதத் திறத்தில் வைத்தே சிறப்பிக்கின்றன.

உலகத்தின் அழுக்கு நீங்க எழுந்த நூல் திருக்குறள்! வேத விழுப்பொருளை வெண்குறளால் வள்ளுவர் ஓத, அழுக்கற்றது உலகு!

**தனித்தன்மை :**

திருக்குறளின் பெருமையைப் பற்றி நாமும் எவ்வளவோ பேசித் தீர்த்திருக்கின்றோம். உலக அறிஞர்களும் தம்மை மறந்து வியந்து பாராட்டியிருக்கின்றனர். ஆயினும் திருக்குறளைப் பற்றி 'அது வேத நூல்' என்னும் அடிப்படைத் தெளிவை உலகம் பெற வேண்டுவது முதன்மை. இது, அதன் தனித்தன்மை!

வேதத் தன்மை என்றாலும், பொதுத் தன்மை என்றாலும் பொருந்தும். 'வேதம் பொது' என்பது திருமூலர் சொல். அந்த இலக்கணத்துக்கு எடுத்துக்காட்டாக, வேதமாகவும் பொதுவாகவும் அமைந்து 'உலகப் பொதுமறை'யாய் விளங்குவது திருக்குறள்!

இத்தகைய திருக்குறள் இலக்கியம், நீதி, கலை, அரசியல் முதலிய எல்லா வகைகளிலும் தலைமைச் சிறப்பில் மிளிர்கிறது. இதன் ஒவ்வொரு குறளும் எந்த வகையான பற்றும் அழுக்கும் கலக்கமும் இல்லாமல், தெளிந்த அருள் வெளியின் தூய ஒளியுருவில் உண்மைகளின் விளக்கமாய் மிளிர்கின்றது!

மனித இனத்துக்கே வழிகாட்டியாகவும், விதி நூலாகவும் திருக்குறள் திகழ்கிறது. அறிவு நிலையை முதன்மையாகக் கொள்பவர்க்கு அவர் தம் அறிவு முறையிலேயே விளக்கங்கள் கொடுக்கிறது. யார் யார் என்னென்ன கொள்கைகளையும் நெறிகளையும் கடைப்பிடிக்கிறார்களோ அவர்களுக்கு அவரவர் கருத்து வகையிலேயே நெறிமுறையிலேயே உண்மைகளைத் துலக்கிவிடுகிறது.

உலக நூல்களெல்லாம் திருக்குறள் முடித்துக் கூறும் கருத்துக்களுக்கு மேல் ஏதும் கூறவில்லை. ஆனால், மற்ற மறை நூல்கள் முடிக்கும் முடிபுகளுக்கு மேற்பட்ட இறுதியுண்மைகளையும் நுட்பங்களையும் திருக்குறள் மறை எடுத்துக் காட்டுகிறது. 'உலக இலக்கியங்களிலேயே திருக்குறள் பெருமை மிக்கது' என்பது மதன்மோகன் கோசு என்பவர் கருத்து.

'ஐந்தின்வகை தெரிவான்' 'வாழ்வாங்கு வாழ்பவன்' 'சிறப்பென்னும் செம்பொருள்' எனவும், 'முறை செய்து காப்பாற்றும் மன்னவன்' 'வேலன்று வென்றி தருவது' 'உள்ளம் உடைமை உடைமை' 'சிலர் அதன் செவ்வி தலைப்படுவார்' எனவும் வருகின்ற இப்பெரு நூலின் முடிபுகள் போல்வன எத்தனையோ இந்நிலையில் நினைக்கத்தக்கன.

**பாயிரமும் நூலும் :**

திருவள்ளுவர் தமது திருக்குறளில் கூறியது மொத்தத்தில் 'அறம்' எனப்படும். பாயிரத்தில் 'அறன் வலியுறுத்தல்' என்னும் அதிகாரத்தின் வாயிலாக நூற்பொருள் இன்னது என்பதை அவரே புலப்படுத்திவிடுகிறார்.

அந்த அறத்தை விளக்குதற்குரியவர் 'நீத்தார்'. ஒழுக்கத்தால் நீத்தாராகிய அவர் அந்நிலையைப் பெற்றது, உலகத்

தொண்டு என்னும் 'வான்சிறப்பாகிய அருளால்; அதுவும் உண்மையடிப்படை என்னும் 'கடவுள் வாழ்த்தினுல்'. இங்ஙனம், 'நீத்தார் பெருமை' 'வான்சிறப்பு' 'கடவுள் வாழ்த்து' என்னும் வேர் போன்ற அதிகாரங்கள் 'அறன் வலியுறுத்த'லுக்கு முன்னுல் வருகின்றன.

'அறம்' என்னும் பராரையிலிருந்து அறத்துப்பால், பொருட்பால், இன்பப்பால் வீடு என்னும் நாற்பகுதிகளும் கிளை பிரிந்து தழைக்கின்றன. அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கையும் உணர்த்தும் பொதுப் பெயரே 'அறம்' என்பது. அறம் உரைத்தான் என்ருல், அவன் பொருள் இன்பம் வீடு உணர்த்திஞன் என்பதே பொருள்!

### திருக்கயிலை மரபு:

"அன்ருலின் கீழிருந்தங் கறம்விரித்த
அருளாளர்"
"அறங் கிளரும் நால்வேதம் ஆலின்கீழ்
இருந்தருளி"
"அழிந்த சிந்தை அந்தணாளர்க்கு
அறம்பொருள் இன்பம் வீடு
மொழிந்தவாயான்"

எனவும் வருகின்ற திருமுறை மரபுகள் இங்குச் சிந்திக்கத் தக்கன. 'அறம் உரைத்தல்' என்ருலும், 'நால் வேதம் உரைத்தல்' என்ருலும் 'அறம் பொருள் இன்பம் வீடு உரைத்தல்' என்ருலும் ஒன்றே என்பதும், வேதம் என்பது அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகை யுண்மைகளை உணர்த்துதலால் நான்கு பகுதிகளாய் நால்வேதம் எனப்படும் என்பதும், இத்தகைய நான்கு வேதமே திருக்கயிலைக்கல்லால் நீழலில் உரைக்க நேர்ந்தது என்பதும், சமய குரவர் தலைவராகிய திருஞானசம்பந்தர் அருளிச் செய்த இத் திருவாக்குகளிலிருந்து பெறப்படக்கூடும்.

கல்லால் நீழலில் இறைவன் மோன குருவாய் அமர்ந்து உண்மை தெளிவித்தருளிய திருக்கயிலை மரபுதான் 'அறம் உரைத்தல்' என்பது. எழுதா மறையாகக் கருத்தளவில் அதற்குரிய தகுதியாளர்க்கு உணர்த்தப்பட்ட அறத்தின் திறங்களே, அம்மரபுக்குரிய எழுதும் மறையாகத் திருக்குறள் வடிவில் எல்லா நிலையினர்க்கும் கிடைத்திருக்கின்றன.

அறம் முதலிய நாற்பொருள் அமைப்பில் இன்று மக்களிடையே 'மறை' என்னும் பெயரில் விளங்கும் நிறைமொழி நூல் திருக்குறள் ஒன்றே! 'வீடு ஒன்று பாயிரம்' எனத் திருவள்ளுமாலையில் வருதலால் வீடு பேற்றின் நுட்பங்கள் பாயிரப் பிரிவில் குறிப்பாய்ப் பொருந்தி நிற்றல் தெளியப் படும். இங்ஙனம் திருக்குறள் என்னுந் தெய்வமறை, அறம் உரைக்குந் திருக் கயிலை மரபினதாய்த் திகழ்கின்றது!

### நாற்பொருள் நுட்பம்:

உலகத்திற் குழந்தை பிறந்தபின் அது, முதலில் அறிவது பண்டங்கள் என்னும் பொருள்களே! அதன்பின் அப்பொருள்களைப் பற்றிய அறிவுகள் வளர்கின்றன. 'பொருட்பால்' என்னுந் திருக்குறட் பகுதியில் அறிவு நிலைகள் கூறப்படுகின்றன.

பொருளறிவு வளர வளர அப் பொருள்களின் வாயிலாக இன்ப நுகர்வை மக்கள் பெறுகின்றனர். ஆண் பெண் இன்ப நுகர்வும் அவரவர் வடிவு முதலிய பொருள்களின் வாயிலாகவே உணரப்படுகிறது. இப்படிப் பொருள்களின் மூலமாகக் கிடைக்கும் 'இன்ப உணர்வே' கலையுணர்வென்றுங் கூறப்படும். இது 'இன்பப்பா' லில் வருகின்றது.

'பொருள்' இன்பம்' என்னும் இந்த இரண்டு நிலைகளையும் மக்கள் தம் வாழ்க்கையிற் பொதுவாக அடைந்து வருகின்றனர். அவற்றை 'அறம்' என்னும் ஒழுங்கு முறையில் அடையத் தலைப்படும் போதுதான் நாகரிகம் அரும்புகிறது. தெய்வத் தன்மை சிறிது சிறிதாக மேலிட்டு வருகிறது. பற்று அறுகிறது. பொதுமக்கள் சிறப்பு மக்களாகின்றனர். அடியார்களாகி வீடு பேற்றுக்குரிய மெய்யுணர்வு நெறியில் ஒழுகுகின்றனர். 'அறம்' என்னும் இக்குண நிலை, 'அறத்துப்பாலில்' விளக்கப்படுகிறது.

பொருளையும் இன்பத்தையும் இதனுல் அறம் வழாது அடைதல் முதன்மையாகின்றது. அறம் கூடாத பொருளோ இன்பமோ மன்பதைக்கு உயர்வு தருவதில்லை. அதனுல், 'அறம் உரைத்தல்' என்பதில், அறத்தோடு கூடிய பொருள் உரைத்தலும், அறத்தோடு கூடிய இன்பம் உரைத்தலும், அறநெறி நின்று அடைவதற்குரிய வீடு தெரிவித்தலும் அடங்கி நின்றன. வீடு ஒன்றும் பாயிரம் 'அறத்துப் பாலில் இயைந்து உள்ளடங்கி, நூல் 'முப்பால்' எனவும் பெயர் பெற்றது.

'வீடு' என்பது, பற்று விடுதலையாதல் மட்டும் அன்று; வாழும் இல்லத்தில் அம்மையப்பரின் தொடர்பில்லையானுல் அது 'வீடு' ஆகாது.'வீடு' என்னும் சொல் ஒன்றன் நீக்கத்தைக் குறிப்பதோடு, மற்ருென்றிற் கொண்டுபோய்விடும் ஆக்கத்தையும் உணர்த்தும். மல நீக்கம் அருளாக்கத்துக்காகவேயன்றி வேறில்லை. ஓர் இல்லத்தை அழுக்கு நீக்கித் துப்புரவு செய்தல், அந்த அளவிலேயே நின்றுவிடாமல் அதனுள் விளக்கு வைத்து வாழ்க்கை நடத்துவதற்காதல் போல, ஓர் உயிர் தன்னை மலம் நீக்கித் தூய்மைசெய்து கொள்ளுதல், தன்னுள் உணர்வு விளக்கேற்றி அம்மையப்பரை இருத்தி அவரோடு அமர்ந்து நுகர்வுறுதலை நிலைபெறுத்திக் கொள்ளுதற்கேயாம். அப்போதுதான் அது வீடுபேருகும்.

வீடு என்னும் இப்பேராவியற்கை பாயிரப் பகுதியில் நிலைகொள்கின்றது. அறன் வலியினுல், நீத்தார் என்னும் மலம் நீங்கிய தூயோர், 'வான்' 'கடவுள்' என்னும் அம்மையப்பரை அடைந்து வீடுபெறும் பேராப் பெருவாழ்வுநிலை, திருக்குறட் பாயிரத்தில் நான்கு அதிகாரங்களிலும் நிறைந்து துளும்புதல் தெளிந்துகொள்ளப் படும். 'துறவு' என்னும் சொல்லும் அழுக்கைத் துறந்து அருளில் துறுத்துக் கொள்ளும் ஆக்கப் பேற்றைக் காட்டும்.

**திருக்குறள் பீடம் :**

திருக்குறள் என்னும் நூல் இங்ஙனம் நான்கு கூறும் மறைந்த பொருளுமாகிய நான்மறையாய், முப்பாற் கருத்தமைந்த முத்தமிழ் நான்மறையாய், திருக்கயிலை மரபின் உலகப் பொதுமறையாய் விளங்குகிறது! திருக்குறளை அடிப்படையாகக் கொண்ட குருகுலம்கூட இதனுல் உலகுக்கு ஒருகுலமாகும் தகுதியை அடைகின்றது; குருகுலம் என்பது திருக்குறள் பீடம்.

'திருக்குறள் பீடம்' உண்மையில், தென்முகப்பெருமானின் மோன ஞானப் பெருமையில் எழுந்த திருக்கயிலை மரபின் உலகப் பொதுப்பீடமாய் அமைவதும் தெரிகிறது. உள்ளம் பெருமிதத்துடன் பெரும் பொறுப்புணர்ச்சியும் கொள்கின்றது. இப் பெருஞ் சிறப்பு, உலகுக்குப் பெரிதும் பயன்படுவது கொண்டே நிலைபெறவேண்டும். உலக குருபீடத் தந்தையார் திருவள்ளுவரின் உள்ளம் அங்நிலையில் இனிது குளிரும்; குருகுல அன்பர்கள் உலக குலமாகி அவர்கள் கடமைகள் திருக்குறளைப்போல் உலக முழுவதையும் நோக்கி முன்னேறிச் செயல்கொள்ள வேண்டியிருக்கிறது!

**குருநாதர் கொள்கை :**

திருக்குறள் பீடம் உலகுக்குத் தெரிவிக்கும் பிழிந்த கருத்து ஒன்றே ஒன்றுதான். குருநாதர் திருவள்ளுவர் மொழிந்த ஒவ்வொரு மொழியே, நாடுகளிற் கிளர்ச்சி கொண்டுள்ள எல்லாச் சிக்கல்களையும் தீர்த்துவிடுகிறது. உலக மக்கள் எல்லாவற்றிற்கும் வாழ்வளித்துவிடுகிறது. உலக நலத்துக்காகப் பொதுத் தொண்டில் இறங்கி அனைத்தையும் மறந்து, 'அரசியல்' 'பொருளியல்' 'கலையியல்' முதலிய பற்பல துறைகளிற் பெரும்பாடுபட்டு நாளும் உழைத்துவரும் சிறந்த இயக்கத் தலைவருடைய கவலைகளுக்கும் மருந்தாகி, மிக எளிய இனிய முறையில் வழிகாட்டி விடுகிறது. உடனிருந்து அழைத்துஞ் செல்லுகிறது.

எல்லாச் சீர்திருத்தங்களுக்கும் மூலமாயிருக்கும் அவ்வொரு கொள்கையின் விளக்கமே திருக்குறள் மறையாய் வடிவெடுத்திருக்கிறது. திருக்குறள் அறம் என்பதும் அதுவே. சிறந்த ஏனை உலக

நூல்களெல்லாவற்றின் பயனும் இக் கொள்கையைக் கடைப்பிடிப்பதிலேதான் உள்ளது. உலக மக்களில் தக்கோர் நடைமுறைகளெல்லாம் இக்கொள்கை யொன்றை நோக்கியே பயணம் செய்து கொண்டிருக்கின்றன.

**வாழ்வாங்கு வாழ்தல் :**

குருநாதர் உரைத்த அவ்வொரு மொழி, வாழ்வாங்கு வாழ்தல் என்பது.

அவரவரும் வாழ்வாங்கு வாழ்ந்து வந்தால் வேறு என்ன திருத்தம் இவ்வுலகுக்குத் தேவையிருக்கிறது! 'ஆரா இயற்கை அவா நீத்தல்' முதலிய விளக்கங்களெல்லாம் இவ்வொரு கொள்கையில் அடங்கி விடுகின்றன.

ஒழுங்காக இவ்வுலகில் வாழ்க்கை நடத்துவதே, பிறந்த பிறவியின் நோக்கத்தை நிறைவேற்றும்; எல்லாருடைய வாழ்க்கையும் இடரின்றிச் செல்லும். திருக்குறள், வாழ்க்கை வேதமாதலின், வாழும் முறைமையை இயற்கை நெறியில் எடுத்துக் காட்டுகிறது. 'வாழ்வாங்கு வாழ்தல்' என்னுங் கொள்கையினுலேயே அது, 'வாழ்க்கை மறை' என்னுஞ் சிறப்புப் பெயர்க்கும் உரியதாயிற்று !

தவருன சிக்கல்களும் கிளர்ச்சிகளும் ஆர்ப்பாட்டங்களும் வன் முறைகளும் அடக்கு முறைகளும் போர் வெறிகளும் வீண்செலவுகளும் செயற்கைக் கோளாறுகளும் கெடுபிடிகளும் இன்றி, உலகம் அமைதியாகவும் நலமாகவும் முன்னேற்றமாகவும் அனைவர்க்கும் உதவியாகவும் துணையாகவும் பயனேடு பெருவாழ்வில் விளங்குவதற்கு, குருநாதர் வழங்கியருளிய 'வாழ்வாங்கு வாழ்வு' என்னும் கருணை மொழி, எவ்வளவு இயல்பான உண்மையாய் இருக்கிறது !

'வான் உறையும் தெய்வத்துள் வைக் கப்படும்' என்பதில் வருகின்ற 'வான்' என்பது வானேருலகம் அன்று, தெய்வம் என்பதும் தேவர் அன்று. 'வான் கலந்த மாணிக்க வாசக' என்பதில் 'வான்' என்பதைப் போல அருள் வெளியை உணர்த்தும்.

தன்னை வருத்திக்கொள்ளும் துன்பங்களும், பிறரை நெருக்கிப் பிழியும் வன்மைகளும் இல்லாமல், எவர்க்கும் அடிமையின்றி, உரிமையாகவும் இனிமையாகவும் வாழ வழிவகுக்கும் இவ்வொரு கொள்கையை எளிதாக உறுதியாகக் கடைப்பிடித்து உலகம் உய்ய வேண்டும் என்பதற்காகவே, இற்றைக்கு 2000 ஆண்டுகளாகத் திருக்குறள் வாழ்க்கை மறை உலகத்தில் உயிர்த்துக் கொண்டிருக்கிறது !

---

## செய்திச் சுருக்கம்.

**வள்ளல் பாரிவிழா :**

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த, திருப்புத்தூர் வட்டத்தில் உள்ளது பிரான்மலை. அது தேவார காலத்தில் திருக்கொடுங்குன்றம் எனவும், சங்ககாலத்திற் பறம்புமலை எனவும் பெயர் பெற்று விளங்கியது. சங்ககாலத்திற் கொடை நலத்திற் சிறந்திருந்த கொடை வள்ளல் ஆகிய பாரிவேள் வாழ்ந்து அரசாண்ட பகுதியே, இன்று பிரான்மலை என வழங்கும் பண்டைப் பறம்புமலை ஆகும். கபிலர் ஔவையார் முதலிய புலவர்கள் வந்துதங்கி வதிந்து, பாடல்கள் பாடிப் பைந்தமிழ் வளர்த்த பெருமாண்புக்குரியது பறம்புமலை. வள்ளல் பாரி வழிபட்ட பாரீச்சுரம் என்னும் கோயில், அதன்கண் உள்ளது. தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் அருளாட்சியில், அக்கோயில் சிறப்புற்று விளங்கி வருகின்றது. அடிகளார் அவர்களின் அருளாதரவில், வழக்கம்போல் இவ்வாண்டும் பாரிவிழா பறம்புமலையில் சிறப்புற நடைபெற்றது. திரு. வீர. சா. மெய்யப்பன் எம்.எல்.ஏ., அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த, அமைச்சர் மாண்புமிகு திரு. மாதவன், B.Com., B.L., அவர்கள், விழாவைத் தொடங்கி வைத்தார்கள். திரு. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள் தலைமையிற் கருத்தரங்கமும், தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் மு. கருணுநிதி அவர்கள் தலைமையில் கவியரங்கமும், தவத்திரு அடிகளார் அவர்களின் தலைமையில், பட்டிமன்றமும் சிறப்புற நிகழ்ந்தன.

**திருவாளர்கள் :** சி. அருணைவடிவேல் முதலியார் (முதுபெரும்புலவர்), க. தேசிகன் (கவிஞர் கோ), கா. நயினர் முகமது (பெரும்புலவர்), ந. சுப்புரெட்டியார் (அருங்கலைக்கோன்), மதுரைச் சேதுராமன் சகோதரர்கள்(ஏழிசைச் செல்வர்), ஆகியோர் பட்டமும் பரிசும் வழங்கிச் சிறப்பிக்கப் பெற்றனர். பாரிவிழா நிகழ்ச்சிகளைத் திருச்சி வானெலி நிலையம் அஞ்சல் செய்தது. —ஆசிரியர்.

# திருக்குறளில் ஓர் ஐய விளக்கம்

திருவருள் தவயோக ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த
தேசிக பரமாசாரிய சுவாமிகள், மதுரை ஆதீனம்.

இறப்பு நிகழ்வதைப்பற்றியும், பிறப்பு நிகழ்வதைப்பற்றியும், பலரும் பலவிதமாகச் சொல்லுகிறார்கள். அவற்றில் இறப்பைப் போல் வருத்தம் விளைவிக்கின்ற சம்பவம், நமக்கு வேறு எந்த நிலையிலும் உண்டாவதில்லை யென்றும், அது எண்ணுயிரம் தேள் கொட்டினதற்கு ஒப்ப, அவ்வளவு வேதனையுடையது என்றும், பெரும்பாலோர் சொல்லுகிறார்கள். ஆனால் திருவள்ளுவர், 'உறங்குவதுபோலும் சாக்காடு, 'உறங்கி விழிப்பது போலும் பிறப்பு' என்று சொல்லியிருக்கிறார். இதில் சாவு நிகழ்வது உறக்கம் வருவது போலத் துன்பமே இல்லாதது என்கிறார்.

மணிமேகலை ஆசிரியர், 'பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும் உறங்கலும், விழித்தலும்போன்ற துண்மையின்' என்று திருவள்ளுவர் கூறியிருப்பதையே வலியுறுத்துகிறார். ஆகவே, இறப்பு, பிறப்பு என்னும் இவ்விரு நிகழ்ச்சிகளும், தூங்குவதுபோலவும், விழிப்பதுபோலவும் உடல் வருத்தம் ஒரு சிறிதும் உண்டாக்காமல் நிகழ்கின்ற காரியங்கள் என்று தெரிகிறது. ஆனால் அதே திருவள்ளுவர், மற்றொரு இடத்தில் 'சாதலின் இன்னாததில்லை, இனிது அதூஉம் ஈதல் இயையாக்கடை' என்றுகூறியிருக்கிறார். இதில் ஒருவனுக்கு இறத்தலைப்போலத் துன்பம் செய்வது வேறொன்றும் இல்லை; அப்படிப்பட்ட சாவும் வறியவர்களுக்கு உபகாரமாக எப்பொழுதும் கொடுத்துவந்த உள்ளமுடையவர்களுக்கு, அவ்வாறு கொடுத்து உதவ முடியாத காலத்தில், இன்பம் செய்வதாகும்; என்கிறார்.

இது முன் சொன்ன திருக்குறளுக்கு முரணாக இருப்பதுபோல் தோன்றலாம். இவற்றில்எதுதான்உண்மை என்றுநமக்குச்சந்தேக விபரீதமின்றித் தெரியவேண்டுமானால், அதைப்பற்றி நன்றாக ஆராய்தல் வேண்டும். நாம் ஒவ்வொருவரும் பிறக்கும்பொழுது துன்பம் எதுவும் அனுபவித்ததாக நமக்குத் தெரியவில்லை. பிறக்கும் பொழுது ஏதும் உணர்ச்சி இருந்ததாகத் தெரியவில்லை. பிறந்த குழந்தைக்கு, அது அழத் தொடங்கின பிறகுதான், உணர்ச்சியே வருகிறதாகத் தெரிகிறது. அதுவரை தூக்கத்தில் இருக்கிற ஒரு குழந்தையை, அது கிடந்த இருட்டு அறையிலிருந்து வெளியே கொண்டுவந்து கிடத்திவிட்டால், அதற்கு, எப்பொழுது வெளியே வந்தோம், எப்படி வெளியே வந்தோம் என்பன, தெரியாதல்லவா? அதே நிலைமையிலேயே, யாதொரு உடல் வருத்தமும் மனவருத்தமுமின்றி, நாமெல்லாம் பிறந்திருக்கிறோம் என்றுதானே சொல்லவேண்டும்.

இனி இறப்பு எப்படி ஏற்படுகிறது என்பதை, நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டுமானால், ஒன்று நாமே இறந்துபோன பின், அந்த அனுபவத்தை நேரில் அறிந்து கொள்வோம் என்று விட்டுவிட வேண்டும். இல்லையேல் இறந்துபோனவர்களுடன் பேசி, அவர்களுடைய அனுபவங்களை அறிந்து, நாமும் தெளிந்த சிந்தையுடன் இறப்பை எதிர்நோக்கி வாழ்வாங்கு வாழ வேண்டும். இல்லாவிட்டால் அனுபவம் இல்லாதவர்களின் பயங்கொள்ளித்தனத்தில் நாமும் சிக்கி, பயப்படவேண்டாத ஒன்றுக்குப் பயந்து, நடுங்கிப் பதைபதைத்த பேதையர் ஆவோ மென்பதை யாரும் மறுக்க முடியாது.

இறந்தவர்களிடம், இறப்பு ஏற்படுவது எப்படி என்று கேட்டால், அவர்கள் 'தூக்கம் எப்பொழுது எப்படி வந்தது என்று, தினமும்

தூங்கிக்கொண்டிருக்கிற உங்களுக்கு எப்படித் தெரியவில்லையோ, அதேபோல நாங்கள் எந்த விநாடியில், என்ன விதமாகத் தூல உடலை விட்டுப் பிரிந்தோம் என்பது எமக்குத் தெரியவில்லை; ஆவி பிரியும்பொழுது உடல் வேதனையோ, அதிர்ச்சியோ, யாதொன்றும் இல்லை; நீங்கள் கனவுகண்டுகொண்டிருக்கும் பொழுது, அவ்விதமாகக் கனவு காணுகிறோம் என்ற உணர்ச்சி, ஒரு சிறிதும் இன்றி உண்மையிலேயே இன்ப துன்பம் அனுபவிக்கிறதாகக் கருதுகிறீர்கள் அல்லவா ? கனவு காணும் பொழுது, தூல உடல் எங்கே கிடக்கிறது, எப்படிக் கிடக்கிறது என்ற உணர்ச்சி, கனவில் தொழிற்படுகின்ற உடலுக்குக் கொஞ்சமேனும் இல்லை அல்லவா?

அதேபோல, நாங்கள் இறந்து வந்த பிறகும், கனவில் அனுபவித்துக்கொண்டிருந்த அதே ஆவி உடலோடு தொடர்ந்து, இன்ப துன்பம் அனுபவித்துக் கொண்டிருப்பதால், எந்த வினாடியில் தூல உடலை விட்டு அறவே பிரிந்தோம், தூல உடல் எங்கே, எப்படிக் கிடக்கிறது என்ற உணர்ச்சி ஒரு சிறிதும் இல்லை; எங்கள் தூல உடலைப் புதைத்தார்களா, சுட்டார்களா, பத்திரப்படுத்தி வைத்தார்களா? என்ற கவனமும், கவலையும் அறவே இல்லை; ஆவி உலகத்திலுள்ளவர்கள் எங்களைப் பார்த்து, பூலோகத்தைவிட்டு நீங்கள் இறந்து வந்திருக்கிறீர்கள் என்று சொல்லிக் காரணங்கள் காண்பித்து, நாங்கள் குடியிருந்த தூல உடலையும் காட்டி, நாங்கள் காணும்வரை, நாங்கள் இறந்து போனோம் என்று உணர்ந்து கொள்ளவோ, ஒத்துக்கொள்ளவோ முடியவில்லை'' என்கிறார்கள். என்ன ஆச்சரியம் பாருங்கள்! முன்னர் இது சம்பந்தமாக ஆங்கிலேயர்களுடைய ஆவி உலக அனுபவங்கள் அடங்கிய அநேக புத்தகங்களைப் பார்வையிட்டோம். எல்லாருடைய அனுபவமும் ஒன்றை ஒன்று உறுதிப்படுத்துகின்றனவே தவிர மாறுபட்டனவாக இல்லை. உதாரணமாக இரண்டொன்று இங்கே குறிப்பிடுகிறோம்.

1874 முதல் 1918 ஆம் வருடம் முடிய, இங்கிலாந்தில் ஆவி உலகத்தோடு பேசியவர்கள் வெளியிட்ட 19 முக்கிய புத்தகங்களில் இருந்து, ஹேரால்டு பெயிலி (Herold Bayley) என்பவர், 'கண்டுபிடியாத பிரதேசம்—மரணத்தையும் மரணத்திற்குப் பின்னுள்ள உலகத்தையும் அறிவிக்கின்ற ஆவி உலக அறிவிப்பு' (The Undiscovered Country) என்ற 270 பக்கங்கள் கொண்ட புத்தகத்தை, 1918ஆம் வருடத்தில் வெளியிட்டிருக்கின்றார்.

அதுபோன்று திரு. ஈ. டபிள்யூ அல்லன் என்பவர், 'கல்லறைக்குப் பின்னுள்ள வாழ்க்கை' (Beyond the Grave) என்னும் 188 பக்கம் கொண்ட புத்தகத்தை 1876ஆம் வருடத்தில், லண்டனில் வெளியிட்டுள்ளார்,

அவ்வாறே திரு. ஏ. எல். பெரீன் என்பவர். கென்சிங்டனில், 'பேசாதிருப்பதில்லை-இறந்த பின்' (Not Silent—if dead) என்ற 196 பக்கம் கொண்ட ஒரு நூலை, 1916ஆம் வருடத்தில் வெளியிட்டிருக்கின்றார்.

இப்புத்தகங்களில் வரும் கீழ்க்கண்ட மூன்று ஆவிகளின் அனுபவ உரைகளும், மேலே சொன்ன கருத்தை வலியுறுத்துகின்றன. அவை கீழ்வருமாறு :—

(1) 'உண்மையில் நாம் பிறக்கும் பொழுது, எவ்வித உணர்ச்சியும் இல்லாதது போலவே நாம் இறக்கும்பொழுதும் யாதொரு உணர்ச்சியும் இல்லை. ஆதலால் சாதாரணமான மரண நிகழ்ச்சி, பிறக்கும்பொழுது உள்ளதைவிட அதிகத் துன்பம் விளைவிக்கக் கூடியது அல்ல''

—(கல்லறைக்குப் பின்னுள்ள வாழ்க்கை)

(2) எங்களுடைய இந்த (ஆவி) உலகம், உங்களுடைய உலகத்தின் மூலப் பிரதி (அசல்). ஆதலால் சிலர் பூலோகத்திலிருந்து மறு உலகத்திற்கு மாறியிருக்கிற, தங்களுடைய மாற்றத்தையும், பூலோகத்திலுள்ள தூல உடலைக் கழற்றித் தள்ளிவிட்டு வந்திருக்கிறோம் என்பதையும், பிறர் எடுத்துச் சொல்லும்வரை உணராதிருக்கிறார்கள். அப்படிச் சொன்னாலும் கூட அநேகரை அந்த உண்மையை உணரச் செய்வது மிகவும் கஷ்டமான காரியமாக இருக்கிறது.

—(பேசாதிருப்பதில்லை—இறந்தபின்)

---

(1) A natural death is not a more painful process than that of being born—in fact, there is no more conciousness in the one case than in the other."

(2) "As this World of ours is a counterpart of yours, some hardly realise any change or that they have cast off their earthly bodies until told so, and even then in many cases it is most difficult to convince them of the fact"
—Not Silent, if dead.

(3) Physical pain drops off you like a garment with the body which you have left behind. You wake up well, and your first impression is one of delight; just the same as when you wake up from a bad dream and discover that it was only dream. So simple, so natural does this seem, that you almost always mistake what has taken place. I did not know. And I find it is a common experience. Many refuse to believe they are dead.

It is, of course, true that they are not dead. They have all their faculties; they see, they hear, they move hither and thither. Everything seems the same to them as before. Their first realisation of the change that has taken place is a kind of shock to them. "So this is death. Then if so, there is no such thing as death." For it is so entirely different from what we imagined.

What first convinced me that something had happened was the sight of my old body. After that came the discovery that my nurse did not see me nor hear me, but wept about my body as if that were myself. This is what usually happens.

When the newly arrived have had many friends, relatives, or those whom they have loved on this side, they find them waiting for them. Especially when they have kept thinking of or praying for them. Forgetfulness separates here as there. But all whose minds and hearts have been closely knit in love with those on this side find their loved ones waiting.

(Life Beyond the Grave, 29-30.)

இவற்றின் மொழிபெயர்ப்பு :—(3) உடல் வருத்தம் என்பது ஒரு சட்டையைக் கழற்றினது போல, தூல உடலை விட்டவுடன் உன்னை விட்டுக் கழன்று விடுகிறது. நீ நன்ருக விழித்தெழுகின்ருய். முதலாவதாக, ஒருவித மகிழ்ச்சியே உனது மனதில் ஏற்படுகிறது. ஒருவன் ஒரு பயங்கரமான சொப்பனம் கண்டு கொண்டிருக்கும்பொழுது, விழிப்புவந்து, இதெல்லாம் சொப்பனந்தான் என்று கண்டுகொண்டால் எப்படியிருக்குமோ, அது போலத்தான் இருக்கும். அவ்வளவு இலேசானதாகவும், அவ்வளவு இயற்கையானதாகவும், இறப்பு நிகழ்வதால், பெரும்பாலும் என்ன நடந்திருக்கிறதென்பதையே, நீ சரியாகப் புரிந்துகொள்ளமாட்டாய். எனக்கு அப்படித்தான் இருந்தது. இங்கு எல்லோருக்கும் அவ்விதம் இருந்ததாகவே அறிகிறேன்.

இறந்து வந்தவர்கள் தாங்கள் இறந்து போனதாகவே ஒத்துக்கொள்ள மறுக்கிருர்கள். அவர்கள் இறக்கவில்லை என்பது காரியப்பாட்டில் உண்மையே. அவர்களுக்குரிய திறமைகள் அத்தனையும் அவர்களுக்கு இருக்கின்றன. அவர்கள் பார்க்கிருர்கள். அவர்கள் கேட்கிருர்கள். அவர்கள் இங்கும் அங்கும் போகவர இருக்கிருர்கள். எல்லாம் முன்பு இருந்தது போலவே அவர்களுக்கு இருக்கிறது; முன்னிருந்ததிலிருந்து ஒரு மாறுதல் ஏற்பட்டிருக்கிறதென்ற உணர்ச்சி முதலாவதாக ஏற்படும்பொழுது, அவர்களுக்கு ஒருவித திகைப்பு உண்டாகிறது. இறப்பு என்பது இதுதானு? அப்படியானுல், இறப்பு என்ற ஒன்றே இல்லை என்று சொல்லலாம். ஏனென்ருல், நாங்கள் முன்னமே கருதியிருந்ததற்கு அது முற்றிலும் மாருக அல்லவா இருக்கிறது.

நான் முன் குடியிருந்த சடலத்தைப் பார்த்ததின் பிறகே, ஏதோ நடந்திருக்கிறதென்ற நிச்சயம் எனக்கு முதலில் உண்டாகியது. அதன் பின்னர் எனக்கு மருந்து கொடுத்துக் கொண்டிருந்த தாதிப்பெண் என்னை (நான் ஆவி உடலில் இருந்ததால்) பார்க்கவும் முடியாமல், நான் பேசுவதைக் கேட்கவும் முடியாமல், என்னுடைய தூல உடம்பு கிடந்ததின் பக்கத்தில் அந்தச் சடலமே நான் என்று கருதி, அழுதுகொண்டிருப்பதையும் கண்டேன். இதுதான் எல்லோருக்கும் சாதாரணமாக நடக்கிற நிகழ்ச்சி.

[குறிப்பு :—இறந்தவர் ஆவி உடலோடு நின்று தனக்கு மருந்து கொடுத்த தாதியைக் கூப்பிடும்பொழுது, தூல உடலோடு இருக்கிற தாதிக்கு இறந்தவர் ஆவியாக நிற்பதும் தெரியவில்லை. அர் கூப்பிடுகிறதை அவருக்கு அறியவும் முடியவில்லை. தாதியானவள் இறந்தவருடைய தூலக் கூட்டை, அவர்தான் என்று கருதிக் கூப்பிடுகிருள். உள்ளே இருந்தவர் வெளியேறியபின், வெற்றுக்கூடு எப்படிப்பேசும். அங்கே மூச்சுப்பேச்சு இல்லையென்றவுடன் அவள் அழுது புலம்புகிருள்.]

இறக்கும் தறுவாயில் உள்ளவர்களின் சிநேகிதர்களும், உறவினர்களும் அல்லது அவர்களின் அன்பிற்குப் பாத்திரமான ஆவி உலக வாசிகளும், அவர்களின் வருகையை

எதிர்நோக்கிக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவ்விதம் செய்வது, முக்கியமாக அவர்களைப் பற்றி நினைத்துக் கொண்டும், அவர்களுக்காகப் பிரார்த்தித்துக்கொண்டும், இருக்கப் பட்டவர்களேயாவார்கள். மறதி என்பது பூலோகத்திலும், மேல்லோகத்திலும் ஒருவரையொருவர் பிரிந்திருக்கச் செய்கிறது. அன்பினால், யார் யாருடைய மனமும் இருதயமும், இங்குள்ளவர்கள்பால் நெருக்கமாகப் பின்னியிருக்கிறதோ, அவரவர்களுடைய அன்பிற்குரியவர்களெல்லாம் அவரவருடைய வரவை எதிர்நோக்கிக் காத்துக்கொண்டிருப்பதை அறியலாம்.''

*—(கல்லறைக்குப் பின்னுள்ள வாழ்க்கை)

இவைகளிலிருந்து, இறப்பு என்பது துன்பமில்லாத நிகழ்ச்சி என்பது, சந்தேகத்திற்கு இடமின்றி வலியுறுத்தப்பெறுகிறது. இந்த உண்மை அசைக்க முடியாமல் இருக்குமேயானால், ''சாதலின் இன்னாததில்லை'' என்ற குறளுக்கு உண்மையான பொருள் வேறொன்று இருக்கவேண்டுமென்று சிந்தனை ஏற்படலாம். அதிலிருந்து அக்குறளுக்கும் வேறு ஒரு சிறந்த பொருள் உண்டென்பது விளக்கமாகும். எப்பொழுதும் பிறருக்கு உபகாரமாகத் தருமம் செய்துவந்தவன், அது செய்யமுடியாத நிலை ஏற்படும்பொழுது, மனம் நொந்து, பிறருக்கு உபகாரமாக இருக்க முடியவில்லையே என்று தயங்குவான். அது அவனுடைய உடலுக்கு யாதொரு வருத்தமும் கொடுக்காது. மனவேதனையையே கொடுக்கும்.

அதுபோலவே, சாகப்போகிறோமே, நமக்கு வேண்டிய மனைவி, மக்கள், நிலம், புலம், வீடு, மாடு இவற்றை யெல்லாம்விட்டுப் பிரியப் போகிறோமே, என்ற மனவேதனை சாகும் தறுவாயில் வருவதுபோல வேறு எதிலும் வருவதில்லை. அவ்வித மனவேதனையோடு பிறருக்குக் கொடுத்துதவும் வள்ளல் தன்மையைக் குறிக்கோளாகக் கொண்ட ஒருவருக்கு அது முடியாதபோது ஏற்படுகின்ற மனவேதனையை ஒப்பிட்டுப்பார்க்கும்போது, அவனுக்கு உடலையும் இவ்வுலகத்தையும் விட்டுப் பிரிவதில் வருகின்ற மனவேதனை இன்பமானதாகவும், பிறருக்குக் கொடுத்து உதவ முடியாமையால் வருகின்ற மனவேதனை, அதிகத் துன்பமுடையதாகவும் இருக்கும், என்ற பொருள் விளக்கமாகின்றது.

எனவே ''உறங்குவது போலும் சாக்காடு'' என்கிற திருக்குறளும், ''சாதலின் இன்னாததில்லை'' என்கிற திருக்குறளும், ஒன்றுக்கொன்று முரண்பாடுடையதல்லவென்று தீர்மானிக்கலாம். இதனைத் தீர்மானிப்பதற்கு, மரண நிகழ்ச்சியை அனுபவித்தவர்களோடு பேசியும், தொடர்பு கொண்டும், நமக்குச் சாத்தியப்படுமே தவிர, வேறு எவ்விதத்தாலும் முடியாது என்பது தெளிவாகும். இதுபோலவே மரணத்தின்பின்னுள்ள வாழ்க்கையின் நிலையையும், மேலுலகங்களின் உண்மையையும், இங்கும் அங்கும் எங்கும் புகழுடன் வாழ்வதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்களையும் நாம் ஐயந்திரிபறத் தெளிவதற்கு, ஆவி உலகத்தவரின் தொடர்பின்றிச் சாத்தியப்படாது என்பதை யாரும் மறுக்க முடியாது. எனவே, ''உறங்குவது போலும் சாக்காடு'' என்னும் திருக்குறளுக்கும், ''சாதலின் இன்னாததில்லை'' என்னும் திருக்குறளுக்கும் இடையே யாதொரு முரண்பாடும் இல்லை என நாம் தெளியலாம்.

---

## செய்திச் சுருக்கம்

(2) திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீபிரஹந்நாயகி சமேத பாடலீசுவரர் கோயிலின் திருப்பணித்துவக்க விழா, 24—4—69 வியாழக்கிழமை, காலை 10-30 மணியளவில் நடைபெற்றது. சென்னைத் துணை யாணையர் திரு. கே. இராசா பி.எ., பி.எல்., அவர்கள் தலைமையில், மயிலம் பொம்மபுர ஆதீனம் 19ஆம்பட்டத்து மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள் அவர்கள் திருப்பணியைத் தொடங்கி வைத்தார்கள். கடலூர் உதவியாணையாளர் திரு. என். சீனுவாசன் பி.ஏ., பி.எல்., எம். வி. பி. தண்டபாணி செட்டியார், ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள், ஏ. ஆர். தாமோதர முதலியார், எம்.எல்.சி., வி. தங்கராஜ் முதலியார், வி. பி. சுப்பராயன், கே. செல்வராஜ் செட்டியார், ஒய். என். ஸ்ரீராமுலு செட்டியார், நா. திருநாவுக்கரசு, திருமதி பிரஹந்நாயகி அம்மாள் முதலிய பெருமக்கள் பலரும், கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

—ஆசிரியர்.

# திருக்குறளும் ஞானிகளும்

தவத்திரு: ஊரன் அடிகள்
சன்மார்க்க ஆராய்ச்சிநிலையம், சமயபுரம்.

**முன்னுரை:**

திருக்குறள் ஒரு ஞான நூல் என்பதும், திருவள்ளுவர் ஒரு ஞானி என்பதும் எம் கொள்கை.

*தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்*
*மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை*
*திருவா சகமும் திருமூலர் சொல்லும்*
*ஒருவா சகமென் றுணர்.*

என்னும் ஔவையார் திருவாக்கைக் காண்க. ஞான நூல்கள் பலவற்றுள் சொல்லப்பெறாத உண்மைகள் நீதி நூல் எனப்படும் தேவர் குறளிற் காணப்படும். ஞான நூல்களில் சுற்றி வளைத்தும் இலை மறைகாயாகவும் கூறப்படும் உண்மைகள் திருக்குறளில் நேரிடையாகவும் வெளிப் படையாகவும் அழுத்தந்திருத்தமாகவும் கூறப்படும். திருக்குறள் ஞானச் சிறப் பில், திருமந்திரம், திருவாசகம் முதலிய வற்றை ஒப்பது; திருக்குறளில் கடவுள் வாழ்த்து, துறவு, மெய்யுணர்தல், அவா வறுத்தல், தவம், நிலையாமை ஆகிய அதி காரங்களிற் காணப்படும் கருத்துக்கள் ஞானநூலுணர்வுடையாரை இறும்பூதெய் தச் செய்வன. யாக்கை நிலையாமையை ஞான நூல்கள் பலவாறு கூறும் எனி னும் "குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே உடம்போ டுயிரிடை நட்பு" என் னும் குறட்பாவின் முன்னர் வேறெதுவும் நிற்குமாறில்லை.

பின் வந்த புலவர்கள் மிகப்பலர் திருக் குறளைத் தத்தமது நூல்களுள் எடுத்தாண் டுள்ளனர். திருக்குறளை எடுத்தாளுவதும் மேற்கோள் காட்டுவதும், தமக்கும் தம் நூலுக்கும் ஒரு சிறப்பெனவே அவர்கள் கருதினர். புலவர்கள் மட்டுமன்றி ஞானி களும் திருக்குறளை எடுத்தாண்டும் மேற் கோள் காட்டியும் உள்ளனர். பின்னூ லாசிரியர் ஒருவர் முன்னூலொன்றை எடுத் தாள்வதும் மேற்கோள் காட்டலும் ஒரு வியப்பன்று. அது கவி மரபும் இலக்கிய வழக்கும் ஆகும். ஆயினும் ஞான நூல்கள் செய்யப் புகுந்த ஞானிகள் தாம் சொல் லும் ஞானக் கருத்துக்களுக்கு அரணாகத் திருக்குறளை எடுத்துக் காட்டுகின்றன ரெனின், திருக்குறளின் ஞானச்சிறப்பை என்னென்பது. இலக்கியங்களிற் சிந்தை செலுத்தாத ஞானிகளும் உள்ளத்தைத் திருக்குறளிடத்துப் பறிகொடுத்தாரெனின் திருக்குறளின் தெய்வச் சிறப்பை-அருட் சிறப்பை-ஞானச்சிறப்பை என்னென்பேம். திருவள்ளுவர் ஞானிகளுக்கு ஞானி என் றும், திருக்குறள் ஞான நூல்களுக்கு ஞான நூல் என்றும், யாம் கூறின் அது மிகை யாகுமோ? திருவள்ளுவர்க்கு வழங்கும் வேறு பெயர்களாகிய தெய்வப் புலவர், தேவர், நாயனர் என்பவையே அவர் ஒரு ஞானி, தெய்வீகர், அருளாளர் என்பதைக் காட்டும். அவருக்குக் கோயிலெடுக்கப் பட்டதும் இது கருதியே. இஃதுணராது பிற கலைநூற் புலவரோடொருவராய், எட்டுத்தொகை பத்துப்பாட்டு முதலியவற் றைப்பாடிய பலநூறு புலவர்களுடன் திரு வள்ளுவரையும் ஒருவராய் வைத்து எண் ணுதல் அபசாரம். ஞானியாகிய திருவள் ளுவரை ஒரு குறிப்பிட்டசமய ஞானியாகக் கொள்ளாதுசமரச ஞானியாகவே கொள்ள வேண்டும். அவர் சமயங்கடந்தவர். 'சமயக்

கணக்கர் மதிவழி கூறுதுலகியல் கூறிப் பொருளிது வென்ற வள்ளுவர்' என்னும் கல்லாடனுர் கருத்துரை காண்க.

இனித், திருவள்ளுவர்க்குப் பின் வந்த ஞானிகள் திருக்குறளைக் கண்டவாற்றைக் காண்போம்.

**அகரமுதல :**

திருக்குறளின் தொடக்கமே, 'அகரமுதல' என்னும் முதற்பாட்டே, ஞானிகளின் சிந்தையைக் கவர்ந்திருக்கிறது. பின்வரும் ஞானத்திருவாக்குகளே இதற்குச் சான்று.

*''அகர முதலா யனைத்துமாய் நிற்கும்''*
*''ஆரும் அறியார் அகாரம் அவனென்று''*
—திருமூலர் (திருமந்திரம்)

*''அகரமுதலானை அணியாப்பனூரானை''*
—ஞானசம்பந்தர் (தேவாரம்)

*''ஆனத்தின்முதலெழுத்தாய் நின்ருர் போலும்''*
—திருநாவுக்கரசர் (தேவாரம்)

*''அகர முதலின் எழுத்தாகி நின்ருய்''*
—சுந்தரர் (தேவாரம்)

*''அகர உயிர்போல் அறிவாகி எங்கும்*
*நிகரில் இறை நிற்கும் நிறைந்து''*
—உமாபதி சிவம் (திருவருட்பயன்)

**திருமூலர் :**

திருமூலர் திருமந்திரம், திருமுறைபன்னிரண்டனுள் பத்தாவது. சாத்திரத்துக்குத் திருமந்திரம், தோத்திரத்துக்குத் திருவாசகம் என்று போற்றப் பெறுவது. பின்வந்த ஞானிகள் பெரியோர்கள் அனைவராலும் போற்றப்பெறும் அத்திருமந்திரத்திரு நூலுள், ஆசிரியர் திருமூலர் திருக்குறட் டொடர்களையும் கருத்துக்களையும் எடுத்தாண்டிருக்கின்றனர்.

*''அறிவுடையார் நெஞ்சொடு ஆதிபகவனும்''*
—திருமந்திரம்

(ஆதிபகவன்—குறள் *1*)

*''அறவாழிஅந்தணன் ஆதிபராபரன்''*
—திருமந்திரம்

*(அறவாழி அந்தணன் குறள்—8)*

*''முழக்கி எழுவன மும்மத வேழம்*
*அடக்க அறிவெனும் தோட்டியை வைத்தேன்'!*
—திருமந்திரம்

*''உரன் என்னும் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்*
—குறள் *24*

*''அந்தண்மை பூண்ட அறவோர் ஆகத்துச்*
*சிந்தைசெய் அந்தணர் சேரும் செழும்புவி''*
—திருமந்திரம்

(அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ் வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்.
—குறள் *30*)

**சுந்தரர் :**

சுந்தரமூர்த்திகள் தேவாரம் திருநெல்வாயிலரத்துறைப் பதிகத்துள் ''அகரம் முதலின்எழுத்தாகிநின்ருய் அடியேனுய்யப் போவதோர்சூழல் சொல்லே'' ''பொறிவாயிலிவ்வைந்தினையுமவியப் பொருதுன்னடியே புகுஞ் சூழல் சொல்லே'', ''அற்ருர் பிறவிக் கடனீந்தியேறியபடியேனுய்யப்போவதோர் சூழல் சொல்லே'', ''ஓடுபுனற்கரையாம் இளமை யுறங்கி விழித்தாலொக்குமிப் பிறவி வாடியிருந்து வருந்தல் செய்யாதடியேனுய்யப்போவதோர் சூழல் சொல்லே'', என்னும் திருவாக்குகளில், அகரமுதல (1) பொறி வாயிலைந்தவித்தான் (6) பிறவிப் பெருங்கடல் (10) உறங்குவதுபோலும் (339) என்ற குறட்பாக்களைக் காண்கிரும்.

**சேரமான் பெருமாள் :**

சேரமான் பெருமாள் நாயனுர் தமது திருக்கைலாயஞான உலாவில் (உலாக்களுள் இஃதொன்றே ஞான உலா எனப் பெயர்பெற்றது. முதன்முதலாக எழுந்ததாகலின் ஆதி உலா என்றும் பெயர்) இரண்டு குறட்பாக்களை அப்படியே எடுத்தாண்டுள்ளனர்.

''இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாருஞ் செய்வர் சிறப்பென்னும்
—சொல்லாலே

அல்குற்கு மேகலையைச் சூழ்ந்தாள்
—அணிமுலைமேல்

மல்கிய சாந்தொடு பூப்புனைந்து''
—உலா *136, 137*

*"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும்
ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உளஎன்று
—பண்டையோர்
கட்டுரையை மேம்படுத்தாள்"* —உலா (173)

திருக்கைலாய ஞான உலாவின் இவ்வடிகளுள் ஆசிரியர் 'இல்லாரை எல்லாரும்' (751) கண்டு கேட்டு (1101) என்னும் குறள்களை எடுத்தாண்டதோடு 'பண்டையோர்கட்டுரை' என்று திருக்குறளைச் சிறப்பித்தார்.

**உய்யவந்த தேவநாயனர் :**

சித்தாந்த சாத்திரம் பதினன்கனுள் திருக்களிற்றுப்படியார் என்பதொன்று. இது சிவஞான போதத்திலும் காலத்தால் முந்தியது. இதன் ஆசிரியர் திருக்கடவூர் உய்யவந்ததேவ நாயனர் (திருஉந்தியார் ஆசிரியரும் இவரே). மெய்யுணர்தல், அவாவறுத்தல் என்ற இரண்டதிகாரத்தினின்றும் இரண்டு குறட்பாக்களைத் தம் நூலுள் எடுத்தாண்டுள்ளார்.

*"சார்புணர்ந்து சார்புகெட வொழுகின்
என்றமையால்
சார்புணர்தல் தானே தியானமுமாம்—சார்பு
கெடவொழுகில் நல்ல சமாதியுமாம் கேதப்
படவருவ தில்லைவினைப் பற்று"*

—திருக்களிற்றுப்படியார்—34

இவ்வெண்பாவில் எடுத்துக்காட்டப்பட்டது, திருக்குறள் மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்திலுள்ள, 'சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்துச் சார்தரா சார்தரும் நோய்' என்ற பாடலாகும். ஆசிரியர் உய்ய வந்ததேவ நாயனர், இக்குறட்பாவைக் கொண்டு தம் நூலுள் தியான சமாதிகளை விளக்குகிறார்.

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை
என்றமையால்
வேண்டின் அஃதொன்றுமே வேண்டுவது
—வேண்டினது
வேண்டாமை வேண்டவரும் என்றமையால்
வேண்டிடுக
வேண்டாமை வேண்டுமவன்பால்"

*—திருக்களிற்றுப்படியார் (40)*

இவ்வெண்பாவுள் 'வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது வேண்டாமை வேண்டவரும்' (362) என்னும் அவா அறுத்தல் அதிகாரக் குறட்பா எடுத்துக் காட்டப்பட்டது.

**உமாபதிசிவம் :**

சித்தாந்த சாத்திரம் பதினன்கனுள் இன்றென்று நெஞ்சுவிடு தூது என்பது. இதன் ஆசிரியர் உமாபதிசிவாசாரியர், துறவு என்னும் அதிகாரத்திலுள்ள, 'தலைப்பட்டார் தீரத்துறந்தார் மயங்கி வலைப்பட்டார் மற்றறையவர்' (34) என்ற குறட்பாவை அப்படியே எடுத்துக்கூறியுள்ளார்.

*"உன்னை ஒழிய உறவில்லை என்னுமது
தன்னை அறிவை தனியறிவை முன்னந்
தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றையவ ரென்று
—நிலத்தமிழின்
தெய்வப் புலமைத் திருவள் ளுவர்உரைத்த
மெய்வைத்த சொல்லை விரும்பாமல்"*

—நெஞ்சுவிடு தூது

திருவள்ளுவரைத் தெய்வப்புலமைத் திருவள்ளுவர் என்றும், திருக்குறளை மெய்வைத்த சொல் என்றும் உமாபதி சிவம் சிறப்பிக்கிருர்.

**கண்ணுடைய வள்ளலார் :**

கண்ணுடைய வள்ளலார், சீர்காழி வள்ளலார் சந்தானத்துள் ஒருவர். ஞான சம்பந்தரை உபாசனு குருவாகக் கொண்டவர். இவர் செய்த ஒழிவிலொடுக்கம் வேதாந்த சித்தாந்த சமரச ஞான நூல். இதற்குத் திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் உரை செய்திருக்கின்றனர். 'வள்ளல்குரு ராயன்' என்ற இதன் சிறப்புப்பாயிரச் செய்யுளுக்கு மட்டும் திருவருட் பிரகாச வள்ளலார் வடலூர் இராமலிங்க அடிகள் ஒரு விரிவுரை செய்திருக்கின்றனர். இவ்வுரைகளுடன் இந்நூல் இராமலிங்கஅடிகளால் 1851-இல் பதிப்பிக்கப்பட்டது. இந்நூலின்கண் ஒரு செய்யுளில் ஆசிரியர் கண்ணுடைய வள்ளலார் துறவு, மெய்யுணர்தல், அவா அறுத்தல் என்ற அதி

காரங்களையும் சிறப்பித்துக்கூறி அவை மூன்றும் அறு சமயத்தோர்க்கும் அறுதி யிட்டுரைத்தது என்கின்றார். இன்னொரு செய்யுளில், பற்றற்ற கண்ணே பிறப்பறுக் கும் என்ற பாட்டு உமக்கு மட்டுமோ? அஃது எல்லாச் சமயத்துக்கும் பொது அன்றோ என்கின்றார்.

*அறுசமயத் தோர்க்கு மறுதியிட்ட கூடற்*
*றுறவா யவாவறுத்தல் தூய்மை—பிறவா*
*முடிகளச முத்தி முயற்சி எல்லாம் மூத்த*
*கடைகரும நாசமிது காண்.*

—ஒழிவிலொடுக்கம்

**உரை :**

சமயிகள் அறுவரும் வீடடைதற்குநெறி வேறு வேறு கூறினர் ஆயினும், ஒருவர் கூறியது ஒருவர்க்குச் சம்மதம் அன்று, துற வாய் மெய்யுணர்ந்து அவாவறுத்தல் அனைவர்க்கும் சம்மதமாம்; ஆதலின் ‘அறு சமயத்தோர்க்கு மறுதியிட்ட கூடற்றுறவா யவா வறுத்தல்’ என்றார். துறவும் அவா வறுத்தலும் கூறினமையான் இடையில் மெய்யுணர்வு வருவிக்கப்பட்டது. இங் ஙனம் சங்கப் பலகையின் மேல் ஏறிக் கூறிய மூன்றதிகாரங்கள் என்றது, திருக் குறளுள் துறவாதி மூன்றதிகாரங் களையுமாம் என்றறிக:

—சிதம்பர சுவாமிகள்.

*பாசங் கழன்றால் பசுவுக் கிடம்பதியா*
*மூசல் வடங்கழன்ற தொல்லாதோ—நேசித்த*
*பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் பாட்டுமக்கோ*
*மற்றைச் சமயமெங்கு மாம்.*

—ஒழிவிலொடுக்கம்

பாசநீக்கமும் பதியடைவும் கூறப்புகுந்த ஆசிரியர் ‘பற்றற்ற கண்ணே பிறப்பறுக் கும் மற்று நிலையாமை காணப்படும்’ (349) என்ற குறட்பாவை எடுத்துக்காட்டி, இப் பாட்டு உம்சமயத்துக்கு மட்டுமோ மற்றை எல்லாச் சமயத்துக்கும் ஆம் என்று, சம யாதீதப் பேருண்மையையும் நிலை நாட்டு கின்றார். ‘அற்றது பற்றெனின் உற்றது வீடு’ என்னும் திருவாய்மொழியும் ஈண்டு நினைத்தற்பாலது.

**சிவப்பிரகாசர் :**

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் பல நூல்களின் ஆசிரியர். வீரசைவத் துறவி. சுவாமிகளின் வாக்கில் திருக்குறட் பாக்களும் தொடர்களும் கருத்துக்களும் திகழுமிடங்கள் பல. சிலவற்றைக் காண் போம்.

*“பகிர்மதி தவழும் பவளவார் சடையோன்*
*பேரருள் பெற்றும் பெறாரின் ஏங்கி*
*நெஞ்சம் நெக்குருகி நிற்பை நீயே*
*பேயேன் பெறாது பெற்றார் போலக்*
*களிகூர்ந் துள்ளக் கவலைதீர்ந் தேனே*
*அன்ன மாடு மகன்துறைப் பொய்கை*
*வாதவூ ரன்ப வாத லாலே*
*தெய்வப் புலமைத் திருவள்ளுவனார்*
*நன்றறறி வாரிற் கயவர் திருவுடையர்*
*நெஞ்சத் தவல மிலரெனுஞ்*
*செஞ்சொற் பொருளின் தேற்றறிந் தேனே”*

—நால்வர் நான்மணிமாலை

அறத்தாறிதுவெனவேண்டா (37) என்னும் குறட்பா, நால்வர்நான்மணி மாலைப் பாடல் இன்னொன்றில் முழுமையாக எடுத்தாளப் பெற்றுள்ளது. சிவஞான பாலைய சுவாமி கள் நெஞ்சுவிடு தூதுள், அழுக்காறவா வெகுளி (35) இரப்பாரையில்லாயின் (1056) என்ற இரண்டு குறட்பாக்கள் அருமையாக எடுத்தாளப்பட்டுள்ளன. திருவெங்கைக் கோவையுள் பல இடங் களில் குறட்பாக்கள் முழுமையாகவும், தொடர்களும் கருத்துக்களும் எடுத்தாளப் பட்டுள்ளன. திருவெங்கைக்கலம்பகம் 42-ஆம் செய்யுளில்,

*“என்னடிகள் வெண்குறளே ரடியிரண்டு*
*மென்றலைமே லிருத்து மிறை......”*

எனவரும் பகுதி மிக்க அழகிது. என் னடிகள் என்றது திருவளளுவரை. திருவள் ளுவரின் திருக்குறள் அடி இரண்டையும் தலைமேல் இருத்துதல், இறைவன் திருவடி இரண்டையும் தலைமேல் இருத்துதல்

ஆகிய சிலேடைப் பொருளில் நயம்படக் கூறி ஆசிரியர் சிவப்பிரகாசர் திருவள்ளுவரைச் சிறப்பிக்கிருர்.

### இராமலிங்க அடிகள் :

திருவருட்பிரகாச வள்ளலார் எனும் இராமலிங்க அடிகள் (1823-1874) திருவருட்பாவை அருளிச் செய்தவர். அத்திருவருட்பா முதல் திருமுறையுள், நெஞ்சறிவுறுத்தல் என்னும் நீண்ட கலிவெண்பாவில், குறட்பாக்களையும் தொடர்களையும் கருத்துக்களையும் பல இடங்களில் அடிகள் எடுத்தாண்டுள்ளனர். சில காண்போம்.

*கூத்தாட் டவைசேர் குழாம்விளிந்தாற்*
*போலுமென்ற*
*சீர்த்தாட் குறள் மொழியுந் தேர்ந்திலையே''*
—நெஞ்சறி

*''செல்லா இடத்துச் சினந்தீது செல்லிடத்தும்*
*இல்லதனில் தீயதென்ற தெண்ணிலையே*
*மல்லல்பெறத்*
*''தன்னைத்தான் காக்கில் சினங்காக்க*
*என்றதனைப்*
*பொன்னைப்போல் போற்றிப்*
*புகழ்ந்திலையே துன்னி*
*அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல என்னுந்*
*திகழ் வாய்மையும் நீதெளியாய்—இகழ்வாரை''*
—நெஞ். 433—435

*''உறங்குவது போலுமென்ற ஒண்குறளின்*
*வாய்மை*
*மறங்கருதி அந்தோ மறந்தாய்—கறங்கின்*
*நெருநல் உளனொருவன் என்னும் நெடுஞ்சொல்*
*மருவும் குறட்பா மறந்தாய்—தெருவில்''*
—நெஞ். 446. 447:

### திருக்குறள் வகுப்பு :

பொதுமக்களுக்காக முதன் முதலில் திருக்குறள் வகுப்பு நடத்தத் தொடங்கியவர் வள்ளற்பெருமானே. தம் மாணவர் உபய கலாநிதிப் பெரும்புலவர் தொழுவூர் வேலாயுத முதலியாரைக் கொண்டு அடிகள் திருக்குறள் வகுப்பை நடத்தினுர்கள். இதுபற்றிச் சுவையான வரலாருென்றும் அறியப்படுகிறது. கற்ருர், கல்லார், இளையார், முதியோர் எனப் பலதரத்தினரும் வகுப்புக்கு வந்தனர். வேலாயுத முதலியார் தமது இருமொழிப்புலமை, கவியாற்றல், பரந்த நூலாராய்ச்சி, இவற்றிற்கேற்ப வகுப்பை மிக விரிவாக நடத்தினர். மூன்று மாதமாகியும் மூன்று அதிகாரங்கள்தானும் முடியவில்லையாம். சாமானியர் சிலருக்குப் பாடத்தைப் பின்பற்றுவது கடினமாயிற்று. அடிகளிடம் முறையிட்டனர். அடிகள் 'மூடமுண்ட வித்துவானைக் கூப்பிடும்' என்ருர்கள். இது கேட்டவருட் சிலர் மூடம், முண்டம் என்று அடிகள் முதலியாரைக் குறிப்பிட்டதாகக் கருதி உள்நகைகொண்டனர். முதலியார் வந்ததும் அடிகள் மூடமுண்ட வித்துவான் என்ருல், மாணுக்கர்களின் மூடத்தை உண்ட வித்துவான் என்று பொருள் எனக்கூறி, வகுப்பை எளிதில் நடத்தக் கட்டளையிட்டார்களாம்.

அடிகள் காலத்திலும் அதற்கு முன்பும் திருக்குறள் முதலிய நூல்களைப் பாடம் கேட்கும் தரமுள்ளவர்கள், தக்க புலவர்களிடம் முறையாகப் பாடம் கேட்கும் வழக்கமுண்டே ஒழியக் கற்ருர்கல்லார் முதலிய எல்லாத்தரத்தினர்க்கும் பொதுவாகப் பாடஞ் சொல்லும் வழக்கமில்லை. இதிகாசபுராண உபந்நியாசங்களே பொதுமக்களுக்காகச் செய்யப்பட்டு வந்தன. அந்நிலையில் அக்காலத்தில் முதன் முதலாகப் பொதுமக்களின் பொருட்டுத் திருக்குறள் வகுப்பு நடத்தத் தொடங்கியவர் இராமலிங்க அடிகளே ஆவர் எனலாம்.

### முடிவுரை :

இதுகாறும் கூறியவற்ருல் திருக்குறள் ஞானிகளையும் கவர்ந்த நூல் என்பதும், கடவுள் வாழ்த்து, துறவு, மெய்யுணர்தல், அவாவறுத்தல், நிலையாமை, தவம் ஆகிய அதிகாரங்களில் பற்றற்ற பரமஞானிகளும் சிந்தையைப் பறிகொடுத்தனர் என்பதும் பெறப்பட்டன.

திருவள்ளுவர் திருவடிபோற்றி.

# "உறவு ஆர் உளர்?"

(சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்கள், தேவகோட்டை)

நமக்கு அமைந்திருக்கின்ற உறவு, உடம்பு பற்றி வந்ததும், உயிர் பற்றி வந்ததும்என இரு வகைப்பட்டிருப்பது. இவற்றுள் உடம்பு பற்றி உண்டாகிய உறவு, உயிரைப் பற்றிய அளவுக்கு நிலைபேறுடையதாக இருக்கமாட்டாது. உயிரைப் பற்றியதான உறவோ, உடம்பைப் பற்றி நின்றும் உதவி செய்வதாயிருக்கும். உடம்பைப் பற்றிய உறவு நிலைபேறில்லாததாயிருப்பதற்குக் காரணம்: அவ்வுறவுடையார் அனைவரும் நிலைபேறில்லாதனவாகிய அவரதும் நம்மதுமான உடம்புகளை வைத்து உறவு கொண்டிருப்பதுதான்.

தாயென்றும் தந்தையென்றும், மகனென்றும் மகளென்றும் மாமனென்றும் மாமியென்றும் இன்ன பல முறைகளை வைத்து நாம் கொண்டாடுகின்ற உறவுகளெல்லாம் உடம்புகள் பற்றி எழுந்தனவே யென்பது, அவ்வுடம்புகள் நீங்குகிறபொழுது அந்த உறவு முறைகளும் உடனே நீங்கி விடுவது கொண்டு உணரப்பெறுவதாகும். இந்த உறவுகளில் மிக நெருங்கியது தாயுறவு. குழந்தையைப் பெற்று வளர்த்துப் பேணிக்காப்பதில் பேரவாக் கொண்டவள் அன்னை. அவளது உறவும் நிலைபேறில்லாத ஒன்றேயாகும். மகப்பேற்றுக்கு முன்னர் வயிற்றினுள்ளேயே குழந்தை மரித்துவிட அதனால் அவர்களிருவரது உறவுகளும் இல்லாது போய் விடுவதும், குழந்தையைப் பெற்றுக் கொடுத்துவிட்டுக் கொஞ்சிக் குலாவக் கொடுத்து வைக்காது தாய் இறந்துவிட அதனால் அவர்களது உறவு துண்டிக்கப்பட்டு விடுவதும் உலகியலிற் காணப்பெறுவனவாகும். "என்பெற்ற தாயரும் என்னைப் பிணமென்றிகழ்ந்து விட்டார்" என்பது பட்டினத்தடிகள் திருவாக்கு.

மிகமிக நெருங்கிய தாயின் உறவே, இங்ஙனம் தடைபட்டொழியுமாயின் மற்றையோர் உறவு பற்றி உறுதி கூற எவ்வாறு இயலும்? இதனாலேயே "எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார் எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார், செத்தால் வந்து உதவுவார் ஒருவர் இல்லை சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்" என்று அப்பரடிகள் அருளிச் செய்தார்கள். மனித உறவும் அவர்களது உதவியும் நிலைபேறுடையனவல்ல என்பதை உணர்ந்து நிலையான நல்லுறவையும் உதவியையும் நாடியறிந்து அவற்றைப் பெறமுயலுவதே அறிவுடைமையாகும்.

யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் பள்ளிப்பிள்ளைகளுக்கென எழுதித் தந்த பாலபாடத்தில், ஒருபிள்ளைக்குத்தாய் தந்தையர் செய்யும் உதவியைவிட ஆசிரியர் செய்யும் உதவி மிக மேலானதென்று அறிவுறுத்துகிறார்கள். "அழிந்து போகின்ற உனது உடம்புக்கு வேண்டிய உதவிகளைத் தடையின்றிச் செய்து வருகின்ற தாய் தந்தையரைவிட அழியாததாகிய உயிருக்கு வேண்டிய உதவிகளைச் செய்யும் ஆசிரியர் மேலானவர்" என்று பள்ளிப்பிள்ளைகளுக்கு அவர் அறிவுரைவழங்குகின்றார்.

என்று நாம் உண்டோ! அன்று முதல் இன்றுவரை இனி எதிர்காலம் முழுவதிலுமே நாம் இறைவனுடைய உதவியையின்றி இயங்குமாறில்லை. உயிர்களுக்குப் பக்குவம் வருகிற வரை தாம் செய்யும் உதவிகளைச் சிவபெருமான் நம்மனைய உயிர்வர்க்கத்தின் வாயிலாகவும் தத்துவ தாத்துவிகங்க ளாகிய சடப்பொருள்களின் வாயிலாகவும் நிகழ்த்தி வருவார். பக்குவம் பெற்றபிறகு அவர் நேரே தோன்றி எல்லாஉதவிகளையும் புரிந்தருளுவார். தத்துவ தாத்துவிகங்களாகிய சடப்பொருள்களிலும் உயிர்களிலும் ஒழிவறப்பொருந்தியிருக்கின்ற சிவபெருமானது நிறைவு அவர் அவ்வெல்லாப் பொருள்களின் வாயிலாகவும் உயிர்களுக்கு உதவி புரிவதற்கு வாய்ப்பாயிருக்கிறது.

உடம்பு பற்றி வந்த உறவினர் அவ்வுறவு காரணத்தால் உடம்பு பற்றிய அளவுக்குச்

செய்யும் உதவியும் சிவபெருமானது திருவுள்ளக் குறிப்பின்வழியேதான் நிகழும். அது, அவ்வுறவினரது உள்ளக் கருத்தின்படி நிகழுவதன்று என்பதை, உதவி செய்யும் கடமையையுடைய உறவினர் சிலர் அதனில் நீங்கியிருப்பதனாலும், அக்கடமையே இல்லாத பிறர் தாமே வலிய வந்து வேண்டியவற்றை வேண்டியவாறே உதவுவதாலும் ஒருவாறு ஊகித்து உணரலாம். இங்ஙனம் இறைவனது நியதியின்படிதான் எந்நாளிலும் நமக்கு எல்லா உதவிகளும் கிடைத்து வருகின்றன என்பதை உண்மையாக உணரும்பொழுதுதான் ''உற்றார் ஆர் உளரோ'' என்றும், ''ஆர் எனக்கு உறவு அமரர்கள்ஏறே'' என்றும் எழுந்த அருள்மொழிகளின் உண்மை நன்கு புலப்படும்.

உயிர் நலம் பற்றிச் செய்யும் உதவிகளில் தலையானதாக இருப்பது அதன் அறிவை விளங்கச் செய்வதாகும். அறிவு விளக்கத்திற்கு முதற்படியாய் அமைந்திருப்பது உலகியற் கல்வி. எழுத்தறிவை முதன்மையாகக் கொண்டு தொடங்கப்பெறும் இக்கல்வியின் மூலமாகப் பருமையாகவும் நுண்மையாகவும் உள்ள உலகத்துப் பொருள்களைப் பற்றிய அறிவும், அவ்வறிவையுடைய தன்னைப் பற்றிய அறிவும், தன்னுடனும் உலகத்துடனும் தொடர்பு கொண்டிருக்கின்ற தலைவனைப் பற்றிய அறிவும் ஒருவனுக்கு உண்டாகும். அதன் பயனாக அவன் நிலைபேறில்லாத உலக உறவை விடுத்து நிலைபேறுடைய இறைவனுறவைப்பெறுதற்குரிய உபாயத்தைத் தேடுவான். இதனாலேயே ''எழுத்தறிவித்-தவன் இறைவன் ஆகும்''என்றும்,''எழுத்தறியத் தீரும் இழிதகைமை, தீர்ந்தான் மொழித் திறத்தின் முட்டறுப்பான் ஆகும்—மொழித் திறத்தின், முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து கட்டறுத்து வீடு பெறும்'' என்றும் ஆன்றோர் அருளிச் செய்வாராயினர்.

நிலையானதும், துன்பம் கலவாததுமாகிய பேரின்பத்தை உதவும் நல்லுறவாவார் சிவபெருமான் ஒருவரே என்பதைத் திருமூலதேவ நாயனார் தமது திருமந்திரமான கடவுள் வாழ்த்து இருபத்தொன்பதாவது செய்யுளில் தெளிவுறுத்துகின்றார்.

அத் திருப்பாட்டு,

> ''காணநில் லாயடி யேற்குற வாருளர்
> நாணநில் லேன்உன்னை நான்தழு
> விக்கொள்ளக்
> கோணநில் லாத குணத்தடி யார்மனத்
> தாணியன் ஆகி அமர்ந்துநின் றானே''

என்பதாகும்.

எந்த வேளையிலும் எல்லா உதவிகளையும் இடையீடின்றிச் செய்து வருகின்ற இறைவனை அநுமான அளவை, ஆகம அளவைகளாலன்றிக் காட்சியளவையாற் கண்டு கூறியவர் எவரும் இலர். அதனாலேயே அவரது இருப்புப் பற்றிய ஐயப்பாடு, அறிவுடையார் என்று தங்களை மதித்துக் கொண்டிருக்கும் ஒரு சிலரிடத்தும்கூட நீங்காது நிலைபெற்று இருக்கின்றது. விறகில் தீயும் பாலில் நெய்யும் மணியில் ஒளியும் போல மறைந்து நின்று உதவுகின்ற பெருமானைக் கண்காண வந்து காட்சிதந்துதவும்படி வேண்டிக் 'காண நில்லாய்' என்று முதலில் அருளினார்.

காதல் மீக்கூரக் கடிமணம் புரிந்துகொண்ட கணவன் மனைவியருள்ளும் முதல் சந்திப்பின் போது நாணம் நிகழுவது தானே முறைமையும் இயற்கையும் ஆகும்? ''நறைமலர்க் குழலார் எவர்க்கும் மெய் அகலா நாணமே நலம்செய் பூண்'' என்பது வில்லி பாரதம். அரும்பெறல் தலைவனாகிய ஆண்டவன் நேரே தோன்றி அருட்காட்சி நல்கும் வேளையில் அவரைஅத்துவிதமாகக்கலந்துதழுவி இன்புறுவதற்குக் கரையற்ற காதல் அவர்பாலிருப்பதால் உலகியல் நியதியை ஒட்டி நாணம் அடையமாட்டேனென்று ''நாணநில்லேன் உன்னை நான் தழுவிக் கொள்ள'' என்று இரண்டாவது வரியில் கூறியருளினார்.

உயிர்களுக்கு மலத்தொடர்பால் வந்தது, கோண நிற்கும் குணம். மலத் தொடர்பு நீங்கி அருள் தொடர்பு நிகழும்போது, கோணநிற்கும் குணம் நீங்கி மாண நிற்கும் குணம் உண்டாகும். ''திருகல் ஆகிய சிந்தை திருத்தலாம், மருக லானடி வாழ்த்தி வணங்கவே'' என்னும் அருள்மொழி இங்கே நினைவுகூரத்தக்கதாகும்.

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளேபுக்கு நிற்பவனாகிய பொன்னார் சடைப்புண்ணியன், பொக்கம் மிக்கவரது பூவையும் நீரையும் கண்டு நக்கு நிற்பானாதலின் கோணநிற்கும் குணத்தினராகிய மற்றையோரது மனத்தில் தோய்ந்தும் தோயாதவனாக இருந்து கோணநில்லாத குணத்தினராகிய மெய்யடியாரது உள்ளத்தில் பசுமரத்தாணி போலப் பதிந்து பற்றி நிலைபெற்றிருப்பான் என்று ''கோணநில்லாத குணத்து அடியார்மனத்து ஆணியன் ஆகி அமர்ந்து நின்றான்'' என இறுதிப் பகுதியிற் குறித்தருளினார்.

இங்ஙனம் நாணமின்றித் தழுவிக் கொள்ளக் காண நின்றும், சிந்தை திருந்திய மெய்யடியாரது உள்ளங்களில் நீங்காது நிலைபெற்றும் விளங்கிப் பெத்தக் காலத்திலும் முத்திக் காலத்திலும் பேருதவிபுரிந்து வருகின்ற சிவபெருமானையன்றி நமக்கு உண்மையான உறவு வேறு யாருளர்?

# மகாபாரதம்

அருண்மொழியரசு
திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்.

(முற்றொடர்ச்சி)

**பாண்டவர் பிறப்பு :**

பாண்டு எப்போதும் வேட்டையாடுவதில் விருப்பமாக இருந்தான். தன் மனைவியுடனும் சில சமயம் வேட்டைக்குச் செல்வான். செல்லுங்கால், இரு மனைவியருக்கு இடையே இமயமலையில் உலாவும்போது, அவன் இரண்டு பெண்யானைகளுக்கு நடுவில் செல்லும் ஐராவதம் போல் காட்சியளித்தான். அம் மன்னர் பெருமான் வனத்தில் உலாவும் போது, அவனைப் பார்த்தவர்கள் தேவதையென்று நினைத்தார்கள். காட்டிலேயே அவன் வேட்டைத் தொழிலில் ஈடுபட்டிருந்தபோது, திருதராஷ்டிரனுடைய ஏவலால் உணவாதிகளையும், மற்றுந் தேவையான பொருள்களையும், ஏவலர்கள் கொண்டுவந்து கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு சமயம் கிந்தமமுனிவர் மானின் உருவங்கொண்டு தன் மனைவியைப் பெண் மானாகச் செய்து கூடிக்கொண்டிருந்தார். புணர்ந்து கொண்டிருந்த அந்த மானைப் பாண்டு ஐந்து பாணங்களால் அடித்தான். வேதனையுள்ள மான் துடித்து மனிதவாக்கினால் பேசலுற்றது. "பாண்டுவே! நீ பெரிய பாவத்தைச் செய்தனை. விலங்குகளை வேட்டையாடுவது வேந்தர்க்கு அறமாயினும், புணர்ச்சியில் இன்புறுகின்ற விலங்கைக் கொல்லக் கூடாது. நல்ல பண்புள்ள மதிகுல மன்னனாகிய நீ, விதியினால் மதிமயங்கி இக்கருமத்தைச் செய்தாய். நான் கிந்தமன் என்ற முனிவன். சந்ததியை விரும்பி மானுட உருவில் கூடுவதற்கு நாணி, மான் உருவங்கொண்டு என் மனைவியுடன் கலவி புரியும் போது, நீ என்னை அம்பினால் அடித்தாய்.

இன்பம்எல்லாவுயிர்களுக்கும்உரியது. நீயும் உன் மனைவியால் இன்புறுகின்றபோது என் போல் மரணமடைவாய்" என்று கூறிவிட்டு, துன்புற்று மாண்டு போனார். பெண்மானாக இருந்த முனிபத்தினியும் மாண்டாள். பாண்டு இந்த நிகழ்ச்சியைக் கண்டு மிகப் பெரிதும் வருந்தினான்.

பாண்டு, மாண்ட இருவருடைய உடல்களையும் எரித்து, உறவினனைப்போல் நெருப்புக்கடன் நீர்க்கடன்களைச் செய்தான். முனிவர் தந்த சாபத்தை நினைத்துத் தாபத்தையடைந்தான். என் தந்தை விசித்திரவீரியரும் சிற்றின்பத்தில் அதிகப்பற்றுவைத்தே, அற்ப ஆயுளாகப் போனார் என்று கேள்விப்பட்டேன். அதேபோல் நான் என் மனைவியருடன் கூடித் தருமத்தை மறந்து இக்கதிக்கு ஆளானேன். இனி எனக்கு இந்த உலகில் என்ன சுகம் இருக்கின்றது? இனி நான் தவநெறியில் நிற்பேன். என்னை உண்டு பண்ணிய வியாச முனிவரைப்போல் கடுந்தவஞ் செய்வேன். தலையை மொட்டையடித்துக்கொண்டு முனிவனாகத் திரிவேன். மரங்களின் அடியில் சென்று கனிகளை யாசித்து உண்பேன். இடிந்த பாழ் வீட்டிலும் மரத்தடியிலும் இருப்பேன். விருப்பும் வெறுப்பும், இன்பமுந்துன்பமும் தட்பமும் வெப்பமும், இகழும் புகழும் ஒன்றாகப் பார்ப்பேன். யாரையும் ஏளனஞ் செய்யமாட்டேன். யாரிடத்திலும் புருவத்தை நெறிக்கமாட்டேன். எப்போதும் மலர்ந்த முகத்துடனும், எல்லாவுயிர்களுக்கும் நன்மை செய்து கொண்டும், சராசரவுயிர்களில் ஒன்றையேனும் இம்சிக்காமலும் வேற்றுமையில்லாமலும் இருப்பேன். எட்டு வீடுகளில் தான் பிட்சை கேட்பேன். கிடைக்காதபோது பட்டினியாக இருப்பேன். ஒன்பதாவது வீட்டுக்குப் போகமாட்டேன். ஒரு வீட்டிலேயே எட்டுக் கவள உணவு கிடைத்துவிட்டால், இரண்டாவது வீட்டுக்குச் செல்லமாட்டேன். அற்ப உணவையே

உண்பேன். கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் மனத்தில் ஒன்று போன்ற எண்ணங் கொள்வேன். கத்தியால் ஒருகையை வெட்டுகின்றவனையும், சந்தனத்தை இன்னொரு கையினால் பூசுகின்றவனையும் ஒன்றாகப் பார்ப்பேன். இருப்பதையும் இறப்பதையும் சமமாகக் கருதுவேன். பொறிபுலன்களை அவித்து ஆசாபாசங்கள் அனைத்தையும் அகற்றி, ஆகாயம் என்ற ஒன்றைப்போல் தூய்மையும் வாய்மையும் உடையவனாய்ப் பற்றற்றுத் திரிவேன். நெறிநின்று இந்தயாக்கையை முடிப்பேன்.'' என்று கூறினான் பெருமூச் செறிந்தான். குந்தியையும் மாத்திரியையும் பார்த்துச் சொல்வான்.

"அன்புள்ளவர்களே! நீங்கள் நகரஞ் செல்லுங்கள், என் தாய் *கௌசல்யை, தம்பி விதுரன், தமையனார், பாட்டி சத்தியவதி, பீஷ்மர் முதலியவர்களிடம், என் வணக்கத்தைக் கூறுங்கள். பாண்டு துறவியானான் என்றும் சொல்லுங்கள். கடவுள் உங்கட்கு அருள் புரிவார். உங்கட்கும் எனக்கும் இருந்த உறவு நீங்கிவிட்டது. வருந்தாமல் போய் வாருங்கள்'' என்றான்.

இருமனைவியர்களும் பாண்டுவின் சொற்களைக் கேட்டுச் சிறிது நேரம் சிலைபோல் நின்றார்கள். திரும்ப உணர்ச்சி பெற்றுச் சொல்கின்றார்கள். "பெருமானே! தங்களைப் பிரிந்தால் எங்கள் உடம்பை விட்டு உயிர் பிரியும். தவம் புரியும் தங்கட்கு நாங்கள் தங்கள் புதல்விகளைப் போல் இருந்து பணிவிடை புரிவோம். தங்கள் தவத்துக்கு நாங்கள் இடையூறாக இருக்கமாட்டோம்'' என்றி கூறிக் கண்கலுழ்ந்தார்கள்.

பாண்டு "நல்லது. நீங்களும் என்னுடன் இருந்து தவநெறியைக் கடைப் பிடியுங்கள். நான் இந்த உடம்பைத் தவத்தினால் வற்றலாகச் செய்வேன். கடுங்குளிர் வெயில் தாகம் பசி மழை இவைகளைத் தாங்கிக் கொண்டு, உறுதியுடன் பரம்பொருளைத் தியானஞ் செய்வேன்'' என்று கூறினான்.

அந்த உத்தமன், தான் அணிந்திருந்த விலைமதிக்க முடியாத முத்து, இரத்தினம் முதலியவைகள் பதித்த அணிகலன்களையும் பொன்னுடைகளையும் கழற்றி, அங்குள்ள பரிசனங்கட்கு வழங்கினான். தன் மெத்தை வாகனங்களையும் கொடுத்துவிட்டான். அந்த ஏவலர்களைப்பார்த்து நீங்கள் சென்று, அத்தினபுரத்தில் "பாண்டு துறவியானான் என்று சொல்லுங்கள்'' என்றான். அதைக் கேட்டு அவர்கள் ஐயோ என்று வாய்விட்டுக் கதறியழுதார்கள்.

அவனுடைய பொன் முதலியவைகளை எடுத்துக்கொண்டு போய்த் திருதராஷ்டிரனிடம் தந்து நிகழ்ந்ததைக் கூறினார்கள். கேட்டு எல்லோரும் பெருந்துயரத்தை யடைந்தார்கள். திருதராஷ்டிரன் தம்பியின் நற்குணங்களையே சதாநினைத்து வருந்தினான். அவன் ஊக்கத்தை இழந்து நல்ல படுக்கையில் படுக்காமலும், நல்லுணவுகளை விரும்பாமலும் துன்புற்றிருந்தான்.

பாண்டு காய்கனிகளையுண்டுகொண்டு நாகசதம் என்ற மலைக்குச் சென்றான். குபேரனுடைய சைத்ராதம் என்ற உத்யான வனத்தையடைந்தான். காலகூடம் என்ற இடத்தையுங் கடந்து கந்தமாதனகிரியை அடைந்தான். சித்தர்கள் வாழ்கின்ற இந்திரத் துய்மனம் என்ற தடாகத்தையும், அப்ஜகூடம் என்ற இடத்தையும் கடந்து, சதச்ருங்கம் என்ற மலையில் தவஞ்செய்தான்.

அங்குள்ள அநேக முனிவர்கள் பாண்டுவினிடம் மிக்க அன்புடன் பழகினார்கள். பாண்டு சில முனிவர்க்கு நண்பனாகவும், சிலர்க்கு மகனைப் போலவும், உடன் பிறந்தானைப் போலவும் இருந்தான். பாண்டு பெருந் தவஞ்செய்து பிரம்மண்யத்தை அடைந்தான். ஒரு அமாவாசையன்று முனிவர்கள் பிரமதேவரைத் தெரிசிக்கப்புறப்பட்டார்கள். பாண்டு அவர்களைப் பார்த்து "நீங்கள் எங்கே போகின்றீர்கள்?'' என்று கேட்டான். "பாண்டுவே! இன்று பிரம்மலோகத்தில் தேவர்கள் முனிவர்கள் பிதிர்கள் இவர்களுடைய பெரிய அவை நடைபெறப் போகின்றது. நாங்கள் அதனைப் பார்க்கப் போகின்றோம் என்றார்கள். பாண்டு நானும் வருகின்றேன் என்று மனைவியருடன் புறப்பட்டான். முனிவர்கள் மொழிகின்றார்கள். "அப்பா! பாண்டு! பறவைகளாலுங் கடக்க முடியாத கடினவழி. காற்று ஒன்றுதான் அங்கே செல்லும். நீ உன் மனைவியருடன் கடக்கமுடியாது. ஆதலால் நீ எங்களுடன் எப்படித் தொடரமுடியும்? என்றார்கள். பாண்டு "சந்ததியில்லாத எனக்குச் சுவர்க்கம் எப்படி கிடைக்கும்?'' என்று கேட்டான். முனிவர்கள் "அன்பனே! நீ வருந்தாதே,

* பாண்டுவின் தாய் அம்பாலிகைக்கு மற்றொரு பெயர் கௌசல்யை என்பது.

நாங்கள் ஞானக்கண்ணினுல் பார்த்துச் சொல்லுகின்றேம். உனக்கு நல்ல சந்ததிகள் கிடைக்கப்போகின்றன. உத்தமமான நற்கதி உனக்கு உண்டாகும்'' என்று கூறிவிட்டுச் சென்ருர்கள்.

அத்தினபுரத்தில் தேவகன் என்ற மன்னவருடைய காமக்கிழத்தியின் மகளான, மிக்க அழகுள்ள பெண்மணியைப் பீஷ்மர் விதுரருக்கு விவாகஞ் செய்து வைத்தார். விதுரர் அப்பெண்ணிடம் சந்ததியை உண்டு பண்ணினுர். காந்தாரி ஒருசமயம் வியாசரை ஆராதித்து, நூறு புதல்வர்கள் பிறக்க வேண்டும் என்ற வரத்தை வேண்டினுள். வியாசர் அதுபடியே வரந்தந்தார். திருதராஷ்டிரனுக்கு மிக்க அடக்கமாகப் பணிவிடைபுரிந்து அவன்பால் காந்தாரி கருவைப் பெற்ருள்.

பாண்டு, முனிவர் தந்த சாபத்தை நினைந்து நினைந்து நெஞ்சம் நெகிழ்ந்தான். சந்ததியில்லாத தனக்கு மேல் உலகம் எப்படியுண்டாகும் என்று நினைந்து வருந்தினுன். பிதிர்களின் கடனைத் தீர்ப்பது எப்படி? என்றும் சிந்தித்தான்.

தனிமையில் குந்தியைப் பார்த்து ''அன்புள்ளவளே என் மனதில் ஆணி அறைந்தாற் போன்ற துயரம் ஏற்பட்டிருக்கின்றது. இரும்பாணியை எடுக்குங் காந்தாமணி போன்ற உத்தமி நீ! உன்னுல்தான் என் கவலை தீர வேண்டும். யதுகுலத்தின் செல்வியே! நீ இதுவரை என் சொல்லைத் தட்டியதில்லை. இனியும் தட்டப்போவதில்லை. நான் முனிசாபத்தால் நொந்திருக்கின்றேன். புதல்வர் இல்லாதவர்கட்கு நற்கதியில்லையென்று மறைகள் மொழிகின்றன. என் மனக்கவலை மாற நீ தக்கதொரு உபாயத்தால் சந்ததியை உண்டு செய்வாய்'' என்ருன்.

குந்தி கணவனை நோக்கிக் கூறுவாள். ''தவசீலரே! நான் இளமையில் துருவாச முனிவருக்குத் தொண்டு செய்தேன். அவர் ஒரு மந்திரத்தை உபதேசித்தார். அம் மந்திரத்தால் எந்தத் தேவதையை அழைக்கின்றேனே, அந்தத் தேவதை வந்து அவருடைய வடிவில் ஒரு புதல்வனைத் தருவார். தாங்கள் படும் இத்துயரத்தைப் போக்கத் தங்கள் அனுமதியால் இதனைச் செய்வேன்'' என்ருள். இந்த அமுதம் போன்ற சொற்களைக் கேட்ட பாண்டு, வறியவன் புதையலைக் கண்டது போல் மகிழ்ச்சியுற்ருன்.

பெண்ணே! தேவர்களது அருளால் சந்தானம் ஏற்படுமானுல், அது மிகுந்த மேன்மையாகும். நான் பெரும் பாக்கியசாலி. தேவர்களுக்குள் சிறந்தவர் அறக்கடவுள். அவர் எல்லாவற்றையும் அடக்குபவர். அதனுல் இயமன் என்ற பேர்பெற்றவர். அவர் ஆதித்த பகவானுடைய புதல்வர். அவரை ஆராதனை செய்'' என்ருன்.

குந்திதேவி துருவாசரை மனத்தால் வணங்கித் தூய்மையாக இருந்து, அம்மந்திரத்தைச் செபித்து அறக்கடவுளைத் தியானித்தாள். ஒளிமயமான உருவுடன் அறக்கடவுள் தோன்றிக் குந்தியைப் பார்த்து அருள்பாலித்துப் புதல்வனைப் பாலித்தார்.

சூரியன் துலாராசியில் இருக்கும்போது, பஞ்சமி திதியில், கேட்டை நட்சத்திரத்தில், அபிஜித் என்ற எட்டாவது முகூர்த்தத்தில், நிறைந்த புகழுள்ள ஒரு குமாரனைக் குந்திதேவி பெற்ருள்.

இவன் பரமதரும சீலனுக இருப்பான். சத்தியவாக்குள்ளவனுகவும் பேராற்றல் படைத்தவனுகவும் இருந்து உலகை அரசு புரிவான். *யுதிஷ்டிரன்'' என்று பேர் பெறுவான். புகழும் தகவும் பொருந்தி வாழ்வான் என்று வானில் ஒரு பேரொலி தோன்றியது. மைந்தனைக்கண்டு பாண்டு பெருமகிழ்ச்சியுற்ருன். முனிவர்கள் வாழ்த்தினுர்கள்.

---

* யுதிஷ்டிரன் — யுத்தத்தில் புறமுதுகு காட்டாதவன்.

—(தொடரும்)

---

## செய்திச் சுருக்கம்

### திருப்பணித் துவக்கவிழா :

திருக்கயிலாய பரம்பரைத் **திருவாவடுதுறை ஆதீனம் 22-வது** குருமகா சந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள்** அவர்களின் அருளாணையின்படி, இற்றைக்குப் பல நூற்றுண்டுகளுக்கு முன்பு, மாணிக்கவாசகப் பெருமான் எடுப்பித்த **திருப்பெருந்துறை** ஆளுடையார் கோயிலைப் புதுப்பிக்கும் திருப்பணியின் துவக்க விழா, 28—4—69 திங்கட்கிழமை, மாலை 5 மணிக்குத் தியாகராச மண்டபத்தில், நமது தமிழக அரசின் அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா, B.A. அவர்கள், தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவிற்காக ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் நேரில் எழுந்தருளியதுடன், நமது ஆணையர் திரு. ஆ. இராதாகிருஷ்ணன், தஞ்சைத் துணைஆணையர் திரு. டி. என் சிங்காரவேலு முதலியார், நாகப்பட்டினம் உதவி ஆணையாளர் திரு. பி. புலியூருடையான், திரு. சா. கணேசன், M.L.C. ஆகிய பெருமக்கள் பற்பலர் விழாவிற் கலந்து கொண்டு சிறப்பித்து மகிழ்ந்தனர். விழா மிகவும் நன்கினிது சிறப்புற நிகழ்ந்தது.

—ஆசிரியர்.

# பாரிவிழாவில், தலைமைக் கவிதை

**மாண்புமிகு முதல்வர் திரு. மு. கருணாநிதி அவர்கள்.**

*[இராமநாதபுரம் மாவட்டம், திருப்புத்தூர் வட்டத்தில் உள்ள பறம்புமலை என்னும் பிரான்மலைப் பாரீசுவரர் கோயிலில், தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்களின் திருவுள்ளப் பாங்கின்படி, 28—4—69 அன்று நிகழ்ந்த தமிழ்வள்ளல் பாரிவிழாவில், நன்கினிது நடைபெற்ற கவியரங்கத்திற்குத் தலைமை ஏற்றுத் தமிழக அரசின் முதல்வர் மாண்புமிகு கலைஞர் திரு. மு. கருணாநிதி அவர்கள் பாடிய தலைமைக் கவிதை, பண்டைச் சங்ககாலத்திற் புலவர்களைப் போற்றிப் புரந்த பாரிவள்ளலை யாவரும் உணர்ந்து நினைவு கூர்தற் பொருட்டு, இங்கு வெளியிடப் பெறுகின்றது. —ஆசிரியர்.]*

பறம்புமலை வந்திருக்கும் பாவலர்க்கும்
பைந் தமிழால் பணியாற்றும் அடிகளார்க்கும்
எறும்பெனவே செயல் புரியும் மாதவர்க்கும்
பெரும்புகழ்சேர் அன்பில் தென்னரசு அனைவர்க்கும்
விரும்பி என் வணக்கம் குவிக்கின்றேன் ஏற்றிடுக!

அடியென்றால் குறளின் அடி
மடி யென்றால் ஆவின் மடி
முடியென்றால் நாதர் முடி
குடி யென்றால் குன்றக் குடி

அக்குடியிற் சிறந்தவராம்
அறநெறிகள் பயின்றவராம்
அடிகளார் எனும் பெயரால்
அருந்தமிழர் அழைக்கும் சீரார்
பெருந்தகைமைப் புலவரேறு;

கனிவுடனே எனை அழைத்துக்
கவியரங்கத் தலைமை யேற்று,
என்பிலதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறமென்ற
குறள்உணர்ந்து
முன்பிருந்த முடிவேந்தன் பாரிபுகழ்ச்
சொல்விருந்து அளிப்பதற்கு ஆணையிட்டார்
ஆணையிடும் முதலமைச்சாய் நானிருந்தும்!

ஏணையிடும் ஆராரோ பாட்டொலியில்
ஊனையிடும் குழந்தை உறங்குதல்போல்
அடங்கிவிட்டேன் அடிகளார் ஆணைக்கு, அதனாலே
தொடங்கிவிட்டேன் கவியரங்கத் தலைமையுரை...!
சேர சோழ பாண்டியர் பாரி அரசு, அத்துடன்
சேர வல்ல நல் தமிழக அரசு....
மன்னர் அமைத்தனர் முன்னைய நான்கரசு...எங்கள்
அண்ணன் அமைத்தார் தமிழக அரசு...

அஞ்சும் அரசுகள்...பகைவர்க்கு
அஞ்சா அரசுகள்!
கொஞ்சும் தமிழால் அவைதம்
கொடிப்புகழ் பாட ஒருவரை யொருவர்
மிஞ்சும் கவிகள் உள்ளார் இங்கே!
தஞ்சம் என்பது தன்மானம் அன்று
பஞ்சம் என்பது பகைகளில் ஒன்று
வஞ்சம் என்பதை வேரோடு கொன்று
நெஞ்சம் தமிழால் நனைந்தது நன்று.

மஞ்சம் இனிதோ களச்சாவினும் என்று...புகழ்க்
குஞ்சம் கட்டி வாழ்ந்தனர் அன்று!
நெய்தல் குறிஞ்சி மருதம் முல்லை; மழை
பெய்தல் இல்லாப் பாலையும் இணைத்து
நிலம் ஐந்து பிரித்திட்டார்
வளம் பெருக்க முனைந்திட்டார்...
ஐவகை நிலத்தினிலே ஆரம்பத்தில் அரசனில்லை...
பல்வகை வளங்கொழித்த மருதநிலம்—தன்
பாதுகாப்புக் கோர் தலைவன் தேடி...
தீது அகற்றும் தேவன்இவன் எனக்கூறி
மண்காக்கும் மன்னனென
மக்கள் எல்லாம் ஏற்றுக்கொண்டார்...
வலிவான படைகளுடன், மன்னர்களும்
நிலையான அரசுகண்டார், மருதமண்ணில்!

ஆவினம் நிறைந்திட்ட முல்லைமீது
அரசோச்சிக் கால்நடை காப்பதற்குத்
தலைவர் தோன்றி...
அவரே நாளடைவில் 'கோன், ஆனார்...பின்; 'கோனார்' ஆனார்.
அரசுமுறை தமிழகத்தில்
அமைந்தவிதம் எடுத்துச்சொன்னேன்...மேலும் சிலவற்றைத்
தொடுத்துச் சொல்வேன்...

ஐம்பெருங் குழுவும் எண்பே ராயமும்...
அந்நாள் தமிழர் கண்ட முறைகள்!...
சங்கப் புலவர் அறிவுரை கேட்டுச்
சிங்கவேந்தர் சிரமேற் கொள்வர்!
பரணரும் கபிலரும் கிழாரும் பாட்டியும்
பட்டத்து மன்னர்க்குப் பலபட உரைத்துப்
பகைமை தீர்த்த நிகழ்ச்சிகள் பலவாம்!
மன்னர் ஆண்ட பண்டைக் காலம்
மல்லர் உண்டு மழவர் உண்டு...இசை
வல்லவராம் பாணர் உண்டு; பாடினி உண்டு!
கூத்தர் உண்டு, விறலியர் உண்டு, நூல்
யாத்திடும் நற்புலவர் மிகவுண்டு...
இன்று ஆண்டவன் இருப்பிடம் கோயில் என்போம்
அன்று அரசாண்டவர் இருப்பிடம் கோயில் என்பர்.
புலி, வில், கயல் என இலச்சினை கொண்டு; வாணிபப்
பொதிகள் மீதும் பொறித்தனர் அன்று!

நாவாய்கள் வெளிநாட்டில் தமிழர் நாமம்பாடும்...
நமதரசு அனுப்புகின்ற மயில்தோகை கடற் காற்றில் ஆடும்,
'அதி'கார மில்லா மிளகு...
அதிகார முடன் அயல்நாடு செல்லும்...
அந்நியரை வாணிபத்தில் வெல்லும்...
ஆயிரம் பதினுயிரம் பொதியென்று குவியும் நெல்லும்!
அரவுரி யன்ன ஆடைகள் அணிந்தோம்—பிறர்
மரவுரி யணிந்து அலைந்த போழ்தில்!

பாங்குறு சங்க காலம் பழம் பெருந் தங்க காலம்
பாண்டியத் தூதர் பல்லோர் பரந்த நல் ரோம நாட்டில்
ஆண்டிடும் அகஸ்டஸ் முன்னே அழகுற அமர்ந்திருந்தார்;
பல்லவரும் தூதுவரைச் சீனம் வரை அனுப்பிவைத்தார், சீனர்
நல்லவராய் இருந்தபோது;
கூற்றுவர்க்கு அஞ்சாத கொடித்தேர் மன்னர்...

கூற்றங்களாய்ப் பிரித்துத் தமிழ் நாடாண்ட சிறப்பு என்னே!
முத்தூர்க் கூற்றமென்றும், மிழலைக் கூற்றமென்றும்
முன்னவராம் சங்கவேந்தர் நிலம் வகுத்தாண்டார்; வளம்
பகுத்தாண்டார்!
ஊராட்சி கண்டது நாம்தான் என்று
உரத்த குரல் எழுப்புதற்கு வழியே இன்றிப்
பேராட்சி புரிந்திட்ட மன்னர் மன்னர்...தமிழ்ச்

சீராட்சி நிலவிடவே
அழகுமுறை அமைத்தமுறை
அகப்பாடல் கூறக்கேட்போம்,
'கயிறு பிணிக் குழிசி ஓலை கொண்மார்
பொறிகண்டு அழிக்கும் ஆவணமாக்கள்'
இதனை யொட்டிச் சிற்றூரில் தேர்தல் செய்து
நலனையெலாம் காப்பதற்கு மன்றம் காண்பர்.
படவோலை போட்டின்று முத்திரை கேட்கின்றோம் தேர்தலுக்கு...
குடவோலை போட்டன்று முந்திக் கொண்டார் தமிழரசர் நம்மை
யெல்லாம்!

வேட்பாளர் தகுதி குறிப்பதிலே நம்மை வென்றுவிட்டார் பழந்
தமிழர்;
கணக்குக் காட்டார்... கையூட்டுப் பெற்றோர்... பிறர் பொருள்
கவர்ந்தார்—கழுதையேறுந் தண்டனை பெற்றோர்...
கண்டிப்பாய்த் தேர்தலில் நிற்கத் தகுதியற்றோர்...
இது அன்று-!

இன்றோ;
இவைதானே வேட்பாளர் தகுதியென்று வாதாடுகின்றார்...
ஈட்டியின் பாய்ச்சல் கண்டு இமைகொட்டியவன் கோழையெனல்
...தமிழ் வீரம்
தீட்டிய புகழாம்;
கல்லணை கட்டுதற்கு அயல் நாட்டுக் கைதிகளைக் கொணர்ந்தவன்
கரிகாலன்
கல்தலையில் ஏற்றிவைத்துக் கனகவிசயரைச் சேர்த்திழுத்து
வந்தவன் நம் செங்குட்டுவன்...
கடாரங்கொண்டவன் சோழ மன்னன்...
கங்கைகொண்டான் தமிழ்முடி கொண்டான்...

ஐம்படைத் தாலியுடன் அருஞ்சமர் மூழ்கி வென்றான்
தலையாலங் கானத்தான் இளந்தமிழ்ப் பாண்டியனும்...

அந்தப்,
பழந்தமிழ் வீரமெல்லாம்
பண்பார்ந்த விவேகமுடன்
பாகுதேன் கலந்தாற்போல்
பக்குவமாய்க் காட்டி வென்றார்;
பல்லவத்துச் சீயம் எங்கள்
பகுத்தறிவுப் பேரறிஞர்...
பாசமிகும் **அண்ணா** என்பேன்...
அவர் தமிழரசும்...அதற்கு
அடிப்படையாம்
தமிழ் முடியரசும்...
அணிபெறவே அரங்கொன்றை அமைத்துள்ளார்; இதில்
தமிழ் கொழிக்கும் புலவர்களின் மத்தியிலே
தலைமையேற்கச் சொல்லியுள்ளார்; எனக்கென்ன—தகுதியென்று
எனக்கேதான் தெரியவில்லை.
பிறிதொருவர் எனக்குத் தகுதியிருக்கு தென்றால்
புலிபாயும் —புயல்சீறும்—பூகம்பம் உருவாகும்—
என் தகுதி சிறுதகுதி—
என் கவிக்கு இலக்கணம்தான் எட்டுக் காதம்;
எதுகைமோனை இப்போது பத்து மாதம்; இன்னும் பிறக்கவில்லை.

சீர்தளைக்கும் சீமந்தம் ஆகவில்லை,
வேர் தழைத்த பலாக்கனிபோல் கவிவழங்கப்
பேர் பொறித்த பாவாணர் இருக்கின்றார்.
மாலையிலே...(பூ மாலையிலே)
நார் போல நானிருந்து மணம்பெறுவேன்—தமிழ்த்
தார் வேந்தர் இன்றிருந்தால் இவர்க்குப்
பார் புகழும் பரிசளிப்பார்—என்பரிசு இவரை
ஊர் அறிய மெச்சுவதே!
முதலில்,

சேர அரசு!...
சவகர்லால் பாடுகின்றார்...
மறைந்த நேரு சவகர்லால்...
சேர அரசுபற்றிக் கூறிநின்றார்...
நாமெல்லாம் ஒன்றுசேர
அரசுபற்றிக் கூறிநின்றார்...
அந்த ஒருமைப் பாட்டுக்கு
அண்ணா இணங்கி நின்றார்...
மக்கள் மனம் சோர அரசு வேண்டாம்.
மகிழ்வு வாழ்வில் சேர அரசு வேண்டும் என்று
தேர்தலிலே தீர்ப்பளித்தார்...அவர்கள்

திருப்தி கொள்ள நாடாண்டு அனைவரும் ஒன்று
சேர அரசு காண்போம்...
முதலில்...
கவிசவகர்லாலின
கவிசேரும் அரசுகாண்போம்...

அடுத்து ;
சோழ அரசு!...
சோழ அரசின் வெற்றிச் சின்னம் ராஜேந்திரன்—
நலம்,
சூழ அரசொன்று வேண்டும்—தீமை
வீழ அஃதாள்வதும் வேண்டும்—புவி
வாழக் கோல் கொண்டான் அன்னோன்! கவி
வாழ எழுதுகோல் கொண்டான் இன்னோன்...
எழுதியதை விளைத்திடுக நண்ப, தமிழ்
இன்பத்தில் திளைத்திடவே நாமும்!
அடுத்து,
பாண்டிய அரசு...!
பாடிடுவோர் தேசிகனும்—
பாய்ந்திடும் மீன் கொடியில் ;
தோய்ந்திடும் தேன்—கவியில்!
ஓய்ந்திடும் வேலையின்றி
உழைத்திடும் தமிழர்க்காகக்
காய்ந்திடும் கழனிமீது
கனமழை பெய்தல் போலக்
கவிமழை பொழிந்திடுவார்
அடுத்து :
பாரி அரசு
சிங்கார வடிவேலன் செந்தமிழால் ஆளுகின்றார்...
சிந்தையெலாம் அணுவெல்லாம் உணர்வேற்றிப் பாடுகின்றார்...
பறம்புமலைப் பாரியென்றால்...
கரம்புநிலம் கழனியாகும்
கரும்புத் தமிழ்ச் சொல்எடுத்து, நாம்
விரும்பும் வண்ணம் தருவதற்கு வந்திடுக வடிவேலா!
அடுத்து
தமிழக அரசு
குடியரசைப் புகழ்வதற்கு முடியரசு இருக்கின்றார்...
படியரிசி போட்ட அண்ணன்
தமிழரசு கண்ட களைப்பில் உறங்குகின்றார்.
நாமும்,
தூங்காமல் தூங்குகின்ற தமிழர்களை எழுப்பிடுவோம்...
அதன்பின் ;
அண்ணன் அருகினிலே உறங்கிடுவோம்...
அது வரையில் வழங்கிடுக புதுப்பாட்டு, புலவரேறே!
முடிவுரை யொன்றைக் கேட்காதீர்...உடம்பு
முடியா நிலையை அறிந்திடுவீர்.
அரசு பற்றிச் சொன்னதெல்லாம் ஆய்ந்திடுக...
ஆலுக்கு விழுதுபோல் எமக்கு ஆதரவாய் வாய்த்திடுக...
அனைவர்க்கும் வணக்கம் சொல்லி,
முடிக்கின்றேன் என்னுரையை...

வாழ்க தமிழ்!
வாழ்க தாயகம்!
வணக்கம்!

# கல்வெட்டில் தேவாரம்

திரு. சி. ஆர். சீனிவாசன் எம். ஏ.,

தேவாரம் என்ற சொல்லிற்குப் பலவகைகளிற் பொருள் கூறலாம். தே—கடவுள்; வாரம்—அன்பு என்றும்; தே—கடவுள், ஆரம்—மாலை என்றும், பிரித்துக் கூறலாம். இதனைத் தவிர 'வாரம்' என்ற சொல்லுக்கு அன்பு என்றும், தேவாரம் தெய்வத்தினிடம் அன்பை விளைவிக்கும் பாடல்களென்றும், அவை ஓதுபவர்களுக்கு அன்பும் அருளும் அளிக்கவல்ல பாடல்களென்றும், தெய்வம் சுட்டிய இசைத்திறன் அமைத்த பாடல்களென்றும், தெய்வத்திற்கே உரிமையுடைய பாடல்களென்றும் பொருள் கொள்ளப் படுவதுண்டு. (திருக்கோயில் மாலை 8, பக்கம் 81).

மூவர் பாடியது தேவாரம் என்று கூறப்படினும், தேவாரம் என்பதைத் திருநாவுக்கரசர் பாடிய பாடல்களுக்கே உரிய சிறப்புப் பெயர் என்று கூறுகிறார்கள். 'திருக்கடைக் காப்பு', 'திருப்பாட்டு' என்று முறையே திருஞான சம்பந்தர், சுந்தரர், பாடல்களைச் சிறப்புப் பெயருடன் வழங்கி வருகின்றனர்.

தென்னாட்டின் இலக்கிய வளர்ச்சி சமயத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டதாகும். ஏழாம் நூற்றாண்டிற்கு முன்பாகத் தென்னாட்டில் பிற சமயங்கள் குறிப்பாகச் சமணமும் பௌத்தமும் ஆதிக்கம் பெற்று வளர்ச்சியுற்றன. வலிமைகுன்றிய சைவ சமயம் நாயன்மார்களின் இடைவிடாத் திருத்தொண்டின் காரணமாகவும், அவர்கள் பாடியருளிய இசைநலம் சான்ற பக்திப் பாடல்களாலும், மீண்டும் தழைத்தோங்கியது. தங்கள் தலையாய கடமையென நினைந்து, திருத்தலங்கள் பலவற்றிற்கும் சென்று ஆங்காங்கே உறையும் இறைவனை எல்லோரும் உணரும் வண்ணம் எளியமுறையில் பண்ணமைத்துப் பாடினர். பண்ணமைத்துப் பாடிய பாக்கள் மன்னவர்களையும் மக்களையும் தங்கள் பால் ஈர்த்தன. பதிகங்களின் அருட்சுவையிலும் பொருட்சுவையிலும் மனம் பறிகொடுத்த சோழகுலச் செம்மல் இராசராச அபயகுல சேகரன், அடியார்கள் பாடிய பதிகங்களனைத்தையும் தொகுக்கப் பேரார்வமடைந்ததில் வியப்பொன்றுமில்லை.

“எண்டோளீசற்கு எழில் மாடம் எழுபது செய்துலகாண்ட செங்கட்சோழன்” என்ற திருமங்கையாழ்வாரின் திருவாக்கால் பல திறப்பட்ட கோவில்கள் இருந்தன என்பது தெரிகிறது. தேவாரத் திருப்பதிகங்களின் காலத்தில் தான் 'கற்றளி' சமைக்கும் வழக்கு சோழர்களால் வித்திடப்பட்டது என்று, பல சோழர் கல்வெட்டுகளில் 'கற்றளி' என்ற சொல் பரவலாகக் காணப்படுவதினால் புலனாகிறது. பல்லவர் காலத்தில் பாடல் பெற்ற பலதலங்கள் கற்றளிகளாக இருக்கவில்லை. பின்னர்த்தான் பாடல் பெற்ற தலங்களில் கற்றளிகள் அமைக்கச் சோழர்கள் முயன்றனர் என்பதைச் செம்பியன் மாதேவியின் அறப்பணிகள் வலியுறுத்துகின்றன.

கற்றளிகளில் பொறிக்கப்பட்டுள்ள பல கல்வெட்டுகள் அக்காலத்திய சமய நிலையையும், குறிப்பாகத் திருப்பதிகங்களைப் பற்றிய செய்தியையும், நன்கினிது புலப்படுத்துகின்றன. பல்லவர் காலத்தில் தான் முதன்முதலில் கோவில்களில் திருப்பதிகங்களைப் பாடும் வழக்குப் பிறந்ததென எட்டாம் நூற்றாண்டினனான விசயநந்தி விக்கிரமனுடைய திருவல்லம் கோவில் கல்வெட்டு மூலம் உணரலாம். திருமுறைகளை முறைப்படுத்தியவன் சோழ அரசன்

(இ ராசராசசோழன்) என்று கொண்டால், அதற்கு முன்னரே பாடும்பணி இருந்தமைக்கு இக்கல்வெட்டு சான்று பகர்கிறது. பின்னர்ச் சோழ அரசர்களுடைய கல்வெட்டுகளில் பெருமளவில் பதிகங்கள் பாடப்பட்டன என்பதற்குத் தொடர்ச்சியாகச் சான்றுகள் கிடைக்கின்றன. முதலாம் ஆதித்தன், முதற்பராந்தகன், உத்தம சோழன் முதலிய சோழ மன்னராட்சியில் பதிகங்கள் பாடப்பெற்றன என்பதை, அவ்வரசர்களின் கல்வெட்டுகள் நமக்குத் தெரிவிக்கின்றன.

திருச்சி மாவட்டத்தில் லால்குடியில் கிடைக்கப்பெறும் கல்வெட்டினுல் சப்தரிஷீசுவரர் கோவிலில் மூன்று 'சந்திகளிலும்' திருத்தவத்துறை இறைவனுடைய வழிபாட்டின் போது இரு அந்தணர்கள் திருப்பதியத்தைப் பாடிவந்தனர் என்றறிகின்ருேம். இதனுல் 'ஓதுவார்கள்' இருந்தனர் என்றும், கோவில்களின் தன்மையைப் பொறுத்து இவர்களின் எண்ணிக்கை குறைந்தும் கூடியும் இருந்ததென்றும் அறிகிருேம். தஞ்சைக் கோவிலில் இராசராசன் 48 ஓதுவார்களை நியமித்தான். திருப்பதிகம் ஓதுவார்க்கு மானியங்களும் அளிக்கப்பட்டன. இதைத் 'திருப்பதியக்காணி' என்று கூறுவர்.

திருமுறைகளை ஓதுமிடம் 'திருக்கைக்கோட்டி மண்டபம்' எனப்படும். இத்தகைய மண்டபங்களை அறப்பணியில் நாட்டம் கொண்டோர் எழுப்பி, ஓதுவார்களுக்கு உணவளிக்க நிலங்களை இறையிலியாகக் கொடுத்தனர். இவைகளுக்குத்'திருக்கைக் கோட்டிப்புறம்' என்று கூறுவர். இவைகளைக் குலோத்துங்கன் கல்வெட்டுகளில் காணலாம். கோவிலூர்க் கல்வெட்டினுல் இராச கம்பீர சோழிய வரையன் என்பானும், திருவீழிமிழலைக் கல்வெட்டினுல் நரசிங்கதேவன் என்பானும், இப்பணி செய்தவர்களில் இருவரென்றுணரலாம். முதலாம் குலோத்துங்கனின் படைத்தலைவனுன மணவிற்கூத்தன் காலிங்கராயன் இத்திருப்பதிகங்களைச் செப்பேடுகளில் பொறித்துத் தில்லையம்பலத்தில் போற்றிப் பாதுகாத்தான் என்று மற்ருெரு கல்வெட்டுக் கூறுகின்றது.

தேவாரப் பாடல்கள் இசைநயம் அமைந்தவை. இசைக்கு மெருகூட்ட இன்னிசைக் கருவிகள் தேவை. அத்தேவையை உணர்ந்து இசைக்கருவிகளுடன் அவைகளை இசைக்கப் பராந்தகனின் கால முதல் பல நிவந்தங்கள் அளித்தமைக்குக் கல்வெட்டுகள் சான்று கூறுகின்றன. இறைவனின் திருத்தொண்டில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு, ஆடல் பாடல்களில் வல்ல தேவரடியார்களும் திருப்பதிகங்களைச் சிறப்பான திருநாட்களில் பாடிவந்தனர். இவ்வாறு பாடும் உரிமை பல தேவரடியார்களுக்கு விற்கப்பட்டது என்று, மூன்ரும் குலோத்துங்கனின் தென்னுர்க்காடு மாவட்டத்து நல்லூர்க் கல்வெட்டுக் கூறுகிறது.

பதிகங்களைப் போற்றுவதோடு நில்லாமல், மக்கள் அவற்றைப் பாதுகாக்கவும் தொடங்கினர். இம் முயற்சியின் பயனுகப் பலமடங்களும் குகைகளும் தோன்றின. திருமுறைகளைப் புதுப்பித்தல் படியெடுத்தல் கற்பித்தல் இவை குகையில் வாழும் துறவிகளுக்கும், அவருடைய சீடர்களுக்கும் முதற்பணியாக அமைந்தது. இத்தகைய மடங்கள் திருத்துறைப்பூண்டி, குறுக்கை, சீர்காழி, திருவிடைவாய், திருப்புகலூர், திருமாகாளம், திருமணஞ்சேரி, தில்லை மற்றும் பலவிடங்களில் இருந்தன என்பது கல்வெட்டுகளால் தெரிகிறது. திருமுறைத்தொண்டினைச் செய்த அறிஞர்கட்குத் தமிழ்விரகர் என்ற சிறப்புப் பெயர் அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். திருஞானசம்பந்தரும் தம்மைத் தமிழ்விரகர் என்று கூறிக்கொள்வது ஈண்டு நோக்கற்பாலது.

திருப்பதிகங்களுக்கு உயர்வு அளித்த மக்கள் நாயன்மார்கள் எனப் பெறும் சமய குரவர்களைப் போற்ருமலா இருப்பார்கள்? அவர்கள் நாயன்மார்களின் திருமேனிகளை எழுந்தருளச் செய்தனர். முதலாம் இராசராசன், திருமேனிகளை எழுந்தருளச் செய்ய நிவந்தமளித்த செய்தி ஒரு கல்

வெட்டால் நமக்குத் தெரிகிறது. இவ்வழிபாடு நாளடைவிற் பரவலாயிற்று. சண்டேசுவரர் வழிபாடு பெருகுகிறது. பல கல்வெட்டுகளில் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள முக்கியத்துவத்திலிருந்து நன்கு புரிகிறது. 'சண்டேசுவரன் ஓலை' முதலிய சொற்றொடர்கள் இக்கருத்தை வலியுறுத்துகின்றன. சில கோயில்களில் நாயன்மார்களின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சியினைக் கல்லில் வடித்திருப்பதைக் காண்கிறோம். கோவிலை அடுத்துள்ள மடங்களுக்கு நாயன்மார்களின் பெயர்கள் வழங்கப்பட்டன. அவற்றுள் தில்லைவாழ் அந்தணர்மடம், திருஞான சம்பந்தர்மடம், திருநாவுக்கரசர் மடம், சிறுத்தொண்டர் மடம், திருமூலர் மடம், சுந்தரர்மடம் முதலானவற்றை இங்குக் கூறலாம். நாட்பூசைகளும், ஆண்டு விழாக்களும் நடத்தப் பட்டன.

தேவாரத்தில் காணப்படும் பெயர்கள் பலவற்றைப் பல்லவர் சோழர் காலத்து மக்கள் பெற்றிருந்தனர் என்பதைப் பல கல்வெட்டுகளில் காணலாம். சில கல்வெட்டுகளில் காணப்பெறும் சொற்றொடர்கள் தேவாரத்திற்கும் நாயன்மார்களுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை எடுத்துக் காட்டுகின்றன.

சுந்தரர் வாழ்க்கையில் நிகழ்ந்த இரு நிகழ்ச்சிகளை இலக்கியத்தினால் மட்டுமன்றிக் கல்வெட்டாலும் அறியப் பெறுகிறோம். சுந்தரரைத் தடுத்தாட் கொண்டவர் திருவெண்ணெய் நல்லூர் இறைவன். இப்பதியில் உறையும் இறைவனைத் "தடுத்தாட் கொண்டருளிய நாயனார்" என்று அவ்வாலயக் கோபுரத்திலிருந்து கிடைக்கப் பெறும்பாடலாக வமைந்த கல்வெட்டு கூறுகிறது. மற்றொரு கல்வெட்டில் "பிச்சன் என்று பாடச் சொன்னான்" என்ற தொடர், சுந்தரர் திருவெண்ணெய் நல்லூர் இறைவனைப் "பித்தா பிறை சூடி" என்று பாடியதை நமக்கு நினைவுறுத்துகிறது. தம்வாக்கு இறைவன் வாக்கு என்று பதிகங்களில் தம்மைப் பற்றி, தம் மூரைப்பற்றி அதிகமாகப் பாடி 'காழிபாதி வீழி பாதி' என்று சிறப்புப் பெயர் பெற்றவரும், தமிழ் விரகருமான திருஞான சம்பந்தருக்குப் பல்லக்கும் குடையும் முத்துச் சிவிகையும் பெண்ணாகடத்திற்கு அருகில் உள்ள திருவரத்துறையில் இறைவன் அருளினான். இச்செய்தியை விசயநகர அரசர் ஆகிய தேவராயரின் பதினான்காம் நூற்றாண்டுக் கல்வெட்டு இவ்வூர் இறைவனை "திருமுத்துச் சிவிகை கொடுத்தருளிய நாயனார்" என்று குறிப்பிடுவதால் நாம் அறிகிறோம்.

மேற்கூறப்பட்ட கல்வெட்டுகளிலிருந்து சோழர் காலமுதல் விசயநகர அரசர் காலம் வரை, தேவாரத்தின் செல்வாக்கு மக்களிடையே எவ்வாறு ஓங்கியிருந்தது என்பது புலனாகிறது.

தேவாரங்களின் சிறப்பை உணர்ந்த மக்கள் அவற்றைச் செப்பேடுகளில் மட்டுமின்றிக் கல்லிலும் எழுதி வைத்தனர் என்பதற்குத் திருவிடைவாய் என்னும் தலத்தில் கிடைக்கப் பெறும் கல்வெட்டே சான்றாகும். இவ்வூர்க் கற்றளியில் இதுவரை கிடைக்கப் பெறாத திருஞான சம்பந்தரின் பதினொரு பாடல்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அவர் பாடிய பதிகங்களின் எண்ணிக்கையை இப்பாடல்கள் 384 ஆக உயர்த்துகின்றன. இக்கல்வெட்டு கல்வெட்டுத் துறையினரால் படி எடுக்கப்பட்டிருக்கிறது. எழுத்தின் வரி வடிவு, அமைப்பு முதலியவைகளை ஆராய்ந்தால் அக்கல்வெட்டு சற்றேறக்குறைய பன்னிரண்டாம் நூற்றாண்டினைச் சார்ந்தது என்றும்—தேவாரம் தொகுக்கப்பட்ட காலமாக இதைக் கொள்ளலாம் என்றும்—கல்வெட்டுத் துறையினரின் ஆண்டு அறிக்கை கூறுகிறது.

முதலாம் இராசேந்திரனின் கும்பகோணம் தாலுக்கா மானம்பாடிக் கல்வெட்டொன்று 'தேவாரநாயகம்' என்றொரு அதிகாரி, தேவாரம் முறையாகப் பாடப்படுவதைக் கண்காணித்து வந்ததாகக் கூறுகிறது. 'தேவாரநாயகம்' என்னும் சொல்லின் உண்மையான பொருள் என்ன என்பதற்குக் கருத்து வேற்றுமைகள் உள்ளன. மன்னனுடைய அரண்மனையில் தேவாரம் பாடுபவர்களைக் கண்காணிப்பது தேவார நாயகத்தின் பணியாகும் என்று சிலரும்,

கோவில்களில் திருப்பதியம் ஓதுவதைக் கண்காணிப்பவர்களைக் குறிப்பிடுகிறது என்று சிலரும் கூறுகின்றனர். அப்பருடைய பாடல்கள் முதலில் வழிபாட்டிற்கு மேற்கொள்ளப்பட்டு அவைகளுக்குத் தேவாரம் என்ற வழக்கு ஏற்பட்டுப் பின்னர் மூவர் பாடியவைகளுக்கும் அதுவே பெயராக அமைந்தது என்று ஒரு சாரார் கூறுகின்றனர். தேவாரம் என்ற பெயர் இரட்டைப் புலவர்கள் (1321) காலத்தில் தான், மூவர் பாடியவைகளுக்கு வழங்கியது என்று தெரிகிறது. தேவாரம் என்ற சொல் வழிபாடு என்ற பொருளிலேயே கூறப்பட்டு வந்ததைக் கல்வெட்டுகளினால் அறியலாம். "தேவார தேவராக", "தேவாரத்திற்குத் திருப்பதியம் பாடும், விண்ணப்பஞ் செய்யும்; பெருமானைத் தேவாரஞ் செய்து' என்றதொடர்கள் வழிபாடு என்ற பொருளிலேயே கையாளப்பட்டிருக்கின்றன. பரகேசரி இராசேந்திர சோழனின் உய்யக்கொண்டான் திருமலைக் கல்வெட்டு ஆதித்தன் குற்றி என்பவன், திருச்சிற்றம்பலத்துத் தேவாரத்தைச் சார்ந்தவன் என்று குறிப்பிடுகிறது. இதை நோக்குங்கால் 'தேவாரக் கல்லூரி' என்ற சொல், கோவிலின் ஒரு பகுதியைக் குறிப்பிடுவதாகத் தோன்றுகிறது.

ஆகவே எட்டாம் நூற்றாண்டு, பத்தாம் நூற்றாண்டு, பதினோராம் நூற்றாண்டுகளில் தேவாரப் பதிகங்கள் ஓதப்பட்டு வந்தன என்பதை நோக்குங்கால், நம்பியாண்டாரின் காலத்திற்கு முன்பே திருமுறையைப் போற்றுவோர் தொகை இருந்ததென்றும், அதுவேசேக்கிழார்காலத்திற்குப் பிறகு பெருகியது என்றும் உணரலாம். மேற்கூறிய கல்வெட்டுக்களினால் பெரும்பாலான சோழ மன்னர்கள் திருப்பதிகங்களை ஆதரித்தனர் என்றும், சோழ மண்டலம், தொண்டை மண்டலம், கொங்கு மண்டலங்களில் பதிகங்கள் பாடப்பட்டன என்றும் தெரியவருகின்றன. நாயன்மார்களின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளைக் கல்லிலும் சித்தரித்தனர் என்று தெரிகிறது. குறிப்பாகக் கொங்கு மண்டலக்கோயில்கள் பலவற்றில் முதலை விழுங்கிய பிள்ளையும், சுந்தரரின் திருவுருவமும் பொறிக்கப்பட்ட சிற்பங்கள் காணப்படுகின்றன.

## செய்திச் சுருக்கம்

ஸ்ரீஜகதாசார்ய ஸிம்மாசனாதிபதி — உபய வேதாந்த மகாவித்வான் — பிரதிவாதி
பயங்கரம் — ஸ்ரீமத் அண்ணங்கராசார்ய சுவாமிகள் அவர்கள், 9—3—69 முதல் 23—3—69
வரையில் வடநாட்டு யாத்திரை மேற்கொண்டு, பிருந்தாவனம் அரித்துவாரம் டெல்லி முதலிய
இடங்களுக்கு எழுந்தருளி, ஆங்காங்கே அரும்பெரும் விரிவுரைகள் நிகழ்த்தி, அனைவரையும்
மகிழ்வித்துப் பெருஞ்சிறப்புடன் தமிழகம் திரும்பியருளினார்கள். "திருப்பாவையின் சாரார்த்
தம்" "உபய வேதாந்த சாரம்" "ஸ்ரீராமாயண தத்துவம்" "வேத சம்ரட்சணம்" முதலிய
பல சிறந்த பொருள்களைப் பற்றிச் சுவாமிகள் விரிவுரைகள் ஆற்றினார்கள். சமஸ்கிருதத்
திலும் இந்தியிலும்கூட,சுவாமிகள் உபந்யாசங்கள் நிகழ்த்தினர்.டெல்லித் தமிழ்ச் சங்கத்தில்
"தமிழ் மொழியின் சிறப்பும் தொன்மையும்" என்பது பற்றிச் சுவாமிகள் அரியதோர்
விரிவுரை ஆற்றியமை, சிறப்பாகக் குறிப்பிடற்பாலது. 1916-ஆம் ஆண்டு முதல் இது
வரையில், 24 முறை சுவாமிகள் வடநாட்டு யாத்திரை செய்துள்ளமையும், ஆங்காங்கே
அவ்வப்போது பற்பல வைஷ்ணவச் சொல்மாரி பொழிந்துள்ளமையும், இதுகாறும் தமிழ்,
வட மொழி, தெலுங்கு, இந்தி ஆகிய மொழிகளில் எழுநூறுக்கு மேற்பட்ட நூல்கள் வெளி
யிட்டுள்ளமையும், பிறவும் பெரிதும் போற்றற்பாலனவாகும். வட நாட்டு யாத்திரைத் தலங்
கள் பற்றிய சுவாமிகளின் பயணக் குறிப்புக்கள், நமது 'திருக்கோயில்' இதழில்
வெளிவரும்.

—ஆசிரியர்.

12 JUL 1973